
கல்கி
* துறைக்கு
எழுத்தாளர்களுக்கு
ஜே!
* இரண்டாவது
தலைநகர்!
KALKI 22-5-83 ரு. 1.20



ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் மட்டுமே உடல் அரிப்பு மற்றும் எரிச்சலை நிறுத்து-கிறது உடனடியாக.

எப்போது வேர்க்குரு தாக்கினாலும் அதை முறியடிக்க உபயோகியுங்கள் **ஜான்ஸன்ஸ் பரிக்லி ஹீட் பவுடர். ஜான்ஸன்ஸ் பரிக்லி ஹீட் பவுடரில்** மட்டுமே நிருபணம் பெற்ற மருந்துக் கலவை அடங்கியுள்ளது. அது 3 வழிகளில் தீவிரமாக செயல் படுகிறது :


- ☐ பாக்டீரியா கிருமிகள் பெருகுவதைத் தடுக்கிறது.
- ☐ வியர்வையை உறிஞ்சுகிறது.
- ☐ உடல் அரிப்பு மற்றும் எரிச்சலுக்கு நிவாரணமளிக்கிறது உடனடியாக !





சந்தன
மணத்திலும்
கிடைக்கிறது

Johnson & Johnson



✖ முதல்வர் ஹெக்டே பேசுகிறார்

கனக புரா தீர்ப்பு!

இந்த இதழ் வெளியாகும் போது கனகபுரா தேர்தல் முடிவு வெளியாகியிருக்கும். மக்களின் தீர்ப்பு கட்டுரையாளரின் கணிப்புடன் ஒத்துப் போகிறதா பாருங்களேன்!



✖ ஓட்டுவேட்டையாடும் மத்திய அமைச்சர்கள் ஜாபர் ஷெரீப்பும் எஸ்.எம். கிருஷ்ணாவும்


- ''கனகபுரா''!
- கர்நாடக முதல்வரின் தலைவிதியை நிர்ணயிக்கப்போகும் தொகுதி. பெங்களூரிலிருந்து அறுபது மைல் தொலைவிலுள்ள இந்தக் கனகபுரா அப்படியொன்றும் வளர்ச்சியடைந்த நகரமல்ல. ஊருக்குள் சரியான தார் ரோடுகள் கிடையாது. மின்சார வசதியும் போதுமானதாக இல்லை. குடிநீர் வசதியைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்.
- கர்நாடக மாநிலத்தின் முக்கியமான மூன்று பட்டு உற்பத்திக் கேந்திரங்களில் கனகபுராவும் ஒன்று. சுற்றிலும் 170 கிராமங்களைக் கொண்ட இந்தக் கனகபுராவின் மொத்த வாக்காளர்கள் 86,000 பேர். இதில் சுமார் 37,000 வாக்காளர்கள் ஒக்கலிகா சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இதன் காரணமாக இந்திரா காங்கிரஸ் தன்னுடைய வேட்பாளரை ஒக்கலிகா இனத்தவராகத் தேர்ந்தெடுத்து நிறுத்தி வைத்திருக்கிறது.
- கடந்த முறை இந்திரா காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்ட வேட்பாளரான அப்பாஜி பெற்ற வாக்குகள் 27,500. ஜனதா வேட்பாளர் சிந்தியா பெற்ற வாக்குகள் 37,300. இந்தத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிந்தியா, கௌன்சில் தேர்தல் மூலம் சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு முதல்வர் ஹெக்டேவிற்காகத் தமது தொகுதியை விட்டுக் கொடுத்திருக்கிறார்.
- ஹெக்டேவைப் பொறுத்தவரை பெங்களூர் நகரப்புறப் பகுதியில் ஜெயநகர், மல்லேஸ்வரம், பசவன்குடி தொகுதிகளில் நிற்க வற்புறுத்தினாலும் நிச்சயமான வெற்றி என்ற உறுதி இருந்தாலும், இந்தத் தொகுதி அனைத்தும் கணிசமான பிராமண சமூகத்தினர் வசிக்கும் இடங்கள் என்பதால் தனக்குச் சாதகமான தொகுதியாக நின்று வெற்றி பெற்றார் என்ற பெயர் வந்துவிடக் கூடாதே என்பதற்காகவே புறநகர்ப் பகுதியாகப் பார்த்து நிற்கிறார்.
- 'ஜனதாவை ஆதரித்ததுதான் நான் செய்த பெரிய தவறு' என்று கூறும் பங்காரப்பா தம்முடைய பலத்தைத் தனித்துக் காட்டவேண்டும் என்பதற்காகத் தம்முடைய வேட்பாளராக சென்ன பசவ கௌடாவை நிறுத்தி வைத்திருக்கிறார். இங்குள்ள ஹரிஜனங்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்

இந்திய முஸ்லீம் லீக் வாக்குகள் நிச்சயம் தமது கட்சி வேட்பாளருக்குக் கிடைக்கு மென எதிர்பார்க்கிறார்.

- ராமகிருஷ்ண ஹெக்டே என்ன சொல்கிறார்?
  - தேர்முனைக் கட்சிகளுடைய மெஜாரிட்டியில் இன்றைய ஜனதா அரசு ஆட்சியில் அமர்ந்திருந்தாலும் ஒரு முறை ஏற்பட்ட குழப்பங்கள் மீண்டும் ஏற்படக்கூடாதென்பதில் மிக விழிப்புடன் இருக்கிறோம். பாரதிய ஜனதா, கம்யூனிஸ்டுகளின் ஒத்துழைப்பு நிரந்தரமாக இருக்குமென நம்புகிறோம்.
  - லஞ்ச ஊழல் சம்பந்தமாகவும் கட்சி தாவல் சம்பந்தமாகவும் இரு முக்கிய சட்டங்களை விரைவில் கொண்டு வர இருக்கிறோம். இவைகள் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக மட்டுமல்ல ஜனநாயகத்தில் நம்பிக்கைவைத்துள்ள கட்சிகள் அனைத்திற்கும் உதவும்.
  - தென் மாநில முதலமைச்சர்கள் சந்திப்பைப் பொறுத்தவரை பிரிவினைவாதத்திற்குச் சம்பந்தமே இல்லை. இங்கு மின்சாரம் தேவைப்பட்டது. அதற்காக என். டி. ஆரைச் சந்தித்தேன். எம். ஜி. ஆருக்குத் தண்ணீர் தேவைப்பட்டது. என்னை அணுகினார். இப்படி ஒருவருக்கொருவர் தங்களுக்குள்ளாகவே பொருளாதார—இயற்கை வளங்களை உதவிக் கொள்ள வழி செய்யும் வகையில் இந்தச் சந்திப்பை ஏற்படுத்தினேன். ஒவ்வொன்றிற்கும் மத்திய அரசை எதிர்பார்க்க வேண்டிய அவசியமென்ன? இதைக் கூட நம்மால் செய்துகொள்ள முடியவில்லை என்றால் அண்டை மாநிலம் என்று சொல்லிப் பெருமைப்படுவதில் என்ன நியாயம் இருக்கிறது?

ஹெக்டேவுக்கு வெற்றி வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படும் கனகபுரா தேர்தலின் முடிவு எதிர்பார்ப்பதைப் போல் அமையுமானால் இந்திய அரசியலில் ஜனதாவுக்கு மீண்டும் நல்ல ஒரு எதிர்காலம் இருக்கும். அதனை அவர்கள் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்வார்கள் என நம்புவோம்.

-கட்டுரை, புகைப்படங்கள்: அ. குமார்



துயரம்

வீட்டு வாசற் பக்கத்தில் எட்டிப் பார்த்தேன். எட்டு வயதுச் சிறுவன் புலம்பி அழுது கொண்டிருந்தான்.

விசாரித்துத் தெரிந்து கொண்ட விஷயம் இதுதான். பக்கத்துத் தெருவிலிருந்து எங்கள் தெருவிலுள்ள ரேஷன்கடைக்குச் சாமான்கள் வாங்க அவன் வந்திருக்கிறான். வரும் வழியில் ஓர் இளைஞன் அவனிடம் பேச்சுக் கொடுத்திருக்கிறான்.

''தம்பி! அந்த டெலிபோன் வயரில் காத்தாடி ஒன்னு மாட்டிக்கிட்டு இருக்கு பார்த்தியா. அது எனக்கு எட்டலை. உன்னைத் தூக்கிப் பிடிக்கிறேன். அதை எடேன்'' என்று இனிமையாகப் பேசி யிருக்கிறான். பையன் மண்ணெண்ணெய் கானைக் கீழே வைத்துவிட்டு கைகளை உயர்த்த, இளைஞன் அந்தச் சிறுவனைத் தூக்கிக் காத்தாடியை எட்ட முயற்று அது எட்டாத நிலையில் பையனைக் கீழே விட்டு விட்டு ''தம்பி!... பக்கத்திலே போய் ஒரு கம்பி எடுத்துட்டு வந்து பார்த்துக்கறேன். நீ போ!'' என்று சொல்லிவிட்டு பக்கத்துச் சந்து வழியாக விடுவிடென்று நடந்து விட்டான்.

ரேஷன் கடையை அடைந்த பையன், பணம் இருந்த சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். பை இருந்தது. பணம் இல்லை. அலறினான். காத்தாடி எடுக்கத் தூக்கி விட்ட நபர் கையோடு பையில் விரலை விட்டு அங்கிருந்த நோட்டுக்களை அடித்துக் கொண்டு காற்றாய்ப் பறந்து விட்டானே!

கோபம்

''நீ கடன் கேட்டுப்பார்.
நான் கொடுக்க மறுப்பேன்.
உனக்குக் கோபம் வரும்.
நான் கடன் கொடுப்பேன்.
அதை நீ திருப்பிக் கொடுக்க மாட்டாய்.
எனக்குக் கோபம் வரும்.
யோசித்துப் பார்க்கையில்
உனக்குக் கோபம் வருவதே
உசிதம் என்று தோன்றுகிறது.


-இப்படி ஓர் அறிவிப்பை ஆங்கிலத்தில் ஒரு கடையில் பார்த்தேன். இதை எழுதியவர் 'கன்பியூஷியஸ்'.

மகிழ்ச்சி

''மகிழ்ச்சி என்பது ஒரு விசித்திரமான கணக்கு. அதை வகுக்க வகுக்க அது பெருகிக் கொண்டே போகும்.''

இந்த வாசகம் ஒரு கிறிஸ்துவ தேவாலயத்தில் எழுதி வைக்கப்பட்டிருந்தது.

-பட்டினத்தார்



திண்டுக்கல் தலைவலிகள்

திண்டுக்கல் நிலவரம் பற்றி எழுதுகிறார் அவ்வூர் வாசி. உங்கள் நகரத்தின் பிரச்னைகள் என்ன? இதேபோல் நகைச்சுவைஇழையோட எழுத முடியுமா பாருங்களேன்!

திண்டுக்கல் – பழைய சரித்திரங்களில் மட்டுமல்ல, இன்றும் அகில இந்திய அளவில் வர்த்தகத் துறையிலும், அரசியல் துறையிலும் பிரசித்தி பெற்ற நகரம். அரசியலிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி இன்றைய தமிழக ஆளும் கட்சிக்கு வலுவான அடிப்படையை உருவாக்கித் தந்து அதன் அரசியல் வாழ்விற்குப் பிள்ளையார் சுழி போட்டு, ஆட்சி பீடத்தைப் பிடிக்க உதவிய நகரம் திண்டுக்கல்.

ஆனால் தமிழக அரசோ 1977ல் இருந்து இன்றுவரை இந்நகரத்திற்கு எந்த ஒரு பெரிய திட்டத்தையும் நிறைவேற்றவில்லை. அ. தி. 'அ. தி. மு. க. அரசியல் வானில் சுடர் விட்டுப் பிரகாசிக்கச் செய்த மக்களே உங்களை நாங்கள் மறக்க மாட்டோம்' என்று மேடைகளில் அமைச்சர்கள் முழங்குவதோடு சரி. இந்நகரின் தீர்க்கப்படாத ஜீவாதாரப் பிரச்னைகள் தீர்க்கப்படாமல்தான் இன்றும் இருந்து வருகின்றன.

திண்டுக்கல் விரைவில் தனி மாவட்டமாக மாறும், திண்டுக்கல்லுக்குப் பல கோடி செலவில் தோல் தொழிற்பேட்டை.... என தினசரி நாளேடுகளில் திண்டுக்கல் பற்றிய செய்திகள் வெளிவருவதோடு சரி. நகரம் ஒரு முன்னேற்றத்தையும் அடையவில்லை.

இந்நகரின் முக்கிய பிரச்னைகள் ஏராளமாக இருந்தாலும் ஒருசிலவற்றைக் காண்போம்.

குடிநீர்ப் பிரச்னை

திண்டுக்கல்லில் மட்டும்தானா? ஊருக்கு ஊர் இந்தப் பிரச்னை இருக்கிறதே என்று நினைக்கலாம். உண்மை. பருவ மழை பொய்த்த காரணத்தால் இன்று தமிழகம் முழுதும் குடிநீர்ப் பிரச்னை நிலவுகிறது. ஆனால் திண்டுக்கல் லிலோ, பருவ மழை பெய்தாலும், பொய்த்தாலும் இது ஒரு நிரந்தரப் பிரச்னை. ஒவ்வொரு ஆண்டும் மக்களை வாட்டி வதைக்கும் ஜீவாதாரப் பிரச்னை. சென்னையில் வாரம் இருமுறை தண்ணீர் என்றால், வரிந்து கட்டிக் கொண்டு எழுதும் பத்திரிகைகள், திண்டுக்கல்லுக்கு வந்து பார்க்க வேண்டும்.

எந்த ஆண்டும், எல்லா மாதங்களிலுமே இங்கு வாரம் இரு முறைதான் அதிகபட்ச குடிநீர் சப்ளை. இந்த வருடப் கேட்கவா வேண்டும்? 8 தினங்களுக்கு ஒரு முறைதான் குடிநீர் சப்ளை நடைபெறுகிறது. இதற்கு என்ன காரணம்? 1962ல் இந்நகரின் குடிநீர் சப்ளைக்காகக் கட்டப்பட்ட ஆத்தூர் காமராஜ் சாகர் நீர்த் தேக்கம் வளர்ந்து வரும் (மக்கள் தொகையில்!) இந்நகரத்திற்குப் போதுமானதாக இல்லை.

போதாக் குறைக்குப் பொன்னியும் வந்தாளாம் என்பது போல் ஆத்தூர் அணைக் கட்டிற்குள் வரும் நீருக்கும் கோர்ட்டில் வழக்கு. விவசாயிகளுக்கா – குடிநீருக்கா என்ற பிரச்னை. முன் காலத்தில் 'செக்குக்கு மாடு கொடுத்தாலும் திண்டுக்கல்லுக்குப் பெண் கொடுக்காதே' என்று இருந்த சொல் வழக்கு இன்று மீண்டும் உண்மையாகி வருகிறது.

பெண் பயில்வான்கள்!

திண்டுக்கல்வாசிக்கு மனைவியாக வேண்டும் என்றால் பெண்ணிற்கு அசாத்திய உடல் வலிமை வேண்டும். நாள் முழுவதும் அன்றாட வேலைகளில் உழன்று விட்டு இரவு 10-30 மணிக்கு குடும்பத் தலைவிகள் படுக்கச் செல்வார்கள். நடுநிசியில் ஒரு குரல். ''யக்கா தண்ணீர் வருது'' என்று கேட்கும். அவ்வளவுதான்! அவசரமாக ஓடிக் குழாய்க்கு முன் காணப்படும் நீண்ட கியூக்களில் இடம் பிடித்துத் தங்களுக்கு வரும் நேரத்தில் கை போரிங்கில் கை நோக பம்ப் செய்து, வீட்டில் உள்ள செம்பிலிருந்து, பாத்திரங்கள் வரை போராடிக் குடிநீர் பிடித்துப் படுக்க



காலை 5 மணியாகி விடும். மீண்டும் அப்படியே அடுத்த நாள் வேலைகள். *வாரம் ஒரு முறையே குடிநீர் வருவதால் குடிநீருக்குப் படும்பாடு சொல்லில் அடங்காது.

கனவுக் குளியல்

தினசரி குளிப்பது என்பது திண்டுக்கல் வாசிகளுக்குக் கனவில்தான். பல ஆண்டுகளாக அதை மறந்து போய்விட்டனர். குடிக்கவே நீரில்லை. – குளிக்க எங்கே போவது?

நடுநிசியில் நீர் பிடிக்கும் இந்த அவல நிலையைப் போக்க வழியுண்டா? நிச்சயமாக உண்டு. திண்டுக்கல்லுக்கு மாற்றுத் திட்டம் மூலம் வைகை அணையிலிருந்து குடிநீர் கொண்டு வரலாம். இது சிறப்பான திட்டம்.

வைகை ஆற்று நீர்

திண்டுக்கல்லிலிருந்து 36 கி.மீ. தூரத்தில் நிலக்கோட்டை அருகே உள்ளது அணைப்பட்டி சிற்றணை – பேரணை. வைகை ஆற்றுப் படுகையில் உள்ள இந்தச் சிறிய அணையிலிருந்து திருமங்கலம், மேலூர்ப் பகுதிகளுக்குப் பாசன வசதி அளிக்கப்படுகிறது. பல சிறிய ஆறுகள் இணைவதால் இந்தப் பகுதியில் எப்போதும் நீர் கிடைக்கும் வாய்ப்பு உண்டு.

இங்கிருந்து சுமார் 24 கி.மீ. தூரத்திற்கு குழாய் பதித்தால் செம்பட்டி அருகே இதனை இப்போது ஆத்தூரிலிருந்து குடிநீர் கொண்டு வரும் மெயின் பைப்புடன் இணைத்து விடலாம். அல்லது திண்டுக்கல்வரை 36 கி.மீ. தூரத்திற்கும் தனிப் பைப் லைன் போடலாம்.

அமைச்சரின் முயற்சிக்கு நன்றி

திண்டுக்கல் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்கப் பெரிதும் ஆர்வம் காட்டி வரும் தமிழக நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கா. இராஜா முகம்மதுவுக்கு நகர மக்கள் நன்றி கூற வேண்டும். இவரது முயற்சியின் பேரில் மேற்கூறிய திட்டத்துக்கான ஆய்வைக் குடிநீர் வடிகால் வாரியம் நடத்தி ரூ. 5 கோடி செலவாகும் என்று மதிப்பிட்டுள்ளது. இந்த அறிக்கையின் மீதான நடவடிக்கைகள் என்ன என்பது அன்னை அபிராமிக்குத்தான் தெரியும்.

ஆசிய விளையாட்டுப் போட்டி, உலகத் தமிழ் மகாநாடு என்று போட்டி போட்டுக் கொண்டு கோடிக் கணக்கான ரூபாய்களை வீணடிக்கும் மத்திய, மாநில அரசுகள் இந்நகரத் தாய்க்குலத்தின் வாழ்வுப் பிரச்னையைத் தீர்க்க உடனடியாக 5 கோடி செலவு செய்யக் கூடாதா? திண்டுக்கல் மக்களின் நீண்ட நாள் கனவாக இருந்து வரும் இத்திட்டத்தை மாநில அரசு உடனடியாக நிறைவேற்ற முன்வர வேண்டும். மத்திய அரசும் அதற்கு நிதி உதவி அளிக்க வேண்டும்.

மேற்கு மாம்பல வாசிகளுக்கு சவால்!

இந்நகரின் மற்றொரு முக்கிய பிரச்னை கொசுத் தொல்லை. என்னவோ மேற்கு மாம்பலத்திலும் கும்பகோணத்திலும்தான் பெரிய கொசுக்கள் இருப்பதாக மார் தட்டுபவர்களே! திண்டுக்கல் நகரவாசிகளாகிய நாங்கள் தோள் தட்டிச் சவாலுக்கு அழைக்கிறோம்! திண்டுக்கல் நகரின் கொசு உற்பத்தி தொழிற்சாலைகளாக விளங்கும் அரண்மனைக் குளத்துக் கொசுக்களுடன் போட்டி போட முடியுமா?

திண்டுக்கல் நகரின் மத்தியில் சுமார் 39 ஏக்கர் நிலப் பரப்பில் பரந்து கிடக்கும் இந்த அரண்மனைக் குளம் சாக்கடை நீரால் நிரம்பிக் கிடக்கிறது. இதிலுள்ள நீரால் 10 ஏக்கர் பாசன உரிமை பெற்றுள்ளது. 40 ஏக்கர் குளத்தின் பாசனப் பகுதி 10 ஏக்கர்! இந்தக் குளத்தின் உரிமை குறித்து கோர்ட்டில் வழக்குஉள்ளது. அரண்மனைக் குளம் முஸ்லிம்களின் ஜமாத்துக்குச்சொந்தம் என்று ஒரு புறமும், மறுபுறம் குளம் அரசுக்கு என்றும், குளத்து நீர் பாசனத்துக்கு உரிய நிலங்கள் ஜமாத்துக்கு என்றும் கூறப்படுகிறது.

யாருக்கு உரிமை?

யாருக்கு உரிமைப்பட்டது என்றாலும் சரி. நகரின் மத்தியில் 39 ஏக்கரில் துர்நாற்றத்தை நகர் முழுவதும் பரப்பிக் கொண்டு, கொசுக்களை உற்பத்தி செய்யும்தொழிற்சாலையாக இருந்து செயல்பட்டுக்கொண்டு இந்த நகரின் சுகாதார சீர்கேட்டை விளைவித்து வரும் அரண்மனைக் குளம் மூடப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் எவ்வித மாறுபட்ட கருத்தும் இருக்க முடியாது.

குளத்திற்கு உரியவர்கள் அரசானாலும் ஜமாத் ஆனாலும் பொதுமக்கள் நலன் கருதி அந்த அசுத்தக் குளத்தை நீர் வற்றிக் கிடக்கும் இந்த வறண்ட காலத்திலேயே மூடிவிட வேண்டும். தல்லாகுளத்தை மூடி மதுரையில் மாநகராட்சி அலுவலகம் எழுந்தது போல், இந்த அசுத்தக் குளத்தை மூடி மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தை ஏன் உருவாக்கக் கூடாது?

மேல்பாலம்


திண்டுக்கல் ரயில் நிலையத்தை ஒட்டி உள்ள இரயில்வே கேட் மீது மேல்பாலம் கட்ட வேண்டும் என்று பல ஆண்டுகளாகவே கோரிக்கை எழுப்பப்பட்டு வருகிறது. இரயில் நிலையத்தை அடுத்துஅமைந்திருக்கும்வளர்ந்து வரும் தொழிற்பேட்டைக்குச் சரக்குகளை ஏற்றி வரக் கொண்டு செல்ல காரைக்குடி சாலையில் மேம்பாலம் மிக அவசியம். இரயில் நிலையத்தை ஒட்டிய 'கேட்' என்பதால் அடிக்கடி மூடப்பட்டு வாகனங்கள் காத்துக் கிடக்கும் நிலை மாற இங்கு மேம்பாலம் கட்டப்படுவது எப்போதோ?

பிரச்னைகள்!


இது மட்டுமல்ல! மோசமான சாலைகள்! பாதாள சாக்கடைத் திட்டத்தின் அவசியம்! நகரின் மிகப் பெரிய மருத்துவ மனையை அடுத்துள்ள நகராட்சிக் குப்பைக் கிடங்கு, அரசு மருத்துவ மனைக்கு நோய்களைச் சப்ளை செய்யும் கோபால சமுத்திரத்தை (மருத்துவ மனையை அடுத்து உள்ளது) மூடுதல் போன்ற பலப் பலப் பிரச்னைகள்.

என்று தீருமோ எங்கள் ஊர் குறைகள்.

—ஜெயசந்திரன்



வன்முறைக் கிளர்ச்சிகள்
பேச்சு வார்த்தைகள்
பேச்சு வார்த்தைகள்
முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்



என்-டி-ஆர் திடீர்க் கடை
திடீர் வேலை வாய்ப்பு
திடீர் மனைப் பட்டா
திடீர்
திடீர்
திடீர்
திடீர்
திடீர்
திடீர்
திடீர்
வியாபாரிகள்
மக்கள்



கல்கி

1983 மே 22

ருத்ரோத்காரி வைகாசி 8

மலர் : 41 இதழ் : 43

பல்லவன், மாயத்தில் வல்லவன்

பஸ் நிலையத்துக்குப் பத்து கெஜம் முன்னதாக நிற்கும் என்று கணிப்போம்; பத்து கெஜம் அப்பால் போய் நிற்கும். சாலை ஓரம் நடைபாதை அருகே நிற்கும் என்று எதிர்பார்ப்போம்; நடுரோட்டில் நிற்கும். மிதமான வேகத்தில் செல்லும் என்று நினைப்போம்; அசுர வேகத்தில் ஓடும். திருப்பங்களில் அதன் வேகம் குறையாததாகையால் கை மேலேயுள்ள கம்பியைப் பிடித்துக் கொண்டிருக்க, உடல் ஜன்னலோரமாக வளைந்து நெளியும். மஸாஜ் பார்லராமே, பல்லவன் பயணிகளுக்கு அது எதற்கு? டார்ஜான் கொடிக் கயிற்றைப் பற்றிக்கொண்டு பாய்வது போல இவர்கள் உடம்பும் இடமும் வலமுமாக இழுத்து விடப்படும் போது உடம்பை யெல்லாம் பிடித்து விட்டது போலாகிவிடாதா! ஐஸோமெட்ரிக் எக்ஸர்ஸைஸ்ஸாமே, பல்லவன் பயணத்தை விடவா அது தேகத்துக்கு நலன் செய்யப் போகிறது? திடுமென ஒரு குலுங்குக் குலுங்கி நிற்கும்போது எதிரேயுள்ள பெண்மணி மீது இடித்துக்கொண்டு விடக் கூடாதே என்ற கவலையில் கம்பியை இன்னும் அழுந்தப் பற்ற, தோளில் பந்துக் கிண்ணமூட்டு கழன்று விடாதிருப்பதன் காரணம் பல்லவனின் மந்திர மாயமாகத்தான் இருக்க வேண்டும். ''இது சங்கப் பலகை மாதிரி; எத்தனை பேர் ஏறினாலும் இதில் இடமுண்டு'' என்று சொல்லிக் கொண்டிராமல், காரியாம்சத்தில் நிரூபித்துக் காட்டுகிறதே, பல்லவனின் இந்தப் புளி மூட்டைச் சாதனைக்கு ஈடு இணை ஏது? பஸ் நிலையத்துக்கு எதிராகச் சாலையை அடைத்துக் கொண்டு பல்லவன் நின்றுவிட்டால் பின்னால் வரும் கார் அல்லது ஸ்கூட்டர் ஓட்டி, 'அதை முந்திச் செல்வதா வேண்டாமா? முந்தும் கணத்தில் அதுவும் சீறிப் பாய்ந்து புறப்பட்டு, நம்மை மடக்கி, முட்டாளாக்காதிருக்குமா' என்றெல்லாம் யோசித்துக் கண்ணிமைக்கும் நேரத்தில் செயலாற்றவும் வேண்டும். எனவே பல்வேறு வாகன ஓட்டிகளின் மூளையைத் தீட்டிக் கூர்பார்ப்பதுடன் அவர்களைச் சுறுசுறுப்பாகவும் இயங்க வைத்துப் பெரும் புண்ணியத்தைக் கட்டிக் கொள்கிறது பல்லவன். 'சென்னைச் சாலைகள் இத்தனை அதிகமான போக்குவரத்துக்கு ஏற்பட்டவையல்ல' என்று யாரும் முணு முணுக்க முடியாது. எத்தனை குறுகலான சந்தானாலும் பல்லவன் ஒன்றை ஒன்று முந்திக்கொண்டு போகவில்லையா என்ன? மஞ்சள் கோட்டைக் கடக்கக் கூடாதென்று பல்லவனுக்குத் தெரியாதா? மற்றவர்கள் எப்படி நடந்து கொள்ளக் கூடாது என்று எடுத்துக் காட்டுவதற்காகத்தான் அது மஞ்சள் கோட்டை அவ்வப்போது கடந்து காண்பிக்கிறது.

இந்த அற்புத ஜாலங்களை யெல்லாம் தூக்கி அடிப்பதே போல், பல்லவன் பிரேக் இல்லாமலே ஓடும் என்பது அண்மைக் காலத்தில் தெரிய வந்திருக்கிறது! பிரேக் இல்லாமலே பல்லவனை நிறுத்தவும் முடியும் என்பதை மயிலாப்பூரிலும் சென்ட்ரலிலும் பஸ்களைச் சுவர்களில் இடித்து நிறுத்தி ஓட்டுனர்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள்! ஏதோ ஒரு சிலருக்குக் காயம் பட்டிருக்கலாம்; சிலர் ஆபத்தான நிலையிலும் இருக்கலாம். ஆனால் பிரேக் இன்றியே பஸ் ஓட்டுவது என்ற சாதனையுடன் ஒப்பிடும்போது இந்த இழப்புக்கள் எம்மாத்திரம்? யாக்கையின் நிலையாமை பற்றி பிரேக் இல்லாப் பல்லவனை விடச் சிறந்த விதமாக எந்தத் துறவி அருள்வாக்குப் புகல முடியும்?

பல்லவனைவிடச் சிறந்த பஸ் போக்குவரத்து உலகில் பல இருக்கலாம். ஆனால் அவை பற்றிப் பேசுவது முட்டாள்தனமல்லவா? பம்பாய் பற்றிப் பேசுங்கள், அதை விடவும் கல்கத்தா பற்றிக் குறைப் படுவது நல்லது. இந்த விதியை மீறினால் பல்லவனே விளம்பரப்படுத்தும் நிர்மா சலவைத் தூளினால் நாமே நமது மூளையைச் சலவை செய்து கொள்ள வேண்டியதுதான்!

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

நியாயங்கள்!

இந்திரா பார்த்தசாரதி

யானுஷ் வால்டனை நான் சந்தித்தது ஒரு கல்யாணத்தில். என் மாணவி ஒருத்தியினுடைய சகோதரனுக்கு வர்ஷாவா பக்கத்தில் ஒரு கிராமத்தில் நடந்த திருமணம் அது. · வர்ஷாவில்தான் சர்ச், ஸிவில் சடங்குகள் நடந்தன. விருந்து கிராமத்தில்.

விருந்து என்றால், மதியச் சாப்பாடு என்றோ, இரவுச் சாப்பாடு என்றோ வரையறை கிடையாது. பிற்பகல் 3 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட மேஜைகளில் வைக்கப்படும் உணவோ வோட்காவோ அடுத்த நாள் காலை வரை அள்ள அள்ளவோ, குடிக்கக் குடிக்கவோ குறையாமல் வளர்ந்து கொண்டே இருக்கும். பக்கத்து ஹாலில் பாட்டும் நடனமும் தொடர்ந்து நிகழும். குடிப்பதற்கும், சாப்பிடுவதற்கும் இடைவேளை நடனமாடுவதற்குத்தான்.

நான் மாலை ஆறு மணிக்கு என் மாணவியிடம் ''போய் வருகிறேன்'' என்று சொன்ன போது, அவள் என்னிடம் கூறினாள்: ''நீங்கள் இப்பொழுது போனால் விருந்துக்குச் செய்யும் அவமரியாதையாக நினைப்பார்கள்.''

''அப்படியானால் எத்தனை மணிக்குப் போவது நல்லது?''

''நாளைக் காலை.''

என் தலை சுற்றியது. ''அதுவரை நான் என்ன செய்வது?''

''மற்றவர்கள் செய்வதைச் செய்ய வேண்டும்.''

''ஸ்லாவ் மக்களுக்கு இருக்கக் கூடிய உடல் தெம்பு எனக்குக் கிடையாது.''

அவள் சிரித்துக் கொண்டே சொன்னாள்: ''வாருங்கள். ஒரு சுவாரஸ்யமான மனிதருக்கு உங்களை அறிமுகப்படுத்துகிறேன்.''

அப்பொழுதுதான் யானுஷ் வால்டனைச் சந்தித்தேன்.

அறுபது வயதிருக்கலாம் என்ற என் முதல் ஊகம் தப்பாய்ப் போயிற்று. எழுபத்தைந்து வயது என்று பிறகுதான் தெரிய வந்தது. தலையில் மயிர் இருந்தது என்பதற்கு அடையாளமே கிடையாது. ஆரோக்கியம், சிரிப்பிலும், தேகக் கட்டிலும் தெரிந்தது. அவர் கை குலுக்கியபோது என் கை வலித்தது.

என் மாணவி என்னை அறிமுகப்படுத்தியதோடு மட்டுமில்லாமல், நான் ஸ்லாவ் மக்களைப் பற்றிக் கூறியதையும் அவரிடம் சொன்னாள்.

அவர் பெரிதாகச் சிரித்துக் கொண்டே சொன்னார்: ''தெம்பு என்பது உடம்பைப் பொறுத்த விஷயமல்ல; மனத்தையும் பொறுத்தது. அதோ பாருங்கள், அந்தப் பெண்ணை, உல்லாசமாக நடனமாடிக்கொண்டிருக்கிறாளே, அவள் ஒரு வருஷத்துக்கு முன்னால், இதே சமயத்தில் தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்தாள்.''

''உரிய வேளையில் வீட்டுக்குப்போக விரும்புவதும், தற்கொலை செய்து கொள்ள முயல்வதும் ஒன்று என எனக்குத் தெரியாது.''

அவர் புன்னகை செய்தார். பிறகு என் தோளைத் தட்டிக் கொண்டே சொன்னார்: ''மனத் தெம்பில்லாதவர்கள்தான் கலபமாகச் சலிப்படைந்து விடுவார்கள். நீங்கள் இப்பொழுது வீட்டுக்குப் போக விரும்புவதற்குக் காரணம் என்ன? உங்களுக்கு 'போர'டிக்கிறது, அவ்வளவுதானே? என்னுடன் வாருங்கள். உங்களுக்கு 'போர்' அடிக்காமல் பார்த்துக் கொள்கிறேன்.''

''அந்தப் பெண் ஏன் தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்தாள்?''

''அந்தப் பெண் ஏன் இப்பொழுது சந்தோஷமாக இருக்கிறாள்? மகிழ்ச்சி ஏற்படும்போது, நாம் இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொள்வதில்லை. மகிழ்ச்சியாக இருக்கத் தெரிந்திருக்கிறது. சோகம் ஏற்படும்போது நமக்கு நாமே இந்தக் கேள்வியை அடிக்கடி கேட்டுக் கொள்ளும் விளைவாகத்தான் ஏதேதோ செய்யத் தோன்றுகிறது. எல்லாருக்கும் மகிழ்ச்சியாக இருக்கக் கற்றுத் தருவதுதான் என் வேலை....''

பிறகுதான் அவரைப் பற்றித் தெரிந்து கொண்டேன். மன நோய்க்குச் சிகிச்சை பெற்றுக் குணம்டைந்தவர்களுக்கென்று ஒரு புனரமைப்புக் கூடம் நடத்தி வருகிறு





றென்று. பாட்டு, நடனம், நாடகம் ஆகியவை எல்லாம் அங்கு உண்டு. ஃபுட்பால், டென்னிஸ் டேபிள் டென்னிஸ் போன்ற விளையாட்டுக்கள் வேறு. இதற்கு அவர் 'புனரமைப்புக் கூடம்' என்று பெயரிடவில்லை. 'படைப்புக் கூடம்' என்றுதான் இதை அவர் குறிப்பிடுவது வழக்கம்.

யானுஷ் ஒரு மிகச் சிறந்த பாடகர். மரபு இசை, ஜாஸ் போன்றவைகளில் நல்ல பயிற்சி. தனிப்பட்ட முறையில் அவருக்கு 'பாப் இசை' பிடிக்கா விட்டாலும் அவர் நடத்தி வந்த கூடத்தில் அதில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு மிகுந்த ஆதரவு அளித்துவந்தார். அவர் இரண்டாம் உலகப் போருக்கு முன்பு வியன்னாவில் இசை கற்றுப் பட்டம் வாங்கியவர். வியன்னாவிலிருந்தபோது, ஃப்ராய்டின் சிஷ்யப் பரம்பரையைச் சேர்ந்த சில மனோ தத்துவ அறிஞர்களோடு நெருங்கிய தொடர்பு உண்டு. அவர்கள் அனைவரும் ஆஷ்விச்சில், ஹிட்லரின் 'மரண முகா'மில் இறந்து போனதைப் பற்றி அவர் என்னிடம் சொல்லி யிருக்கிறார். உலகப் போருக்குப் பிறகு ஃபிரான்ஸிலும், அமெரிக்காவிலும் சில ஆண்டுகள் அவர் இருந்திருக்கிறார். இருந்தாலும் போலந்தைத் தவிர, வேறு எந்த நாட்டிலும் அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை.

அவர் ஆஷ்விச்சில் இருந்தும், உயிரோடு தப்பியது ஒரு எதேச்சையான சம்பவம். அவர் மனைவி அங்கு இறந்து போனாள். அவருடைய மூன்று வயது மகளுக்கு என்ன ஆயிற்று என்று ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் அவரிடம் சொல்லவே யில்லை. அவளையும் அவர்கள் கொன்றிருப்பார்கள் என்பது அவருடைய ஊகம். ஆஷ்விச் அனுபவங்களைப் பற்றிப் புத்தகம் எழுதித் தரும்படி பலர் அவரைக் கேட்டிருக்கிறார்கள். அவர் மறுத்து விட்டார்.

''ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் சரித்திரத்தின் சதியினாலோ அல்லது முன்கூட்டியே வரையறுக்கப்பட்ட விதியின் தத்துவத்தாலோ ஒரு நாடுமுழுவதுமே ஒரு தனி மனிதனின் கவர்ச்சிக்கு அடிமையாகிப் பைத்தியம் பிடித்து அலைந்ததென்றால் இதற்கு யாரைக் குற்றம் சொல்வது? ஹிரோஷிமா, நாகசாக்கி, ஹங்கேரி, செக்கோஸ்லோவேகியா, வியட்நாம், எல்சால்வடோர் ஆகியவை இன்னும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டுதானே இருக்கின்றன. சரித்திரம் நமக்கு வாத்தியார் என்பதெல்லாம் வெறும் கதை. நான் ஒரு புத்தகம் எழுதி ஒரு கூட்டத்துக்குப் பாடம் கற்றுத் தருவதைக் காட்டிலும் தனி மனிதனுக்கு உதவி செய்ய முடியுமா என்பதுதான் என் முதல் அக்கறை

என்று அவர் தாம் புத்தகம் எழுத மறுத்து விட்டதற்கான காரணத்தையும் என்னிடம் ஒரு சமயம் சொன்னார்.

முதல் தடவையாக அவருடன் அவருடைய 'படைப்புக் கூட'த்துக்குச் சென்ற அனுபவம் இன்னும் பசுமையாக நினைவில் இருக்கிறது.

சிலர் 'செஸ்' விளையாடிக் கொண்டிருந்தனர்; சிலர் புத்தகத்தில் ஆழ்ந்திருந்தனர். 'கிட்டார்' வாசித்துக் கொண்டிருந்த சில இளைஞர்களைச் சுற்றி ஒரு சிறு கூட்டம்... யானுஷ் என்னை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

சிறிது நேரம் 'டேபிள்-டென்னிஸ்' விளையாடிய பிறகு நான் அங்கிருந்த பத்திரிகைகளைப் புரட்டியவாறு ஜன்னலருகே இருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன்.

ஒரு வயதானவர் என்னருகே வந்து உட்கார்ந்து என்னைப் பார்த்துப் புன்னகை செய்தார். நானும் பதிலுக்குப் புன்னகை செய்தேன்.

''நீங்கள் இந்தியரா?''

''ஆமாம்...''

''இந்தியா முழுவதும் காடுகள் என்கிறார்களே?'' இந்தியப் பத்திரிகைகளில் வரும் செய்திகளைப் படித்துவிட்டு அவர் அவ்வாறு கூறுகிறாரா அல்லது இதுதான் அவருடைய பூகோள அறிவா என்று எனக்கு விளங்கவில்லை.

''இந்தியா முழுவதும் இல்லை. பல பகுதிகளில் காடுகள் இருக்கின்றன.''

''நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள்? காட்டுப் பகுதியிலா அல்லது....''

''டெல்லி... அது காட்டுப் பகுதியா, நகரமா என்று நிச்சயம் சொல்வதற்கில்லை.''

''எனக்குக் காடுகள் என்றால் மிகவும் பிடிக்கும். நான் போலந்தின் வடகிழக்குப் பகுதியைச் சேர்ந்தவன். மசூரே... அங்கு காடுகள் அதிகம். நீங்கள் போயிருக்கிறீர்களா?''

''இல்லை...''

'என்ன பரிதாபத்துக்குரிய மனிதன்' என்பது போல் அவர் என்னைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்துவிட்டுப் போய் விட்டார்.

இன்னும் கொஞ்ச நேரத்துக்குப் பிறகு ஒரு நடு வயதுக்காரர் வந்தார். சிகரெட் பாக்கெட்டை என்னிடம் நீட்டினார்.

''நான் சிகரெட் குடிப்பதில்லை.''

''நீங்கள் ஏன் பசுவைச் சாப்பிட மறுக்கிறீர்கள்?''

''நானா?''

''நீங்களில்லை. பொதுவாக இந்தியர்கள்.''

''நானும் சாப்பிடுவதில்லை. பொதுவாக நான் மாமிசமே சாப்பிடுவதில்லை. இந்தியர்களில் ஹிந்துக்கள் பசு சாப்பிடுவதில்லை.''

''ஏன்?''

''பசு நம்மைச் சாப்பிடுகின்றதா? நாம் மட்டும் பசுவை ஏன் சாப்பிட வேண்டும்?''

அவர் யோசனை செய்து கொண்டே சிகரெட்டைப் பற்ற வைத்தார். சிறிது நேரம் கழித்துச் சொன்னார்: ''இதில் ஒரு பிரச்னை, நம்மைச் சாப்பிடும் மிருகங்களைத்தான் நாம் சாப்பிட வேண்டும் என்றால், சிங்கம், புலி, கரடி ஆகியவற்றைத்தான் நாம் சாப்பிட இயலும். இது சாத்தியமா?....''

''கொஞ்சம் கஷ்டம்தான்...''

''முள்ளம் பன்றி... முடியவே முடியாது.''

''முட்களை எடுத்து விட்டால் பன்றி மிஞ்சுமா என்பது சந்தேகம்தான்.''

அவர் கண்களை மூடிக் கொண்டு இந்தப் பிரச்னையைப் பற்றித் தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருக்கும்போது நான் எழுந்து யானுஷ் இருந்த அறைக்குச் சென்று விட்டேன்.

யானுஷ் ஏதோ ஒரு ஃபைலைப் புரட்டிக் கொண்டிருந்தார். என்னைப் பார்த்ததும் புன்னகை செய்தார்.

''எப்படி இருக்கிறது இந்த இடம்?''

''எல்லாரும் குணமானவர்களா?''

''எது குணம் என்று நாம் நிர்ணயிப்பதைப் பொறுத்த விஷயம். அவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். தேவையான அளவுக்கு உலகத்தோடு அவர்களால் அனுசரித்துப் போக முடிகிறது.''

''தேவையான அளவுக்கு அனுசரித்துக் கொண்டு போனால் போதுமென்ற மன

இந்திய அணிக்கு எதிராக ஐந்தாவது டெஸ்டில் மிகப் பொறுப்புடன் ஆடி அவுட் ஆகாமல் 154 ரன் எடுத்திருந்த மேற்கிந்திய ஆட்டக்காரர் கிரீனிட்ஜ் எந்தச் சூழ்நிலையில் இப்படி ஆடினார் என்பதை அறிந்தால் கல் மனமும் கரைந்துவிடும். அவரது இரு வயதுப் பெண் குழந்தை மிக ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுச் சுயநினைவு இல்லாமல் படுத்துக் கிடப்பதாகத் தகவல் கிடைத்த அன்று இரவு அவர் தூங்கவே இல்லை. ஏற்கனவே இந்தத் தொடரை மேற்கிந்திய அணி வென்றிருந்தாலும் தனது குழந்தை ஆபத்தான நிலையில் இருந்தும் அவர் கடைசி டெஸ்டை ஏனோ தானோ என்று விளையாடாமல் தான் மேற்கொண்ட பொறுப்பைக் கவனமாக முடிக்கவேண்டும் என்ற உறுதியுடன் ஆடியிருக்கிறார்.

—வசந்தகுமார்



உறுதி இருந்தால் போதும். வாழ்க்கையின் வெற்றி எதுவென்று தெரியாமல், எத்தனை விஷயங்களைத் துரத்திக் கொண்டு நம்மை நாமே சமரஸப் படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது?''

''நீங்கள் சொல்வது நான் சொல்வதற்கு விமர்சனம்'' என்று கூறிவிட்டு அவருக்கென்றே அமைந்த முறையில் லேசாகக் கண்ணடித்தார் யானுஷ் வால்டன்.

எனக்கும் வால்டனுக்கும் இடையே ஏற்பட்ட நட்பு, என் இந்திய நண்பர்களுக்கு விவாதத்துக்கு உரிய விஷயமாக இருந்தது.

''அவரே சிகிச்சை பெற்றுக் குணமடைந்தவராக இருக்க வேண்டும்'' என்றார் ஒருவர்.

''குணமடைந்தாரா என்பது சந்தேகத்துக்குரிய விஷயம்'' என்றார் இன்னொருவர்.

''நீங்கள் இருவரும் நண்பர்கள் என்பதைப் பற்றி நான் ஆச்சரியப்படவில்லை'' என்றார்கள் இருவரும் சேர்ந்து.

வால்டனைப் பற்றி இந்த மாதிரி அபிப்பிராயம் உண்டாவதற்குக் காரணமும் இருந்தது. அதைப் பற்றியும் நான் சொல்ல வேண்டும்.

ஒரு சமயம் என் இந்திய நண்பர்களை என் வீட்டுக்கு அழைத்திருந்தேன். வால்டன், இந்தியர்களைச் சந்திக்க வேண்டும் என்ற விருப்பம் தெரிவித்திருந்ததால் அவரையும் கூப்பிட்டிருந்தேன்.

அறிமுகங்கள் ஆன பிறகு யானுஷ் கேட்டார்: ''எங்கள் நாட்டில் ராணுவ ஆட்சி நடக்கும்படியான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''

''ஒரு பிரச்னையும் இல்லை. நாங்கள் தூதுவரகத்தில் பணியாற்றுவதால், எங்களுக்கு எல்லாம் கிடைக்கின்றன.... அரிசி, கோதுமை, இறைச்சி, குடி வகைகள்... வேறென்ன வேண்டும் எங்களுக்கு?''

''வேறு எதுவுமே வேண்டாமா?''

''அப்கோர்ன், பருப்பு வகைகள், காரப் பொருள்கள்... மசாலாப் பொடி... இவை எப்பொழுதுமே வார்ஸாவில் கிடைப்பதில்லை. பெர்லினுக்குப் போனால் தாராளமாய்க் கிடைக்கும். பெர்லினுக்குப் போவது பற்றி எங்களுக்கு ஒரு பிரச்னையும் இல்லை.''

யானுஷ் அதற்குப் பிறகு அவர்களிடம் பேசவேயில்லை. அவர்கள் எது கேட்டாலும் ''தெரியாது'' என்று பதில் சொன்னார்.

''எங்களோடு ஏன் பேச மறுக்கிறீர்கள்?''

''என்ன பேசுவதற்கு இருக்கிறது? உங்களோடு உரையாடல் சாத்தியமாக இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை.''

அவர்கள் போன பிறகு யானுஷ் கேட்டார்: ''இவர்கள் உங்கள் நண்பர்களா?''

''ஆமாம். இவர்களிடம் ஒரு தப்பும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இவர்கள் இந்தியர்கள் என்பதைக் காட்டிலும் சராசரி மனிதர்கள் என்றுதான் சொல்ல வேண்டும்... போலந்திலும் நிறையச் சராசரி மனிதர்கள் உண்டு.''

''உங்கள் நாட்டுப் பற்றைப் பாராட்டுகிறேன்.''



குழந்தை தாயைப் பார்த்துக் கேட்டது:

''அம்மா நான் எப்படி வந்தேன்?''

தாய் தகப்பனைப் பார்த்தாள்; தகப்பன் தாயைப் பார்த்தான். அவன் தாய் தன் கணவனைப் பார்த்தாள்; எல்லோரும் வானத்தைப் பார்த்தார்கள். இறைவன் அங்கிருந்து பதில் சொன்னான்:

''எப்படி வந்தோம் என்று உங்கள் எல்லோருக்குமே தெரிகிறது. இதற்குப் பதில் தெரியாதவன் நான் ஒருவனே!''

—கவிஞர் கண்ணதாசன் எழுதிய குட்டிக் கதைகள் என்ற நூலிலிருந்து

தகவல்: எஸ். முகம்மது யூசுப்

''இது நாட்டுப் பற்றல்ல... யதார்த்தப் பார்வை.''

யானுஷ் வால்டனிடம், என் இந்திய நண்பர்கள் அவரைப் பற்றிக் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைச் சொன்னபோது, அவர் சிரித்துக் கொண்டே கூறினார்: ''படைப்புக் கூடத்தைச் சேர்ந்த பெண் ஒரு சமயம் கேட்டாள்: ''படைப்புக் கூடத்தைச் சேராத மற்றவர்கள் ஏன் நார்மலாக இல்லை? இதுதான் என் நினைவுக்கு வருகிறது.''

''என்னைப்பற்றிக்கூடவா இந்தக்கருத்து?''

''நீங்கள் நார்மலாக ஆவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன, என்பது அவர்களுடைய அபிப்பிராயம்.''

வால்டனைப் பற்றி நான் இதுவரை இவ்வளவு கூறியதால் உங்களுக்கு அவரைப் பற்றி ஒரு மனச்சித்திரம் உருவாகியிருக்கும். 'தன்னம்பிக்கை உள்ளவர்; நகைச்சுவை மிகுந்தவர்; வாழ்க்கைச் சவால்களைப் புன்னகையுடன் சந்திக்கக் கூடிய திறன் மிக்கவர் ....அப்படித்தானே?

மனித சுபாவத்தை வரையறுத்து ஃப்ரேம் போட்டு மாட்டிவிட முடியாது. இதே வால்டன் என்ன செய்தார் தெரியுமா? என்ன செய்தார் என்பதை விட அவருக்கு என்ன நடந்தது என்று சொல்ல வேண்டும்.

சொல்லுகிறேன். எனக்கு ஒரு நாள் விடியற்காலை ஐந்து மணிக்கு ஃபோன் வந்தது. வால்டன் வீட்டிலிருந்து ஒரு பெண் பேசினாள்: ''உடனே புறப்பட்டு வாருங்கள்.''

''ஏன்?''

''யானுஷ் வால்டன் உங்களைப் பார்க்க விரும்புகிறார்.''

''அவருக்கு என்ன ஆயிற்று? அவர் ஏன் பேசவில்லை?''

''புறப்பட்டு வாருங்கள், தெரியும்.''

போனேன்.

யானுஷ் கட்டிலில் படுத்திருந்தார். திடீரென்று பத்து வயது கூடிவிட்டாற் போலிருந்தது. என்னைப் பார்த்ததும் புன்னகை செய்தார், விரக்திப் புன்னகை... இவருக்கு என்ன உடம்பு?

அவரருகில் ஒரு பெண்மணி உட்கார்ந்திருந்தாள். நாற்பதோ அல்லது இன்னும் கூடவோ இருக்கலாம். அவளை நான் அதுவரை பார்த்ததே இல்லை. படைப்புக் கூடத்தைச் சேர்ந்த பெண் என்றும் தோன்றவில்லை. அவள் என்னுடன் பேசும்போது உடைந்த ஆங்கிலத்தில்தான் பேசினாள். நான் பதிலுக்குப் போலிஷில் பேச முற்பட்டபோது அவர் போலிஷ் பேசவில்லை. வேற்று நாட்டைச் சேர்ந்தவள் என்று எனக்கும் பட்டது.

''என்ன உடம்பு உங்களுக்கு?''

வால்டன் சிறிது நேரம் பேசாமலிருந்தார்.

''எனக்கு உடம்பு ஒன்றுமில்லை. என்ன நடந்தது தெரியுமா?''

''சொல்லுங்கள்.''

''நான் தற்கொலை செய்து கொள்ள முயன்றேன்.''

நான் திடுக்கிட்டேன்.... ''நீங்களா?''

''ஆமாம்... நான்தான்... இந்தப் பெண்மணி இல்லாவிட்டால் என் கதை முடிந்திருக்கும்... நான் தற்கொலை செய்துகொள்ள முயன்றதற்கும் இந்தப் பெண்தான் காரணம்...''

''கடவுள் உண்டா இல்லையா என்பது வாதப் பிரதிவாதத்திற்கு ஏற்ற விஷயமல்ல. வாதிப்பதற்கு என்னைக் கூப்பிட்டால் நான் தோற்றுப் போவேன் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் நானும் நீங்களும் இப்போது உட்கார்ந்து பேசுகிறோம் என்பது போன்ற உண்மையாகவே கடவுள் இருக்கிறார் என்பதைநான் நம்புகிறேன். காற்றும் நீரும் இல்லாமல் நான் வழ்ந்து காட்டுவேன். என் கண்களைப் பிடுங்கி விட்டாலோ, மூக்கைத் துண்டித்து விட்டாலோ வாழ்ந்து விடுவேன். ஆனால் என்னிடமுள்ள கடவுளுணர்ச்சியைத் தகர்த்து விட்டாலோ அப்போதே உயிரற்ற பிணமாவேன்.''

—மகாத்மா காந்தி

தகவல்: ஆர். எஸ். சுப்பிரமணியன்



''புரியவில்லை.''

அவர் கண்களை மூடியவாறு, சிறிது நேரம் மௌனமாக இருந்தார்.

அந்தப் பெண் தேநீர் கொண்டு வந்தாள். போலிஷ் முறையில் தயாரித்த தேநீர். தம்ளரில் தேயிலைத் தூள்களைப் போட்டு விட்டு அதில் சுடச் சுட வெந்நீர் ஊற்றி விடவேண்டும்.... அவ்வளவுதான்.

அவர் ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தார். ''நேற்றிரவு எனக்கு ஒரு கனவு... இது கனவா, நிஜமா என்று எனக்குப் புரியவில்லை. நிஜமில்லை என்று அடியோடு ஒதுக்கிவிடவும் முடியாது. வரம்புக்கு உட்பட்ட நம் பகுத்தறிவைக் கொண்டு, 'இது நிஜம், இது கற்பனை' என்று அளவிட முயல்வதும் வீண் வேலை.

ஆஷ்விச் அனுபவங்கள் தொடர்ந்து நிகழ்கின்றன. என் கண்ணெதிரே குழந்தைகளை 'காஸ்' சேம்பருக்கு அழைத்துச் செல்லுகிறார்கள். 'மரணச் சுவர்' எதிரே இளைஞர்களைச் சுடுகிறார்கள். அடுக்கடுக்காக இருக்கும் குறுகிய இடங்களில் தூங்குகின்றவர்களைக் காலால் உதைத்து வேலைக்கு எழுப்புகிறார்கள். வேதனை பொறுக்க முடியாமல் தலை தெறிக்க ஓடும் ஒருவன் மின்சார வேலியைத் தொட்டு இறக்கிறான். அவன் மரணத்தை உறுதிப்படுத்துவது போல் அவன் உடலை மறுபடியும் சுடுகிறார்கள்.

இதைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? இது உண்மையாகவேஅன்று நடந்தது. அப்பொழுது நடந்ததை மறுபடியும் காண்கிறேன். ஒரு யூதப் பாதிரியை அவருடைய வேதப் புத்தகத்தை எதிரே வைத்து அதன் மீது அவர் காறித் துப்பும்படி பணிக்கிறார்கள். ஓர் இளம் நாஜிப் போர்வீரன் ஒரு கவிதைப் புத்தகத்தைப் படித்துக் கொண்டே இதை மேற்பார்வை இடுகிறான். அவர் காறித் துப்புவதை நிறுத்தியதும் அவன் உறுமுகிறான். 'ஏன் நிறுத்திவிட்டாய்?' 'தொண்டை வறண்டு விட்டது.' 'இந்தா...' அவன் அவர் வாயில் காறி உமிழ்கிறான்.

இப்படி நடந்திருக்க முடியுமா என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். நடந்தது... நேற்றிரவும் நான் அதைப் பார்த்தேன். இலக்கியம், இசை, நுண் கலைகள் ஆகியவை மனிதப் பண்பை வளர்க்கும் என்கிறார்களே இது பொய் என்பது ஆஷ்விச்சில் நிரூபணமாகி விட்டது. 'காஸ் சேம்ப'ருக்கு அணிவகுத்துச் செல்லும்போது வாக்னர் இசை. 'மரணச் சுவருக்குப் போகும்போது பாஹ். நாஜிகளுக்குக் கலை ரசனை இல்லை என்று யார் சொன்னார்கள்?

நேற்றிரது எனக்கேற்பட்டது கனவு என்று நான் நம்பத் தயாராக இல்லை. நிஜ அனுபவம் என்றுதான் உறுதியாக நினைக்கிறேன்.... அதற்குக் காரணமும் உண்டு.''

''என்ன காரணம்?''

''நான் ஆஷ்விச்சிலிருந்தபோது, தேவைப் படும் என்று தூக்க மாத்திரைகள் இரகஸ்யமாக வைத்திருந்தேன். நேற்றிரவு அவற்றை

—அப்பொழுது சாப்பிடாமல் வைத்திருந்த மாத்திரைகளை — சாப்பிட்டேன். அதன் விளைவாகத்தான்....''

''அந்த மாத்திரைகள்தான் என்று எப்படி உங்களால் நிச்சயமாகச் சொல்ல முடியும்?''

''நான் இப்பொழுது தூக்க மாத்திரைகளை வைத்துக் கொள்வதில்லை.''

''தூக்க மாத்திரைகள் சாப்பிட்டீர்கள் என்று எப்படித் தெரியும்?''

''பயங்கர வாந்தி: பொறுக்க முடியாத தலைவலி... வயிற்றை என்னவோ செய்தது....''

''பிறகு எப்படிச் சரியாயிற்று? மாற்று மருந்துகள் வைத்திருக்கிறீர்களா?''

''இல்லை... எப்படிச் சரியாயிற்று என்பது தான் இன்னொரு விந்தை. இந்தப் பெண் என் வயிற்றைத் தடவிக் கொடுத்தாள். அவ்வளவுதான்.''

அந்தப் பெண்ணைப் பார்த்தேன். அவள் புன்னகை செய்தாள்.

''இந்தப் பெண் யார் தெரியுமா?''

''நீங்கள் இன்னும் அறிமுகப்படுத்தவில்லை.''

''என் மகள்.''

''மகளா?''

''ஆமாம்... நான் நாஜிகள் கொன்றுவிட்டார்கள் என்று நினைத்தேன். அது தவறு. தப்பியோடிய ஒரு யூதர் இவளையும் எடுத்துச் சென்றிருக்கிறார். ரஷ்யாவுக்குச் சென்று, அங்கிருந்து இஸ்ரேலுக்குப் போயிருக்கிறார். இந்தப் பெண் வளர்ந்தது இஸ்ரேலில். இறக்கும்போதுதான் அவர் உண்மைத் தகவலை இந்தப் பெண்ணிடம் சொல்லியிருக்கிறார். அதாவது பத்து வருஷங்களுக்கு முன்னால். அன்று முதல் கொண்டு என்னைத் தேடிக் கண்டு பிடிப்பதில் முனைந்து, இந்தப் பெண் நேற்று இங்கு வந்து சேர்ந்திருக்கிறாள்.''

''மகள் வந்தது உங்களுக்குச் சந்தோஷத்தை அல்லவா தரவேண்டும்? இப்படியா நடக்க வேண்டும்?''

''அதற்குக் காரணம் இவள் சொன்ன தகவல்கள். நாஜிகள், யூதர்களுக்குச் செய்ததை யூதர்கள் இன்று 'வெஸ்ட் பாங்'கில் செய்து வருகிறார்களாம். பெய்ரூட்டில் அவர்கள் செய்த அக்கிரமம் உங்களுக்குத் தெரிந்ததுதான். என் மனம் கொதித்தது.''

''உங்கள் மனம் என்ன? எல்லோருடைய மனமும்தான்...''

''குறிப்பாக என் மனம்..., ஏன் தெரியுமா? நான் ஒரு யூதன்... அது தெரியாதா உங்களுக்கு?''

ஒரே நாளில் பல அதிர்ச்சிகளை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

''நேற்றிரவு ஏற்பட்டது கனவு இல்லை, என்று உறுதியாக நம்புகிறீர்களா? கடைசி முறையாகக் கேட்கிறேன்'' என்றேன் நான்.

''நான் ஒரு யூதன். அற்புதங்களில் எனக்கு நம்பிக்கை உண்டு...அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும்....''

நேசமுள்ள வான்சுடரே

6 சவீதா

மகளிர் விடுதியைச் சுற்றிலும் ஒரு ஞாயிற்றுக் கிழமை தங்க மயமாக விடிந்து கிடந்தது.

குளித்துப் பரிசுத்தமாகப் புத்துணர்ச்சி பெற்றிருந்த பத்மா விடுமுறை தினத்துக் காகச் சாயம் மங்கிய வாயில் புடவையைத் தேர்ந்தெடுத்து உடுத்திக் கொண்டிருந்தாள். டெய்சி படுக்கையில் நெளிந்தாள். இரவில் அவள் போர்த்திக் கொண்டிருந்த போர்வை நழுவிக் கட்டிலுக்குக் கீழே விழுந்து கிடந்தது.

இன்று அனுடமி டிபேட்டருக்குப் போய்ச் சடலத்தில் கை வைக்க வேண்டிய வேலை இல்லை. வெள்ளைக் கோட்டையும், கத்திரியையும், இடுக்கியையும் கத்தரியையும் தொட வேண்டியதில்லை என்ற எண்ணங்கள் பத்மாவின் மனத்தில் குதூகல சுதந்திர உணர்வை ஏற்படுத்தின. அவள் வயிற்றில் பசியின் அனல். மெஸ்ஸுக்குப் போய் நாலு தோசைகளைக் கிழித்து விழுங்கிவிட்டு வந்து படுக்கையில் நிம்மதியாகச் சாய்ந்து ஆன்டியாலஜி புத்தகத்தை விரிக்க வேண்டும் என்று தீர்மானித்தாள்.

ராயப்பேட்டை மருத்துவ மனைக்குப் பேருந்து பிடித்து ஓட வேண்டிய நாவுஸ் சர்ஜன்கள் மோகினியும், சந்திராவும் தங்கள் கொரு ரோஜாவைக் காதருகே செருகிக் கொண்டு 'வெடவெட'வென்ற ஆர்கன்ஸா புடவையை அடைக் கோழி மாதிரி உடுத்திக் கொண்டு 'ஸ்டெத்'தும் கையுமாக விடுதியின் 'கேட்'டைக் கடந்து வெளியேறிக்கொண்டிருந்தனர்.

பத்மா பவுடரைக் கழுத்தைச் சுற்றிப் பூசினாள். பவுடரும், மணமும் மேஜை விசிறிக் காற்றில் கலந்து சுழன்று டெய்சியின் நாசியில் ஏறவே, அவள் கண் திறந்து உலகத்தைப் பார்த்தாள்.

''எழுந்திருக்க மனசு வரலியா? மணி ஏழரை'' என்றாள் பத்மா. கண்ணாடிக்குள் பார்த்தவாறு கண்டு விரல் நுனியில் இருந்த கண் மையை இடது விழியின் கீழ் விளிம்பில் இழுத்தாள்.

''ஞாயிற்றுக் கிழமையாவது தூங்க விடேண்டி'' என்று டெய்சி புரண்டாள். கொட்டாவியை 'ஹா' வென்று வெளியேற்றினாள்.

''எனக்குப் பசிக்குது. நான் மெஸ்ஸுக்குப் போகவா?''

''பாட்டுக் கேட்டுக்கிட்டு இரு. ஐஞ்சு மினிட்ஸ்ல நானும் வந்துர்றேன்'' படுத்த படியே டெய்சி கையை உயர்த்தி மேஜை மீதிருந்த டிரான்ஸிஸ்டரின் குமிழைத் திருகினாள். மேல் நாட்டு ட்ரம்கள் விருந்தாக அதிர்ந்தன.

''நான் ஒண்ணும் இப்ப குளிக்கலே.'' டெய்சி எழுந்தாள். பற் பசையை எடுத்தாள். ''டெய்லிதான் குளிச்சுட்டுச் சாப்பிடறோம். இன்னி ஒரு நாள் டிபனை முடிச்சுட்டு வந்து குளிச்சா உடம்பு கோபிச்சுக்காது.''

''வரவர ரொம்பக் கெட்டுப் போயிட்டேடி'' என்றாள் பத்மா.

''என்ன கெட்டுப் போயிட்டேன்?''

''சர்ச்சுக்குப் போற வழக்கத்தையெல்லாம் நிறுத்திட்டியா?''

''நீமட்டும் ஒழுங்கா சாமி கும்பிடறியா?''

''இங்க பார். நான் கண் விழிக்கிறதே இந்த விநாயகர் முகத்திலதான்'' என்று பத்மா விரலில் இருந்த பிளாஸ்டிக் மோதிரத்தைத் திருப்பிக் காட்டினாள். ''போயி பல் தேய்ச்சுட்டுச் சீக்கிரம் வா. பசி வயித்தக் கிள்ளுது. நைட் வேற சாப்பிடலே'' என்றாள். புத்தக அலமாரியிலிருந்து ஒரு புத்தகத்தை உருவிக் கையில் எடுத்துக்கொண்டாள்.

''பத்மா மறந்தே போச்சுடி. சீக்கிரமா ட்ரெஸ் சேஞ்ச் பண்ணிட்டுப் புறப்படு. நானும் குளிச்சுட்டு வந்துடறேன். நாம மவுண்ட்ரோடு போறோம்'' என்றாள் டெய்சி திடீர் உற்சாகத்துடன்.

''சினிமாவுக்கு நான் வரல.''

''மவுண்ட் ரோடுன்னுதான் சொன்னேன். சினிமான்னு சொல்லலையே.''

''மவுண்ட் ரோட்ல என்ன வேலை?''

''லோகல் லைப்ரரி மாடில மெடிகல் புக்ஸ் எக்ஸிபிஷன்-கம்-ஸேல். எல்லாரும் போயிபுஸ்தகங்களை அள்ளிக்கிட்டுவர்றாங்க.''

''புக் சொந்தமா வாங்கிப் படிக்கிற அளவுக்கு என்கிட்ட ஏதுடி பணம்?. நீ போயிட்டு வா.''

''நான் மட்டும் ஆயிரம் ரூபாய்க்கா புக் வாங்கப் போறேன். இந்த மாசம் அப்பா அனுப்பிய பணம் பூரா காலி. ஒரே ஒரு நூறு ரூபா நோட்டு மட்டும் முழிச்சிக்கிட்டு இருக்கு. அதுலயும் நாயர் கடைக்குப் பத்து ரூபா கொடுக்கணும். போயி என்னென்ன புத்தகங்கள் இருக்குன்னு பார்ப்போம். சீப்பாக் கெடைச்சா ஒண்ணு ரெண்டு வாங்குவோம். இல்லேன்னாலும் இன்ன போயி காப்பி அடிச்சுட்டுத் திரும்பிடுவோம். என்ன சொல்றே?''

''அவர் மூணு சம்சாரங்களை அழைச்சுக்கிட்டு எங்கே போறாரு?''

''டார்லிங் டார்லிங் டார்லிங் படத்துக்காம்!''

—அ. வசந்தா



''அப்படின்னு சித்திரையையும் ஒரு நிமிஷம் எட்டிப் பார்த்துட்டு வந்துருவோம். பக்கத்திலதானே வீடு.''


''ம். போகலாம்'' என்றாள், டெய்சி. அறையை விட்டு வெளியேறினாள். ஜன்னல் பக்கமாக வந்து பத்மாவைப் பார்த்து ''நான் வர்றதுக்குள்ள புறப்படு'' என்றாள்.

''இன்னும் என்ன புறப்படறது? இந்தப் புடவை பத்தாதா? இப்பத்தான் சலவை லேர்ந்து எடுத்தேன்.''

''சாயம் போன மாதிரி இருக்குடி.''

''போதும், போதும். கல்யாணத்துக்கா போறோம்.''

நூலகக் கட்டிட மாடியில் நெரிசல். நகரத்தின் மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ மாணவிகளும் டாக்டர்களும் கும்பல் கும்பலாகவும் தனித் தனி



யாகவும் மேஜைகளுக்கிடையே நகர்ந்தனர். பரப்பி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களைப் பிரித்து நாடி பார்த்து, பரிசோதித்து, விவாதித்து, சிலர் பணம் கொடுத்து வாங்கினர்.

டெய்சி வேகமாகப் புத்தகங்களைப் பார்த்துக்கொண்டு நடந்தாள். பத்மா ஒவ்வொரு புத்தகமாகப் புரட்டிப் பார்த்துக்கொண்டு மெதுவாக நகர்ந்தாள்.

சின்னத் தலையணையின் அளவில் இருந்த புத்தகம் ஒன்றை ஒரு கரம் பத்மாவிடம் நீட்டியது. பத்மா சட்டென்று தலை நிமிர்ந்தாள். ராம்குமாரை மிகவும் அருகில் பார்த்ததும் அவள் இதயம் படபடவென்று படுவேகமாகத் துடித்தது. தன் சொந்த இதயத்தின் 'லப்டப்' சப்தத்தை ஸ்டெத் இல்லாமல் அவளால் கேட்க முடிந்தது.

இவனிடம் ஏதோ மாறுதல் தெரிகிறதே. மிகவும் வித்தியாசமாகத் தோன்றுகிறானே என்று ஒரு விநாடி தடுமாறிய பத்மா அவனிடமிருந்த மாற்றத்தைத் தெரிந்து கொண்டாள். கல்லூரிக்கு எப்போதும் வெள்ளை நிறத்திலேயே உடையணிந்து வரும் ராம் சாம்பல் நிறத்தில் பாண்ட் அணிந்திருந்தான். முழுக்கை ஷர்ட் அதே நிறத்தில் மினுமினுத்தது. வழக்கம்போல் அகல பெல்ட்.

ராம் இங்கே வருவான், இவ்வளவு நெருக்கத்தில் என்னைப் பார்ப்பான் என்று தெரிந்திருந்தால் இன்னும் ஒப்பனை செய்து கொண்டு வந்திருப்பேனே. 'சாயம் போன மாதிரி இருக்குடீ. வேற புடவை கட்டிக்கோ' என்று டெய்சி கெஞ்சியபோது, அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் அலட்சியப்படுத்தியது எத்தனை மடத்தனம். கனகாம்பர நைலக்சை உடுத்திக்கொண்டு வந்திருக்கலாமே.

ஒருவித அசௌகரிய உணர்வும் நாணமும் அவளை ஏககாலத்தில் தாக்கின. அவன் நீட்டிய புத்தகத்தை வாங்கிப் பிரித்தாள். அதிலிருந்த பெய்லி அண்ட் லவ். டெக்ஸ்ட் புக் ஆப் ஸர்ஜரி என்ற எழுத்துக்கள் அவளுடைய வெற்றுப் பார்வைக்குப் புலப்படவில்லை.

ராம்குமார் அந்தப் புத்தகத்தை வாங்கி விட்டதற்கு அடையாளமாக உள்ளே சிவப்பு நிற ரசீது இருந்தது. விலை பத்து சதவீதம் கழிவு போக முந்நூற்றி எழுபத்தைந்து ரூபாய்.

விலை கண்ணில் பட்டதும், 'அடேயப்பா!' என்றது அவள் மனம். என்ன பேசுவது என்று தெரியாமல் கண நேரம் திணறினாள். ''ரொம்பக் காஸ்ட்லியா இருக்கே'' என்றாள். அவளுடைய வார்த்தைகள் வேறு யாரோ பேசுவதைப் போல அவள் காதில் ஒலித்தன.

''டாக்டர் வீட்டு புக் ஷெல்ப்ல அவசியம் இருக்க வேண்டிய புக்ஸ்ல இதுவும் ஒண்ணு'' என்றான் கரகரவென்ற குரலில்.

அப்போது அவர்களைக் கடந்து சென்ற சுப்பையா ''நம்பாதீங்க மேடம், டாக்டர்களுக்குத் தேவை புஸ்தகங்கள் இல்லே..''என்றான்.

''நோயாளிங்கதான்னு சொல்லுவே.தெரியாதாடா உன் ஜோக்'' என்றான் ராம். சுப்பையா ஏதோ அர்த்தத்துடன் அவனைப் பார்த்துக் கண்ணடித்து விட்டுப் போனான். பத்மா அதைக் கவனிக்கவில்லை.

''நம்ம லைப்ரரில இருக்கா?'' என்றவாறு அந்தத் தலையணைப் புத்தகத்தை அவனிடமே திருப்பிக் கொடுத்தாள்.

''ஏன் என்கிட்டக் குடுக்கறீங்க. உங்களுக்குத்தான்.''

''எனக்கா?''

''ஆமா. எனக்கும் இதில ஒரு காப்பி வாங்கி யிருக்கேன். அங்கே பாருங்க. எவ்வளவு புக்ஸ் வாங்கியிருக்கேன்னு'' என்று மேஜை மீது இரண்டடி உயரத்துக்கு இருந்த புத்தக அடுக்கைக் காண்பித்தான்.

''தாங்க்ஸ். இது வேண்டாம். இதை ரிட்டர்ன் பண்ணிடுங்க.''

''ஏன்?''

''.....'' மௌனமாக அவன் சட்டையின் மேல் பொத்தானைப் பார்த்தாள்.

''ஏன் சொல்லுங்க? இது உங்களுக்கு உபயோகப்படாதுன்னு நினைக்கிறீங்களா.இல்லே என் கிட்டேர்ந்து வாங்கக் கூடாதுன்னு நினைக்கிறீங்களா?''

''என்னால உங்களுக்கு அனாவசியச் செலவு வேண்டாம்னு நினைக்கிறேன்.''

''அன்பை விலை கொடுத்து வாங்க முடியாதுன்னு எனக்குத் தெரியும் மேடம். இந்த மாதிரிப் பரிசுகளைக் கொடுத்து அடுத்தவங்க மனசை விலைக்கு வாங்கிட முடியும்கிற நம்பிக்கை எனக்குக் கிடையாது. அந்த நோக்கமும் கிடையாது. இந்த புக் முக்கியமானதா எனக்குத் தோணிச்சு.முக்கியமானதை முக்கியமானவங்களுக்கு வாங்கிக் குடுக்கிறதுல எனக்குச் சந்தோஷம் கிடைக்குது. அந்த சந்தோஷத்தை எனக்குத் தர விரும்பலேன்னா இது இந்த மேஜையிலேயே கிடக்கட்டும்'' என்று கையிலிருந்த புத்தகத்தை மேஜை மீது வைத்துவிட்டு நகர்ந்தான்.

(தொடரும்)

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

''என் பெண்டாட்டிக்கிட்டே நீ சினிமா நடிகையாட்டம் இருக்கேன்னு சொன்னதுரொம்பத்தப்பாப்போச்சு!''

''ஏன் சார் அப்படிச் சொல்றீங்க?''

''வீட்டிலேயே அவளுக்கு ஒரு ரசிகர் மன்றம் ஆரம்பிக்கச் சொல்றா.''

—ச. கமல தியாகராஜன்





பொன்னொளிர் பாரதநாடு

நாம் காணக்கூடியது மாத்திரம் உலகமல்ல; கண்ணுக்குத் தெரியாத பல உலகங்கள் இருக்கின்றன. பதினான்கு உலகங்கள் இருப்பதாக நம்முடைய அற நூல்களில் சொல்லப் பட்டிருக்கிறது. நாம் வசிக்கும் இந்த உலகத்துக்கு மத்தியம லோகம் என்றும், மிஸ்ர லோகம் என்றும் பெயர்கள். இதையே பூலோகம் என்று கூறுகிறார்கள். இந்தப் பூலோகத்துக்கு மேல் புவர்லோகம், ஸ்வர்க்க லோகம், மஹர்லோகம், ஜனோ லோகம், தபோலோகம், சத்ய லோகம் என ஆறு உலகங்கள் இருப்பதாகவும் சொல்லப் பட்டிருக்கிறது. பூலோகத்தின் கீழ் அதல விதல, சுதல, ரஸாதல, தலாதல, மஹாதள, பாதாள என்று ஏழு உலகங்கள் இருப்பதாகவும் சொல்லப் பட்டிருக்கிறது. ஆக பூலோகத்தையும் சேர்த்து மொத்தம் 14 உலகங்கள் இருப்பதாகக் கணக்கிடப் பட்டுள்ளது. இப்போது நாம் வசிக்கும் பூலோகமும் அறநூல்களில் கூறப்பட்டுள்ள விதமாக முழுமையாக இல்லை. ஏழு சமுத்திரங்களையும், ஏழு தீவுகளையும் கொண்டது பூலோகம் என்று கூறப்பட்டிருக்கிறது. நம்முடைய தீவுக்கு ஜம்பூத்வீபம் அல்லது நாவல் தீவு என்று சொல்லப் பட்டிருக்கிறது. நாவல் தீவில் அநேக பகுதிகள் உள்ளன. அவைகளுக்குள் பாரத வர்ஷமும் ஒரு பகுதி. பாரத வர்ஷம் பல பிரிவுகளைக் கொண்டது. அவைகளுள் ஒரு சிறிய பகுதிக்குப் பரத கண்டம் என்று பெயர். பாரத வர்ஷம் என்னும் (Greater India) பெரிய இந்தியாவை நோக்கினால் நம்முடைய பாரத நாடு மிகச் சிறியதாக இருக்கும்.

பாரத நாட்டுக் கலாச்சாரம், பண்பாடு, தத்துவம், ஆன்மீகம், கலைகள், கோவில்கள் வாழ்க்கை முறைகள், அறநெறிகள் இவை எல்லாம் உலகம் தோன்றிய காலம் முதல் வந்து கொண்டிருக்கின்றன. மொழிகள் நடை, உடை பாவனைகள், உண்ணல், உடுத்தல் முதலியவை மக்களிடையே வெவ்வேறாக இருந்தாலும் அற நெறியும் ஆன்மீகமும் பாரத நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒன்றாக இருப்பதினால் இந்தப் பாரத நாட்டைப் பல பகுதிகளில் பல பேர்கள், பல சமயத்தவர்கள், பல ஆண்டுகளாக ஆண்டு வந்தாலும் பாரத நாடு ஒன்றாகவே என்றும் இருந்து வருகிறது. காசி முதல் இராமேஸ்வரம் வரை கன்யாகுமரி முதல் காஷ்மீர்வரை ஒன்றாகவே இணைத்து வைத்திருக்கிறார்கள். வேற்றுமைகள் நம்மிடையே பல இருப்பினும் அனைவரையும் ஆன்மீகக் கருத்துக்கள் ஒன்றுபடுத்தி வைத்திருப்பதைத் தான் பாரதி உபநிஷதத்தை முன்வைத்துப் பாடினார்:

பன்னரு முபநிட நூலெங்கள் நூலே
  பார்மிசை யேதொரு நூலிது போலே!
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
  போற்றுவ மீதை யெமக்கில்லை யீடே!

12 ஜோதிர்லிங்க க்ஷேத்திரங்களும் 7 மோக்ஷபுரிகளும் இந்தப் பாரத நாட்டை ஒருமைப்படுத்துகின்றன. ஆகவே ஒவ்வொருவரும் தங்கள் வாழ்நாளில் பாரத தேச யாத்திரை செய்து புண்யத்தையும் அடைந்து பாரத நாடு ஒன்று என்பதையும் உணர்வோமாக.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி
சங்கராச்சாரிய சுவாமிகள்

பணக்கார ஏழை

— கீதா பென்னெட் —



அந்தப் பங்களாவின் முகப்பில் டாக்ஸிக்காரன் வட்டமடித்துக் குலுக்கி நிறுத்தினான். நிறைய போகன்வில்லா படர்ந்திருந்தது. தொட்டிகளில் செடிகள் வரிசையாய் அமர்ந்திருந்தன. மண்ணைக் கொத்திக் கொண்டிருந்த தோட்டக்காரன் ஒருமுறை நிமிர்ந்து பார்த்துவிட்டு மறுபடியும் கருமமே கண்ணாயினான்.

என்னை வரவேற்கக் கௌரியே வெளியே வருவாள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அவளை ஒரு கணம் நன்றாக உற்றுக் கவனித்தேன். ஒரு லட்சாதிபதியின் மனைவி இவள் என்று சத்தியம் பண்ண முடியாதுதான்.

பச்சைக் கட்டங்கள் அடைத்த காட்டன் புடவை. நீளமான திருமாங்கல்யம் ப்ளவுஸுக்கு வெளியே விழுந்திருந்தது. பணத்தின் பெருமை அவளது கொழு கொழு கன்னங்களில் மட்டுமே. கண்கள் அதே பிரகாசமாய், அதே அமைதியாய் இருந்தன.

''என்ன... ஏதாவது பேச்சு உண்டா அல்லது இப்படியே நிறகப் போறியா?''

எனக்கு ஒரு நிமிடம் கூச்சமாய் இருந்தது.

''ஹௌ ஆர் யூ கௌரி?'' என்றேன்.

''மோர் தென் ஃபைன்... உள்ளே வா'' வாய் நிறைய என்னை அழைத்தாள். கௌரி மாறவே இல்லை.

உள்ளே இன்னும் பிரமிப்பாய் இருந்தது. யூ. கே.யில் பத்து வருஷங்களாய் இருக்கிறேன். நிறைய வசதிகள் கொண்ட வீட்டில்தான் வாழ்கிறேன். ஆனால் இந்த வீட்டோடு ஒப்பிட்டால் அது கால் தூசு பெறாது. பழங்கால பாணியில் அமைக்கப்பட்ட வீடு. உயரமான சீலிங். ஆங்காங்கே ரத்தினக் கம்பளங்களில் பளீர் சிவப்பு. சுவர்களில் ரவி வர்மாவின் செக்ஸி பெண்கள். ஒரு பெரிய வெங்கல நடராஜர் இவற்றைக் கவனிக்காமல் ஒரு மூலையில் ஒற்றைக் காலில் நின்றார். திரைகள் அசையும்போது உள்ளே நடமாடுவது தெரியும்படி வேலையாட்கள்.

''உட்கார்ந்துக்கோயேன் பானு'' என்றாள்.

நான் சோபாவில் அமர்ந்து கொண்டேன். இந்தப் பத்து வருடங்களில் எத்தனையோ மாறுதல்கள். நானும் கௌரியும் பள்ளி இறுதிவரை ஒன்றாய்ப் படித்தோம். அவள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண். ஆனால் அவள் அப்பா அவளுக்கு இயற்கையாக இருந்த ஞானத்தை வளர்க்க எண்ணி நாட்டியமும், பாட்டும் சொல்லிக் கொடுத்தார்.

''நாங்கள் — மற்ற மாணவிகள் ஹோம் ஒர்க் செய்யும்போது அவள் நாட்டியம் பயின்று கொண்டிருப்பாள். நாங்கள் விடியற்காலையில் அரைத் தூக்கக் கனவு காணும் போது அவள் பாட்டு சாதகம் பண்ணிக் கொண்டிருப்பாள். கடைக்காரரிடம் விலை கேட்டுவிட்டு அவள் கைகள் எதையோ அபிநயம் பிடிக்கும். மனசு ஏதோ பாடலை முணு முணுக்கும்.

அவ்வளவு கடுமையாக மனமாற உழைத்ததால்தான் அவள் இன்று ஒரு பிரபல நாட்டியக்காரி என்று ஆக முடிந்தது என்று நினைக்கிறேன்.

''காப்பி சாப்பிடறியா பானு'' என்றாள்.


நான் சரியென்றபோது அவளாகவே உள்ளே போய்க் காப்பி கொணர்ந்தாள்.

''லண்டன் எப்படி இருக்கு? நீ என்ன பண்றே? பேச நிறைய விஷயங்கள் இருக்கு. நாம மீட் பண்ணிப் பத்து வருஷங்கள் இருக்கும்'' — அவள் சொல்லிக் கொண்டிருந்தபோது ஒரு பெண்மணி இரண்டு தட்டுக்களில் போண்டா கொண்டு வந்தாள்.

நான் திகைத்துப் போனேன். அந்த வேலைக்காரியும் பச்சையில் கட்டம் போட்ட கௌரியின் அதே புடவை உடுத்தியிருந்தாள். கௌரிக்கும் அவளுக்கும் வெளித் தோற்றத்தில் எதுவும் வித்தியாசம் கிடையாது.

அவள் டிரேயை வைத்துவிட்டுத் திரைக்குப் பின் மறைந்தபோது நான் சந்தேகமாய்க் கேட்டேன்,





''உனக்குச் சகோதரிகள் கிடையாது என்று நினைத்திருந்தேனே கௌரி!''

கௌரி சிரித்தாள். ''நான் ஒரே பெண்தான். நினைவில்லையா?''

''அப்போ அந்தப் பெண்...''– நான் தயங்கினேன்.

''ஓ! மேக் இட் எபாயிண்ட். இந்த வீட்டு எஜமானியும் வேலைக்காரர்களும் ஒரே சாப்பாடுதான் சாப்பிடுவார்கள். ஒரே மாதிரி புடவைதான் உடுத்துவார்கள். ஒரு கணம் கூட இவளுக்கு மட்டும் இத்தனை பணம் இருக்கிறதே . எனக்கு இல்லையே என்று மற்றவர்கள் நினைக்க நான் இடம் கொடுப்பதில்லை.''

''அது எப்படி? என்ன இருந்தாலும் நீ தானே அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கிறே! நீதானே எஜமானி!''

''இருக்கலாம்... ஆனால் இந்தப் பணமெல்லாம் அவரைக் கல்யாணம் பண்ணிக்கொண்ட பின் வந்ததுதானே? நான் இப்பவெல்லாம் ஒரு டான்ஸ் கச்சேரிக்கு ஆயிரக்கணக்கில் வாங்குகிறேன். ஆனால் எல்லாத்தையும் டொனேஷ

ளுகக் கொடுத்து விடுகிறேன். அவரும் ஒன்ணும் சொல்றதில்லே.''

''அதுதான் ஏன்னு சொல்லேன். எனக்கு எல்லாம் புதிரா இருக்கு'' என்றபோது அவள் சம்பந்தமில்லாமல் ''உனக்கு நம்ம சிநேகிதி சாந்தாவை ஞாபகம் இருக்கா!'' என்றாள்.

'எப்படி ஞாபகம் இல்லாமல் போகும்? எங்கள் வகுப்பிலேயே அவள்தான் பணக்காரி. தன்னிடம் நிறையப் பணம் இருக்கிறது என்ற கர்வமும் அவளுக்கு நிறைய உண்டு. தினம் ஒரு டிரஸ்ஸில் வருவாள். பள்ளிக்கூட வயதில் அதெல்லாம் பிரமிப்பு தானே! அவள் ஏழைப் பெண்களைக் கண்டால் துச்சமாகப் பேசுவாள். அதுவும் கௌரியைக் கண்டால் அவளுக்குப் பிடிக்காது. ஏழையாயிருந்தாலும் மற்ற எல்லோரும் அவளையேதான் சுற்றி வருகிறார்கள், ஏதோ கொஞ்சம் டான்ஸ் ஆடுகிறாள் என்றும் அதற்காகத் தலைமை ஆசிரியையிலிருந்து எல்லோரும் அவளைத் தலைக்கு மேல் கொண்டாடுகிறார்களே என்று பொறாமைப்படுவாள். அதற்காகவே தானும் நாட்டியம் கற்றுக் கொள்ள ஆரம்பித்தாள். அவளை எப்படி மறக்க முடியும்?'

''ஏன்? அவளுக்கு என்ன?'' என்றேன்.

''அவளால்தான் என் கொள்கைகள் பல மாயிற்று என்று நினைக்கிறேன்'' — அவள் சொல்ல ஆரம்பித்தாள்.

சாந்தாவை ஒரு சமயம் கௌரி வீட்டுக்கு அழைத்திருந்தாள். ஆனால் நிஜமாகவே அவள் வந்து நிற்பாள் என்று நினைக்கவில்லை.

சாந்தா கௌரியின் வீட்டை ஒரு முறை சுற்றிப் பார்த்தாள். அவள் முகத்தில் நிறைய ஏளனம் இருந்தது. அன்று கார்த்திகைப் பண்டிகை. வீடு முழுவதும் அகல் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. பூஜை அறையில் மட்டும் சிறியதாய் இரண்டு வெள்ளி விளக்குகள். அகல் வடிவத்தில் கழுத்தைச் சுற்றி வரிசையாய்க் கட்டப்பட்ட ''ஜிலுங் ஜிலுங்'' என்று லேசாய் ஒலிக்கும் வெள்ளி மணிகள்.

அதைப் பார்த்த சாந்தாவின் முகம் வியப்பால் மலர்ந்தது.

ஒருத்தி: ''வளையல்காரனைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்கிறாயே ஏன்?''

மற்றொருத்தி: ''அப்பொழுதுதானே வாழ்க்கை கலகலப்பாக இருக்கும்!''

—நெ. மி.



''ரொம்ப அழகா இருக்கே'' என்றாள்.

அப்போது அங்கே வந்த கௌரியின் அப்பா தானாகவே சொன்னார்:

''போன வாரம் கும்பகோணத்திலே ஒரு கல்யாணத்திலே கௌரி ஆடினாள். அதற்கு இது பிரசண்டேஷனாக வந்தது'' என்ற போது, ''அதுதானே பார்த்தேன். நீங்க தான் காசு கொடுத்து வாங்கி விட்டீர்களோ என்று நினைத்தேன்'' என்று சாந்தா வெடுக்கென்று சொல்லி விட்டாள்.

சாந்தா வீட்டுக்குப் போன பின் கௌரி தன் அப்பாவைச் சமாதானப்படுத்தினாள். அவர் அதை ஒன்றும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

''கௌரி! ஒன்றை நன்றாகப் புரிந்து கொள். செல்வம் என்பது 'செல்வோம்' என்று என்றைக்கும் ஒருவரை விட்டு நீங்கலாம். அதே போல் 'தரித்திரம்' என்பது 'தரித்து இரோம்' என்று ஒரே இடத்தில் இருக்காது. ஆனால் வித்தை அப்படி இல்லை; அது எளிதில் வராது. வந்தால் போகவே போகாது.

அப்பா சொன்னது எவ்வளவு உண்மை? ஒரு வாரம் கழித்து அந்த நிகழ்ச்சி நடக்கும் என்று யார் நினைத்தார்கள்?

சாந்தாவின் அப்பா காரை ஓட்டிக்கொண்டு வேலூருக்குப் போனவர் கார் சிவப்பு விளக்கில் நின்றபோது திமீர் என்ற ஹார்ட் அட்டாக்கில் காரிலேயே மாண்டு போனார். அந்த நிமிடம் அவர் என்ன நினைத்தார், என்ன சொல்ல விரும்பினார் என்பது யாருக்குமே தெரியாது. ஆனால் அவருக்குக் கடன்கள் என்று மட்டும் பின்னால் தெரியவந்தபோது எல்லாவற்றையும் விற்க வேண்டி வந்தது.

அவர்கள் வீடு மாறினார்கள். சாந்தா வேலைக்குப் போனால்தான் அடுத்த வேளைச் சாப்பாடு என்ற நிலை.

கௌரி சொன்னபோது அவள் கண்களில் லேசாய் நீர் திரையிட்டது.

''சாந்தா என் அப்பாவிடம் அப்படிப் பேசியபோது அவள் பணக்காரி என்பதால் தானே கர்வப்படுகிறாள்! இவள் பணம் இல்லாமல் ஏழையாக மாட்டாளா என்று ஒரு கணம் — ஒரே கணம் நினைத்தேன். அதன் பலன்தானோ சாந்தாவின் வாழ்க்கையே மாறிவிட்டது. அவள் இன்னும் கல்யாணம் பண்ணிக்கொள்ளவில்லை. அப்படிப் பண்ணிக் கொண்டால் அவள் அம்மாவுக்கு யார் ஆதரவு என்பதுதான் காரணம்.''

கௌரி தொடர்ந்தாள்.

''என் கணவர் ஒரு நாட்டியக் கச்சேரியில் என்னைப் பார்த்தார். தன் பெற்றோருடன் சண்டை போட்டு என்னை மணந்துகொண்டார். இப்போது அவர்கள் என்னைப் புரிந்து கொண்ட பின் சுமுகமாக இருக்கிறார்கள். நிறைய நிறையப் பணம். ஆனால் அப்பா சொன்ன மாதிரி என் வித்தை மட்டும்தான் நிலைத்து நிற்கக் கூடியது என்பதை உணர்கிறேன்.''

கௌரி சொன்ன அத்தனையும் எனக்குப் புரிகிறது. அந்தப் பணக்கார ஏழை என் சிநேகிதி என்று சொல்லிக் கொள்வதிலும் பெருமிதம் அடைகிறேன்.

அத்தியாயம் 17

இன்னும் இரண்டு ஃபைல்கள் பாக்கி இருந்தன. கழுத்துப் பட்டையில் முணு முணுவென்று வலித்தது. கார்த்திக் பேனாவை வைத்துக் கைகளை உயரத் தூக்கி நெடிய சோம்பல் முறித்தான். ஏக வேலைகளும், பொறுப்புக்களும் தோள் மேல் ஏற ஆரம்பித்திருந்தன.

'உன்னை மாதிரி' இங்கே யார் அக்கறையாக, ஆசையாக வேலை செய்கிறார்கள்?' என்று லோபோ வேறு அடிக்கடி சொல்லி வாயைத் திறக்க முடியாதபடி செய்தார்.


''நீ இல்லாவிட்டால் நான் என்ன செய்வேன் என்று புரியவில்லை. உன் மதிப்பை டி. ஜி.யிடம் சொல்லியிருக்கிறேன். ஹீ இஸ் இம்மென்ஸ்லி ப்ளீஸ்ட்.''

டி. ஜி. வந்திருந்தபோது நேரிடையாகவே அவனைப் பாராட்டிப் பேசியது இந்த லோபோ வெறும் பேச்சாளர் இல்லை என்று புரிய வைத்தது. லோபோவின் உருவத்திலும் பேச்சிலும் ஒரு கவர்ச்சி இருந்தது. எல்லாரையும் தட்டிக் கொடுத்துத் திறமையாக வேலை வாங்கும் சாமர்த்தியம் இருந்தது. ஆஃபீஸ் முழுவதும் அவரது கண்டிப்புக்கு மரியாதையுடன் கட்டுப்பட்டது. டி.ஜி.க்கு அடுத்தவர் இவர் என்பதை மறக்காத தீரத்தையும் காண்பித்தது.

இந்த 'ஸலாம்' போடும் கும்பலுடன் ஒட்டாமல் கார்த்திக் ஜாக்கிரதையாக இருந்தான். வேலையில் இருந்த இயல்பான ஆர்வத்திலும் ஆசையிலும் வேறு எந்தப் பிரக்ஞையும் இல்லாமல் அதில் ஆழ்ந்து போனது ரொம்ப சுலபமான விஷயமாகப் பட்டது.

வேலையில் சேர்ந்து சரியாக ஒரு வருஷத்தில் எதிர்பாராமல் பிரமோஷன் கிடைத்த திகைப்பில் அவன் நின்றபோது லோபோ அவன் கையைக் குலுக்கியபடி சொன்னார்:

''ஹெட் ஆஃபீஸ் அப்ரூவலுடன் நான் இதைச் செய்திருக்கிறேன். திறமையும் அக்கறையும் உள்ளவர்களுக்கு நிச்சயம் நல்ல எதிர்காலம் உண்டு என்று எல்லாரும் தெரிந்து கொள்ளட்டும். கூழைக் கும்பிடு போட்டு யாரும் முன்னுக்கு வர முடியாது என்று புரிந்து கொள்ளட்டும்....''



யாருக்கு என்ன புரிந்ததோ கார்த்திக்குக்கு நிச்சயம் புரிந்தது. அவனுடைய கனவுகள் பலிக்கப் போகின்றன. பல யுகங்களாகத் தொடர்ந்து மனத்தை அழுத்திய சுமைகள், சூழும்பிய பிரமைகள், அவமானப்படுத்திய ஞாபகங்கள்...

எல்லாம் விலகிப் போகும் காலம் வந்து விட்டது என்று புரிந்தது. நைந்து போன சட்டையைக் கழிகிற மாதிரி அவற்றைக் களைந்து வெளியேறப் பலவித வாசல்கள் திறந்திருக்கின்றன. அலங்காரத் தோரணங் களுடன் அழைக்கின்றன. ப்ளஸ் டூ பாஸ் செய்தவுடன் அப்பாவின் ''அவன் இஞ்ஜினியரா போகணும்னு தலையிலே எழுதி யிருந்தா முருகனே வழி பண்ணுவான்'' என்கிற கனிவற்ற வக்ர லாஜிக்கைக் கேட்ட துக்கத்தில் வெறும் கற்பனைப் பிரதேச மாய்த் தோன்றிய எதிர்கால சாம்ராஜ்யம், இதோ அந்த வாசல்களுக்கப்பால் சத்தி யத்தின் பிரமாணமாய் நிற்கிறது.

வேலையில் திறமை காட்ட வேண்டும் என்கிற வெறியும், அதன் மூலம் தான் மேலதிகாரிகளின் நல்லெண்ணம் கிடைக்கும் என்கிற நிச்சயமும் ஜுர வேகத்துடன் பற்றிக் கொண்டது. அதனால் ஏற்பட்ட தன்னம்பிக் கையும், அதன் விளைவாகச் சுமத்தப்பட்ட புதிய பொறுப்புக்களும் பொறுப்புக்கள் தோற்றுவித்த காண்டாக்ட்ஸும் அந்தக் காண்டாக்ட்ஸைத் தொடர வேண்டிய நிர்ப் பந்தங்களும், தொடர்புகளுக்கான பார்ட்டி களும் சந்திப்புகளும்....

மீள முடியாத சூழலில், புரியாத ஒரு இயந்திரத் தீவிரத்துடன் அவன் மூழ்கி மூழ்கித் திளைத்தான்.

''நீ இஞ்ஜினியரோ டாக்டரோ எது வானாலும்ஒரு குருக்கள்பிள்ளேங்கிறதை மறந்துடக்கூடாது.ஞாபகம் வெச்சுக் கோ!''

அப்பாநேரில் நின்றுசொல்கிறாற் போல்மனசுஒருமுறைகுலுங்கிற்று. பஞ்சகச்ச வேஷ்டியும் சின்ன ருத்ராட்ச மாலையும், பட்டை விபூதியும், பிரசன்னமில்லாத பார்வையும் பிரத்யட்சமாய்த் தெரிந்தன. அதன் நிட்சண்யம் இப்பவும்மனசைத்துளைத்தது. பார்வையைத் தாழ்த்திற்று.

'பிறந்ததிலிருந்து அந்த ஞாபகத்திலிருந்து விடுபட நான் போராடுகிறேன். அதற்கு விஞ்ஞான ரீதியான காரணங்கள் உண்டு. அதற்கு நான் உட்படா விட்டால் மனுஷ்வாழ்வில் தேக்கம்தான் இருக்கும். புதிய பாதைகள் விரிந்திருக்கிறபோது, என்னு டைய ஞாபகச் சுமைகளை இறக்கி வைத்து நான் முன் னேறி நகரா விட்டால் அந்தச் சுமையே என்னை அமுக்கி உட்கார வைத்து விடும். பாதைகள் மூடிப் போகும்.

பல விஷயங்களை மறக்க முடியவில்லை. திரும்பிப் பாரா மல் ஓடுகிற ஓட்டத்தோடு




அவைதொடர்ந்து வந்தன. மெல்லிய சுகந்த மாய், நினைவலைகளுடன் மிதந்தன. அப்பாவின் காலைப் பூஜை மணி ஓசையும், 'சர்வ மங்கள மாங்கல்யே'யும் முட்டி எறும்பு சொடக்குகிற ஓசையுடன் செய்யும் நமஸ்காரமும், நிழற் படமாக மனத்தின் ஒரு மூலையில் நின்றது. கருகருவென்ற கனேசவின் கட்டுக்குடுமி நிடுமென்று அவன் தலைவாரிக்கொள்ளும்போது கண்ணாடியில் பளிச்சிட்டது. அம்மா சின்னச் சின்ன காரியத்தில் காட்டும் தீவிரமும் பெரிய விஷயங்களில் ஒதுங்கி நிற்கும் லாகவமும் சோகத்தை எல்லாம் விழுங்கிவிட்டு ஞானப் புன்னகை பூக்கும் அத்தையும்....

அத்தை!

சமீபத்தில் கட்ட பொம்மன் போக்கு வரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. குமரி மாவட்டத் திற்கு நேசமணி போக்கு வரத்துக் கழகம் எனப் பெயர் மாற்றம் செய்யப் பட்டது. அந்த விழாவைக் கொண்டாடும் பொருட்டு அவருடைய சொந்த ஊரான பள்ளியாடி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் ரோட்டின் இரு மருங்கிலும் பானைகள் கட்டித் தொங்க விட்டிருந்தனர்.

நேசமணியின தேர்தல் சின்னம் பானை!

கருங்கல் ஆர். ஜார்ஜ்



அவன் இன்று தலைநிமிர்ந்து மமதையுடன் நிற்கக் காரணமான அத்தை! அவளை நினைக்கும்போதெல்லாம் ஒரு குற்ற உணர்வு அவனை ஆட்கொண்டது. சொல்லத் தெரியாத காரணங்களுக்காக, ஏதோ ஒரு புரியாத கட்டாயத்துக்காக இவர்கள் எல்லோருடைய அன்பையும் ஏற்காமல் விலகினாற் போல் ஒரு பாரம் அழுத்திற்று. அவர்கள் எல்லாரும் அவனை, அவனது செயல்களை எத்தனை சரணமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்! மாறாத அன்பு செலுத்துகிறார்கள், வித்தியாசமாக ஏதும் நடக்காததுபோல்!

அவன் மாசா மாசம் சம்பளம் வாங்கியவுடன் ஒரு பகுதியைக் கொண்டு போய் அத்தையிடம் கொடுத்து சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கும்போது அதை அவள் வெகு இயல்பாக, எந்த விதப் பிரத்யேக முக்கியத்துவமும் கொடுக்காமல் உள்ளே வைப்பதை அவன் கவனித்திருக்கிறான். அந்தப் பணத்தை அவர்கள் எப்படிச் செலவழிக்கிறார்கள் என்று அவனுக்குத் தெரியாது. வீடு கொஞ்சம் கூட மாறாத எளிமையுடன் தொடர்ந்தது. 'நீ யாராக இருந்தாலும் இது ஒரு சாதாரண குருக்கள் வீடு' என்றது. அவன் கிளம்பும் போது ரோடில் நிறுத்தியிருக்கும் கார் வரை அத்தை கூட நடந்து வருவாள். தாரா வண்டியைக் கிளப்பும் வரை கதவைப் பிடித்துக் கொண்டு நிற்பாள். புதிதாகச் செய்த அதிரசமோ, சர்க்கரைப் பொங்கலோ சின்ன சம்புடத்தில் வைத்து அவன் கையில் அழுத்தி ''உனக்குப் பிடிக்குமே'' என்கையில் தொண்டை அடைத்துக்கொள்ளும். அவன் பலமுறை உணர்ச்சி வசப்பட்டு, ''எங்களோடு வந்து இருங்களேன் அத்தை'' என்றிருக்கிறான். அவள் பிடி கொடுத்துப் பதிலே சொன்னதில்லை.

''அதுக்கெல்லாம் இப்போ அவசியமில்லே. நீ அடிக்கடி இங்கே வந்துண்டிரு போறும்!''

மேற்கொண்டு எதுவும் பேசத் தோன்றாமல் திரும்புகையில் வெகு நேரத்துக்கு சூன்யம் மனசை வியாபிக்கும்.

''ஐ வில் டெல் யூ வாட்! பேசாம மூட்டையைக் கட்டிண்டு உங்காத்திலே சேர்ந்து இருந்துடலாம்!'' என்ற தாராவின் வார்த்தைகள் யதார்த்தத்துக்கு இழுக்க...கூடவே தாராவின் சாஸம் ஒரு வியப்பை ஏற்படுத்தும். இவளை என்றாவது நாம் புரிந்து கொள்ள முடியுமா? என்கிற ஆச்சரியம் மெல்லிய மூட்டமாய் மனத்தைக் கவ்வும்...

12. போட்டுக் குடிக்கலாம் என்று அவன் எழுந்தான். தாரா வீட்டில் இல்லை. ''நீ உன் ஆபீஸ் வேலையைப் பாரு. நான் வெளியே போயிட்டு வரேன்!'' என்று கிளம்பிப் போனாள்.

''இனிமே 'ஸண்டே'யைக் காலண்டர் லேந்து அடிச்சுடப் போறேன்!''

அவனுக்குச் சிரிப்பு வந்தது. எந்த நிலையிலும் அவள் தனது அதிருப்தியையோ கோபத்தையோ காண்பிக்காமல் அதை நகைச்சுவையாக்கிறாள்.

சட்டென்று கவனம் கலைந்தது. கார் நிற்கும் ஓசையும், தாரா யாருடனோ பேசிக் கொண்டு வருவதும் கேட்டது. இன்றைக்கு அவள் காரில் போகவில்லை என்கிற வியப்புடன் அவன் கதவைத் திறக்கச் சென்றான். திறந்து ஆச்சரியமடைந்தான்.

தாராவுடன் லோபோ நின்றிருந்தார்.

''உன்னை ரெண்டு திட்டுத் திட்டிவிட்டுப் போகலாம் என்று வந்திருக்கிறேன்'' என்று உள்ளே நுழைந்தார்.

''உங்களுக்கு அதற்குப் பூரண உரிமை இருக்கிறது'' என்று அவன் சிரித்தான்.

லோபோ அவன் முதுகில் ஒரு ஷொட்டு கொடுத்தார். ''ஞாயிற்றுக் கிழமைகளில் மனைவியைக் கவனிக்க நேரமில்லாமல் என்ன ஆபீஸ் வேலை பார்க்கிறாய்? எதற்கு பார்க்கிறாய்?''

. அவன் கூச்சத்துடன் புன்னகை செய்தான். ''அவசரமாகச் சில விஷயங்களை நாளைக்குப் பம்பாய் ஆபீஸுக்கு அனுப்ப வேண்டும்!''

''ஒரு நாள் ஒத்திப்போட்டால் உலகம் ஸ்தம்பித்து விடாது. நல்ல வேடிக்கை. எத்தனை அழகிய மனைவி! அதுவும் புதிய மனைவி! எத்தனை அசட்டுத்தனமாய் நடந்து கொள்கிறாய்! எனக்கு அவமானமாக இருக்கிறது. அவள் தனியாகக் கடைத் தெருவில் நடந்து கொண்டிருந்தாள். ட்ராப் பண்ணி விட்டுப் போக வந்தேன்!''

தாரா அதற்குள் டீயைப் போட்டுக் கொண்டு வந்தாள்.

''எனக்குத் தனியாய்ப் போய்ப் பழக்கம் மிஸ்டர் லோபோ. ஐ டோண்ட் மைண்ட் அட் ஆல்!''

''ஒண்டர்ஃபுல்!'' என்று லோபோ புருவத்தை உயர்த்தினார். ''இத்தனை நல்ல பெண்ணாக இவள் இருப்பது உன் அதிர்ஷ்டம் கார்த்திக்! இன்னொருத்தியாக இருந்தால் பிடுங்கி உயிரை எடுத்திருப்பாள்.''

''தெரிந்துதான் கல்யாணம் செய்து கொண்டேன்!''

''கண்ணாமூச்சி விளையாட்டு மாதிரி—அவன் என்னைத் துரத்தி நான் அவனைத் துரத்திக் கடைசியிலே.....''

தாரா பகபகவென்று சிரிக்க, லோபோவும் சிரித்தபடி அவனுடைய ஃபைலைக் காட்டி, ''இதில் முடியவா?'' என்றார்.

தாரா கார்த்திக்கின் அருகில் வந்து நின்று லோபோ எதிரில் நிற்கிற கூச்சமில்லாமல், அவன் இடையைச் சுற்றிக் கையால் அணைத்து. ''துரத்துகிற டென்ஷன் இல்லை இப்போது. ஐ வாஸ் க்ரேஸி அபௌட் ஹிம். அவனைப் பிடித்து விட்டேன். அதுவரையில் எனக்குச் சந்தோஷம்!''

''ஷீ இஸ் கிரேட் ஐ ஸே!'' என்றார் லோபோ, ஆச்சரியம் மாறாமல்.

''வேலைக்குப் போகிறாயா?''

''அவனுக்குப் பலவித வேலைகள் – சமூக வேலைகள்.''

''ஆ! இன்ட்ரஸ்டிங்!'' என்று லோபோ சவர்ச்சியாகச் சிரித்தார். ''என்ன மாதிரி?''

''வேலைக்குப் போகும் பெண் தொழிலாளர்களின் நலனைக் கவனிக்கும் சங்கத்தை நடத்தும் பொறுப்பு எனக்கு!''

லோபோ சட்டென்று அவளை வியப்புடன் பார்த்துப் பகபகவென்று சிரித்தார்.

''என்னால் நம்ப முடியவில்லை! பூ மாதிரி இருக்கிறாய். லெஃப்டிஸ்டா?''

''இல்லை. ஹ்யூமனிஸ்ட்!''

லோபோ மறுபடியும் உற்சாகத்துடன்சிரித்தார். அருகில் வந்து அவள் கன்னத்தைத் தட்டி ''குட்'' என்றார். ''ஐ லைக் யூ. நாம் மறுபடி சந்திக்க வேண்டும். அடுத்த 8ம் தேதி என் வீட்டுக்கு வாருங்களேன். இரண்டு பேரும். பார்ட்டி இல்லை. ஒரு சின்ன இசை நிகழ்ச்சி.''

தாரா பதில் ஏதும் சொல்லாமல் கார்த்திக்கைப் பார்த்தாள். அவன் பட்டுக் கொள்ளாமல் சிரித்தான்.

''இன்னும் மூன்று வாரம் இருக்கிறது அதற்கு. முடிந்தால் நிச்சயம் வருகிறோம்'' என்று தாரா சொன்னபோது ஆச்சரியம் ஏற்பட்டது.

லோபோ அவனுடைய கையைக் குலுக்கினார். ''தாங்க்யூ'' என்றார் வசீகரமாக. ''எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன்!''

அவர் கிளம்பிச் சென்றதும் அவன் மறுபடி தன் ஃபைலை எடுத்து வைத்துக் கொண்டான். அவள் அவன் அருகில் உட்கார்ந்து அவன் தோளில் முகத்தை அழுத்தினாள்.

''என்ன கார்த்திக் இது? இன்னும் உன் வேலை முடியலியா? லோபோதான் அவசரமில்லை என்றாரே?''

''அவருக்கு என்ன வந்தது? பொறுப்பு என்னுடையது. நாளைக்கு பம்பாய்க்குப் போற ஒருத்தர் கிட்டே இதைக் கொடுத்தே ஆகணும். ஒரு பொம்பளையை ப்ளஸ் பண்ண



ஒரு மாம்பழத்தின் விலை 5 ரூபாயா என்று திகைக்கிறீர்களா? எந்த நாட்டில் என்று திகைக்கிறீர்களா? நமது தமிழ் நாட்டில் உள்ள கோயம் புத்தூரில்தான் இந்த அநியாய விலைக்கு மாம்பழம் விற்கப்படுகிறது. (ஏப்ரல் 15 நிலவரம்) இதுவரை இல்லாத கடுமையான விலை உயர்வு மாம்பழத்திற்கு இந்த வருடம் ஏற்பட்டுள்ளது. போகப் போக விலை குறையலாம் என்று வியாபாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

—பூவை தங்கபாரதி

ணுங்கிறதுக்காக லோபோ இங்கே சொல்ற வார்த்தைக்கும் ஆபீஸ்லே பேசற வார்த்தைக்கும் வித்தியாசம் இருக்கு!''

''அந்த லோபோ ஒரு க்ரூக்!''

கார்த்திக் பெரிதாகச் சிரித்தான் ''ஐயோ பாவம், உன்னை எத்தனை புகழ்ந்தார் அவர்!''

''வேஷதாரிகளைக் கண்டா எனக்குப் பிடிக்காது., கார்த்திக்! வேஷம் போட்றவா யாரு, போடாதவா யாருன்னு உனக்கு இன்னும் தெரியல்லே!''

அவன் செல்லமாக அவளை அணைத்து நெற்றியில் முத்தமிட்டான்.

''அவர் வேஷம் போட்டார்னே வெச்சுக்குவம். என்னைப் பாதிக்காதவரைக்கும் எனக்கென்ன வந்தது?''

''நீ பேசற இந்தத் தத்துவம் எனக்கு அதிர்ச்சி யளிக்கிறது கார்த்திக். எனக்கு ஏமாத்தமளிக்கிறது.''

அவள் முகத்தில் பிரத்யட்சமாகத்தெரிந்த ஏமாற்றமும் அதிர்வும் அவனைக் குமப்பின. அவன் தன்னைச் சமாளித்துக் கொண்டு பார்வையை மறுபடியும் ஃபைலுக்குத் திருப்பினான்.

''இதைப் பத்தி நாம அப்புறமா பேசலாமா? எனக்கு வேலை இருக்கு!''

அவள் மறு பேச்சுப் பேசாமல் போனது அவனுள் கொஞ்ச நேரத்துக்கு ஒரு நமைச்சலை ஏற்படுத்திற்று.

இரவுச் சாப்பாட்டை மௌனமாக முடித்து மறுபடி ஃபைலுக்குள் மூழ்கி எழுந்து படுக்கைக்குப் போகும்போது அடித்துப் போட்டாற்போல் உடம்பு அசத்திற்று. புத்தகத்தை மார்பில் விசிறியாக விரித்துத் தாரா தூங்கிக் கொண்டிருந்தாள். அவன் வெகு ஜாக்கிரதையாக அதை எடுத்து மடித்து மேஜை மேல் வைத்தான். விளக்கை அணைத்துப் படுத்த சற்று நேரத்தில் தூக்கம் செருகிக் கொண்டு வந்தது. தூக்கக் கலக்கத்தில் தாராவின் கை அவன் மார்பை வளைத்துக் கொள்வதும் கண்ணைத் திறக்காமல், ''எனக்கு ரொம்ப டயர்டா இருக்கு கண்ணு!'' என்று அவன் சொல்வதும் கனவாக உணர்வில் நின்றது.

''யாரோ லிக்க் ஸ்மிதான்னு தமிழ் சினிமாவிலே ஸெக்ஸ் பாம் இருக்காளாமே அவளை மாதிரி இனிமே டிரஸ் பண்ணிண்டு உன் எதிரே நிக்கப் போறேன். அப்பவாவது உன் கண்ணுலே நான் படுவேனான்னு பார்க்கறேன்.''

''அந்த ஸிலுக்கே எதிரே நின்னாலும் என்னாலே இப்பக் கண்ணைத் திறக்க முடியாது'' என்று அவன் சிரித்துவிட்டுத் தூங்கிப் போனான்.

அடுத்த ஏழாம் தேதி, லோபோவின் விடாத ஞாபகப்படுத்தலினால், தாராவிடம்,

''நாளைக்கு லோபோ வீட்டுக்குப் போகணும் வருவியா?'' என்றபோது அவள் முகத்தில் இதுவரை அவன் பார்த்திராத சோர்வு தெரிந்தது. மறு விநாடி அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு சிரித்தாள்.

''வரேன்! என்னு அந்தச் சாக்கிலே உன்னோடு கொஞ்ச நேரம் சேர்ந்திருக்கலாம்.''

அவனுக்குக் காரணம் புரியாமல் எரிச்சல் ஏற்பட்டது.


''எனக்கு வேலை ஜாஸ்தியானதினாலேதான் உன்னோடு அதிகம் இருக்க முடியலேன்னு நீ புரிஞ்சுக்கணும். பரிகாசமோ இடக்கோ செய்ய வேண்டிய விஷயமில்லே இது!''

அவள் சரேலென்று தன்னுடைய பார்வையைத் திருப்பிக் கொண்டாள். ஜன்னல் கம்பிகளைப் பிடித்தபடி தெருவைப் பார்த்து மெல்லிய குரலில் சொன்னாள்:

''ஸாரி கார்த்திக், எனக்குள்ள எப்படி இப்படி ஒரு முட்டாள்தனம் வந்ததுன்னு புரியல்லே. ஐ தேங் பீகம் எ ஸென்டிமென்டல் ஃபூல்!''

வார்த்தைகளில் கண்ணீர் தெறித்தாற் போல் அவனுக்குப் பிரமை ஏற்பட்டது.

(தொடரும்)



ஒரு கவிஞன் விஞ்ஞானியான போது...

[பிள்ளைத்தனமான ஆசைகளே தத்துவங்களின் தாய் போலும். ஒரு மொட்டு மலர்ந்து விடுவதைப் பார்த்துவிட வேண்டுமென்ற பிள்ளை பிடிவாதத்தில் ஒரு கவிஞன் அடையும் அவஸ்தைகளும், அனுபவங்களும்.]

அரும்பான நாள் முதலாய் எனக்கோர் ஆசை
அடி நெஞ்சில் நான்முடிந்து வைத்த ஆசை
அரும்பொன்று மலர்கின்ற நிமிஷம் தன்னில்
அருகிருந்து தரிசிக்க வேண்டும்: அந்தச்
சிறுமடல்கள் விரிகின்ற சின்னச் சப்தம்
செவிமடலில் விழ வேண்டும்; பூவின் ஜீவன்
சுறுசுறுப்பாய்க் கிளர்ந்தெழுமே! அடடா அந்தச்
சுகத்துக்குள் நான்கரைந்து போக வேண்டும்.


தென்றலுக்கு ரகசியமாய் விரல்முளைத்துத்
தீண்டுவதால் மலர்கிறதா? பூவில் தேனை
மொண்டுகொள்ளும் வண்டினங்கள் அரும்பை வந்து
முட்டுவதால் மலர்கிறதா? இதனைக் கூடக்
கண்டுபிடிக் காமலென்ன கவிதை என்றே
கனவுகளில் இனமழுதேன்; ஒருநாள் நானும்
துண்டுவிரித் துட்கார்ந்தேன் கொடியின் கீழே
தும்பிதனைப் பிடிக்குமொரு பிள்ளை போலே.

கொடிகளிலே உறங்குகின்ற குழந்தை என்னைக்
கூப்பிடட்டும் வாய்திறந்து: நானும் அந்த
தொடிகளிலே கரந்துவரும் சந்தோஷத்தில்
நூறுவய தாகும்வரை மகிழ்வேன்; எந்தன்
மடிதனிலே கட்டிவைத்த அறிவை எல்லாம்
மறுதலிக்கக் கூடுமிந்தக் காட்சி என்றே
விடிவிளக்கைப் போலங்கே தனித்தி ருந்தேன்
விழிக்கட்டும் அரும்பென்றே விழித்தி ருந்தேன்!

கண்களைத்துப் போனதென்று சற்றே கொஞ்சம்
கண்ணிமைத்து நான்திறந்தேன்: அதற்குள் அந்தப்
பொன்னிதழ்கள் பூத்திருக்கக் கண்டேன். நொந்தேன்
போடாபோ எனஅலறி மண்ணில் வீழ்ந்தேன்!
கண்ணுக்குத் தெரியாத ரகசி யத்தைக்
கைதுசெய்து பார்ப்பதுதான் கவிதை போலும்
அண்ணாந்து பார்க்கும்பூ மட்டு மல்ல
அழகுடைய தெல்லாமே ரகசி யம்தான்.

புகைப்படம்: உ.ந்ரா





சுதந்திரமும் ஒரு விலைப் பொருளே!


விஞ்ஞானப் பரிசோதனைகளைப் பற்றி மாணவிகள் எழுதியிருந்த ரிகார்ட் நோட் புத்தகங்களைத் திருத்தியாயிற்று. சூரியன் நாள் முழுவதும் ஓடி உழைத்துக் களைத்துப் போய் மேல் கடலில் இளைப்பாற இறங்கிக் கொண்டிருந்தான். அநீதா தன்னை அறியாமலேயே பெருமூச்செறிந்தாள். நோட் திருத்தும் வேலை முடிந்ததே என்பதால் தோன்றியதல்ல அப்பெருமூச்சு. சில நாட்களில், சிறப்பாக மாலைப் பொழுதில் இப்படி உணர்வு தோன்றி வருத்தும் அவளை. அப்பொழுதெல்லாம் திருமணம் செய்துகொள்வதால் ஏற்படும் பல கஷ்டங்களை அவள் அறிவுபூர்வமாக வரிசைப்படுத்தி அழகாக எடுத்துக் கூறி இந்த உணர்வை அடக்க முயல்வாள்.

'பெண்ணின் சுதந்திரம் திருமணத்தால் பறிக்கப்பட்டு விடுகிறது. கணவன் நல்லவனாகவே இருக்கலாம். கணவன் எப்படி இருந்தாலும் மணமான பெண் சுதந்திரமாக வாழ முடியாது. இன்றைய இந்து சமூகத்தில் நிச்சயமாக முடியாது.'

இந்த வாதத்தை அறிவு எடுத்து வீசிய பிறகு ''ஆமாம்! சுதந்திரம், சுதந்திரம் என்று சொல்லித்தான் 35 வயது ஓட்டி விட்டாய். திருமணத்தால் அழிந்துவிடுவதானால் அது நாசமாகப் போகட்டுமே! இப்பொழுது சுதந்திரமாக இருக்கிறாயே, என்ன சுகத்தைக் கண்டு விட்டாய்? வேலை செய்யும் பெண்களின் ஹாஸ்டலில் ஓர் அறையில் மாலை நேரத்தில் தன்னந் தனியாக உட்கார்ந்து பெருமூச்சு விட்டுக் கொண்டு இருக்கிறாய்! சுதர்சனை அப்படி போ, போ என்று விரட்டி இருக்கா விட்டால்... இன்றைக்குக் கல்யாணம் ஆகி பன்னிரண்டு வருஷங்கள் ஆகியிருக்கும்!'' முணு முணுத்துக்கொண்டே மெல்லத் தணிந்து அடங்கியது உணர்வெனும் குரல்.

சுதர்சனின் நினைவு வந்து விட்டால் அவளை ஒரு ஆட்டம் ஆட்டிவிட்டுத்தான் நீங்கும்! எத்தனை ஆசை வைத்திருந்தாள் அவன் மேல்! அவனுக்கு இவள்தான் உயிர், பிரபஞ்சம் எல்லாம்! அவன் தன் வாயைத் திறந்து, ''உன்னை நேசிக்கிறேன்!'' என்று சொல்லவே தேவையில்லையே! அவனுடைய பிரகாசமான, ஒளி வீசும் கண்களே அப்படிக் காதலைக் கொட்டி விடுமே!





ஏ. வி. சுப்பிரமணியம்

அத்தனை ஆசையையும் தன் கொள்கை என்னும் தீயிலிட்டுப் பொசுக்கினாள் அநீதா!

''திருமணம் செய்து கொள்வது என்பது என்றால் கனவிலும் நினைக்க முடியாத ஒன்று. இதுவே என் முடிவான தீர்மானம்!'' பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் நிதானமாக உணர்ச்சி வசப்படாமல் அவள் சொன்ன வார்த்தைகள் இவை.

சுதர்சனுக்கு இவை பெரும் அதிர்ச்சியைத் தந்தன.

''புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு வியாபாரக் கம்பெனியில் சம்பளம் பெறும் ஊழியன்தானே இவன், இவனை விடப் பண வசதி உள்ளவன் எனக்குக் கிடைக்க மாட்டானா? என்ற எண்ணத்தில் என்னை விசிறி எறிந்து விட்டாய்! இதை முன்னாலேயே நீ சொல்லி இருக்கலாமே? என்னைச் சித்திரவதை செய்யாமல், இப்பொழுது கொடுக்கும் கல்தாவை அப்போதே கொடுத்திருக்கலாமே?'' என்ற சொற்கள் அவனுடைய இதயத்திலிருந்து சீறிக் கிளம்பியவை — இவற்றை எறிந்துவிட்டு விர்ரென்று வெளியேறினான் சுதர்சன். அவனை அதற்குப் பிறகு அநீதா பார்க்கவே இல்லை.

பிடிவாதம் என்ற குணமே ஒரு பெண்ணுரு — அழகான ஒரு பெண்ணுருக் கொண்டு பிறந்திருக்கிறது என்றுதான் அவளுடைய பெற்றோரும் பள்ளிக்கூட ஆசிரியைகளும் சொல்வார்கள். குழந்தையாக இருக்கும் பொழுதே மற்றவர் யார் என்ன சொன்னாலும் அவள் தனக்குத் தோன்றிய படியே செய்வாள். 'வேண்டாம்; செய்யாதே!' என்றால் பிடிவாதத்துடன் அதையே உறுதியுடன் பலமுறை செய்வாள். சுதந்திரமாகத் தன்னிஷ்டம் போல் நடத்தல், பிடிவாதம் இந்த இரு குணங்களும்தான் இன்று 35 வயதில் அவள் தன்னந் தனியாக ஹாஸ்டலில் வாழ்க்கையை நடத்தும் நிலைக்குக் கொண்டு வந்து விட்டன.

கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஏழாகி இருந்தது. அறையைப் பூட்டிக் கொண்டு வழக்கப்படி உலாவப் போனாள் அநீதா. பார்க்கில் ஒரு முறை சுற்றி வருவது அவளுக்கு ஒரு பொழுது போக்கு. இன்று பார்க்கில் முதன் முறையாகச் சரளாவையும் அவள் கணவனையும் பார்த்தாள். அநீதாவுக்கு நண்பர்கள் அதிகம் பேர் இல்லை: சரளாவை அவளுக்குப் பிடித்திருந்தது. அவள் குழந்தை விஜயஸ்ரீ அநீதாவின் மாணவி. பெற்றோர் ஆசிரியர் கூட்டங்களில் சரளா முக்கியமான பங்கு கொள்வாள். அதிலிருந்து பழக்கம்.

சரளாதான் முதலில் பேசினாள்: ''வணக்கம், மிஸ் அநீதா! இவர்தான் என் கணவர்! அவருக்குக் கொஞ்சம் இதய பலவீனம். தினமும் கொஞ்ச தூரமாவது வாக் செய்யச் சொல்லி யிருக்கிறார்கள். அதற்காகத்தான் அழைத்து வருகிறேன்!''

சரளாவின் கணவர் — தாமோதர ராவ் ஒரு பிரபல வியாபாரக் கம்பெனியின் தென் மண்டல மானேஜர் — கொழு கொழு வென்று இருந்தார்.

''வேலைக்காரன் சமையல் அவருக்கு ரொம்பப் பிடித்துப் போய்விட்டது. தேவைக்கு மேல் சாப்பிடுகிறார். அதனால் நான்தான் சமைக்கிறேன். எடை குறைந்திருக்கிறது!''

. இந்த நகைத் துணுக்கை அநீதா அநுபவித்தாள். தாமோதர ராவ் சிரித்துக் கொண்டே ஆட்சேபித்தார்.

சரளா செல்லமாகத் தெலுங்கு மொழியில் ஏதோ சொன்னாள். சில நிமிஷங்களில் அநீதா அவர்களிடையே இருந்த அன்பைத் தெரிந்து கொண்டாள்.

பள்ளிக்கூடக் கமிட்டியின் செயலர் பக்த வத்சலு நாயுடு மனைவிக்கு இங்கிலீஷ் பேசக் கற்றுக்கொடுக்க ஒப்புக்கொண்டாள் அந்தா.

வெகு சீக்கிரத்தில் நாயுடு வீட்டில் முக்கியமான தீர்மானங்களையெல்லாம் செய்வது ஸ்ரீமதி நாயுடுதான் என்பதை அந்தா உணர்ந்து கொண்டாள்.

''ஏன் நீங்கள் இப்படித் தனியாக இருக்கிறீர்கள்? என்னிடம் சொல்லலாம் என்றால் சொல்லுங்கள்!'' என்று மெல்ல ஆரம்பித்தார் ஸ்ரீமதி நாயுடு, ஒரு நாள் பாடம் முடிந்த பின்.

''கல்யாணம் செய்து கொண்டால் நமது சமூகத்தில் கணவனுக்கு அடங்கித்தான் மனைவி நடக்க வேண்டும். பெண்ணுக்கு மணமான பிறகு சுதந்திரம் ஏது! அதனால் தான் தனியாக இருந்து பார்ப்போமே என்றிருக்கிறேன். இதில் ஒரு கஷ்டமும் இருப்பதாகத் தெரியவில்லை எனக்கு!''

''அப்படிக் கணவனுக்கு மனைவி அடங்கித்தான் நடக்க வேண்டும் என்று இல்லை. உண்மையாக வாழ்க்கையில் எல்லா வீடுகளிலும் பெண்கள் அப்படி நடப்பதில்லை. இதிலே சூட்சமம் ஒன்று கவனிக்க வேண்டும், அம்மா! என் கணவரது பெயரைத்தான் நான் வைத்துக் கொண்டிருக்கிறேன். இங்கிலீஷ் முறையில் என் பெயர் ஸ்ரீமதி நாயுடு! உறவுக்காரர்கள் வீட்டுக்குப் போகும்போது அவர் துணையில்லாமல் தனியாகப் போக மாட்டேன். இதெல்லாம் ஒரு மேல் பூச்சு அம்மா! உண்மையிலே அவர் வியாபாரத்திலே நான் தலையிடுகிறதில்லை; வீட்டு விவகாரங்களில் அவர் தலையிட மாட்டார்! என் யோசனைப்படிதான் வீட்டு விஷயங்களில் அனுசரித்து நடப்பார். எனக்குப் பறி போயிருக்கும் சுதந்திரம், கணக்குப் பார்த்தால் குறைவு; அவர் இழந்ததே அதிகமாக இருக்கலாம்!''

ஆண்டாள் என்ற பெண் சோம்பேறி. வீட்டுப் பாடத்தை ஒழுங்காக எழுதி வர மாட்டாள். ஒரு நாள் கோபம் தாங்க முடியாமல் அந்தா அவளை நன்றாகத் திட்டி வெளியே அனுப்பி விட்டாள். ஆண்டாள் வீட்டில் போய் ஒன்றுக்கு இரண்டாகப் புகார் செய்திருக்க வேண்டும். அவள் தந்தை தலைமை ஆசிரியையிடம் வந்து பணிவுடன் தம் பெண்ணிடமிருந்து கேட்டறிந்த புகாரைத் தெரிவித்தார்.

மாலையில் தலைமை ஆசிரியை அந்தாவை அழைத்தார். ''கல்யாணம் ஆகிக் குழந்தைகள் இருந்தால் பொறுமை என்ற குணம் பழகிவிடுகிறது. எங்களை யாராவது அடித்தால் கூடத் திருப்பி அவர்களை அடிக்க வேண்டும் என்ற அளவுக்குக் கோபம் வருவதில்லை.'' என்றார் தலைமை ஆசிரியை.

அந்தா சிரித்துக் கொண்டாள், அடுத்துச் சற்று விஷமமாகப் பேச ஆரம்பித்தாள். ''திருமணம் ஆகிவிட்டால் நமக்கு எல்லாச் சுதந்திரமும் போய் விடுகிறது. இது ஒன்று தான் நஷ்டம் என்று நினைத்திருந்தேன்! நீங்கள் சொல்வது பெரிய அதிர்ச்சியாக இருக்கிறது, எனக்கு. கல்யாணம் ஆனவர்களுக்குத் தன்மானம் என்ற உணர்ச்சியும் முழுமையாக அழிந்து போய் விடுகிறது – அனுபவம் முதிர்ந்த நீங்களே சொல்கிறீர்கள்! என்ன நடந்தாலும் ரோஷம் வராமல் பொறுத்துப் போகிறீர்கள் என்றால்.... ரொம்ப சீரியஸான விஷயம் அம்மா, இது!''

''நாம் எதையோ ஒன்றை அடைவதற்காகத்தான் ஒன்றை இழக்கத் தயாராகிறோம். திருமணம் மாத்திரமல்ல, எல்லாத் துறைகளிலும் இதுதான் உண்மையாக நடக்கிறது. மனத்தில் உள்ள காம உணர்ச்சியை நல்ல நெறியான முறையில் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்ற ஆசையால் கொஞ்சம் அளவு சுதந்திரம் போனாலும் போகிறது என்று கழுத்தை நீட்டுகிறோம், தாலி கட்டிக் கொள்ள! இப்படியேதான் எங்குமே...''

வாழ்க்கையில் எல்லாமே ஈடு செய்தல், காம்பன்சேஷன் என்ற தத்துவப்படியே இயங்குகிறது என்பதை அந்தா மனத்தில் போட்டுப் புரட்டியபடியே ஹாஸ்டலுக்குப் போனாள். இதுவரையில் அவள் யோசனைகள் இந்தத் திசையில் சென்றது இல்லை. இது தான் உண்மை; சற்றுத் திகைப்புடன், சற்றே அதிர்ச்சியுடன் இப்படிச் சிந்திக்கத் தொடங்கினாள். இதன் உண்மை கொஞ்சம் கொஞ்சமாகப் புலப்படத் தொடங்கியது அந்தாவுக்கு....

இதற்கு ஏழாம்நாள் ஆங்கில தினசரிகளில் வெளியான திருமண விளம்பரத்தை யாருமே அந்தாவுடன் பொருத்திப் பார்க்கவில்லை.– இதை அந்தாதான் எழுதிக் கொடுத்துப் போடச் சொல்லியிருக்கிறாள் என்பதை யாரும் ஊகித்தறிந்திருக்க முடியாது.

விளம்பரம் வெளியான இரண்டாம் நாள் மொத்தம் 13 கடிதங்களில் இரண்டைத் தேர்ந்தெடுத்தாள். இருவருக்கும் சுருக்கமாகக் கடிதம் எழுதினாள். ஏகாம்பரநாதனை (வயது நாற்பது) வியாழக் கிழமை ஹாஸ்டலுக்குக் காலை எட்டரை மணிக்கு வரச் சொன்னாள். ராமகிருஷ்ணன் (வயது 32)

சலூன்காரர்: ''வெளியே போவதற்கு முன் காதெல்லாம் சரியாயிருக்கான்னு பார்த்துக்கோங்க. மறுபடி அறைக காணோம் இதைக்காணோம்னு வந்து சொல்லக்கூடாது.

–ஸ்ரீமை. அ. கதிர்வேல்



தன்னை ஆபீஸில் ஒரு மணிக்குச் சந்திக்கலாம் என்று எழுதியிருந்தான். அதே வியாழனன்று ஒரு மணிக்கு அவனுடைய ஆபீஸில் சந்திப்பதாகப்பதில்எழுதினாள்.

வியாழக் கிழமை பொழுது விடிந்தது. சீக்கிரமே எழுந்து குளித்துத் தயார் செய்து கொண்டாள். அடிக்கடி கடிகாரத்தைப் பார்த்தாள்: அது மெல்லப் போகிறதோ என்று ஹாஸ்டல் கடிகாரத்தையும் பார்த்து ஒப்பிட்டுக் கொண்டாள்.

எட்டரை மணிக்குக் கீழே இறங்கி வந்தாள். விசிட்டர் லாபி என்ற சிறு அறையில் தான் ஹாஸ்டலுக்கு வருகிற வெளி ஆட்கள் காத்திருக்க வேண்டும். எட்டு நாற்பதுக்கு மேல் மூச்சு வாங்க ஒருவர் வந்தார். 'மிஸ்டர்ஏகாம்பரநாதனா?'என்றுகேட்டுக்கொண்டு அநீதா எழுந்தாள். மேல் மூச்சு வாங்கியதால் வந்தவர் பேச முடியாமல் 'ஆமாம்' என்று தலையை அசைத்தார்.

அநீதாவின் முகம் வாடிவிட்டது. வந்தவர் தம் வயது நாற்பது என்று கொடுத்திருந்தார். எப்பொழுது நாற்பது வயதைத் தாண்டினார் என்று குறிக்கவில்லை. பத்து வருஷங்களாவது ஆகியிருக்கும் என்று கடுமையுடன் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

வந்தவர் அநீதாவைக் காலை உண்டிக்கு அழைத்தார். இயந்திரம் போல் அவருடன் சென்றாள். பக்கத்தில் ஒரு ஹோட்டலில் நுழைந்தார்கள்.

அநீதா அவருடன் இருந்தது மொத்தம் அரை மணி நேரம்தான். அதில் இருபத்தெட்டு நிமிஷங்கள் அவர்தாம் பேசினார். அவர் பேசியது எல்லாம் பணத்தைப் பற்றிய பேச்சு. தம் சொத்து, வரும்படி, எத்தனை பங்குகள் எந்தக் கம்பெனியில் வாங்கியிருக்கிறார், பாங்குகளில் இரண்டு மூன்று வருட டிபாசிட்டுகள் எத்தனை... அநீதாவிடம் அவர் கேட்டறிய விரும்பியது அவள் சம்பளம், பிராவிடெண்ட் பண்டு, மிச்சம் செய்திருக்கிறாளா, இன்ஷ்யூர் செய்திருக்கிறாளா என்பதுதான்.

வெறுத்துப்போய் அநீதா எழுந்திருந்தாள். கடைசி வாய்க் காப்பியை விடாமல் சாப்பிட்டு விட்டு அவரும் எழுந்தார். ''முகூர்த்தம் எப்பொழுது வைத்துக் கொள்ளலாம்?'' என்று நேரடியாகக் கேட்டு விட்டார். ''பின்னால் எழுதுகிறேன்'' என்று சொல்லி விர் என்று கிளம்பி வந்து விட்டாள்.

பள்ளிக்கூடத்தில் அவளுக்கு ஒன்றும் ஓடவில்லை. 12-30 மணிக்குத் தலைமை ஆசிரியைவிடம் சொல்லிக் கொண்டு ஹாஸ்டலுக்கு வந்து, விசேஷ கவனத்துடன் புதிய புடவை ரவிக்கை உடுத்திக் கொண்டு பவுடர் பூசித் தலையை ஜாக்கிரதையாக வாரிக் கொண்டு வெள்ளி மயிர்கள் இருந்ததை உள்ளே அழுத்தி வெளியே தெரியாதபடி செய்து கொண்டிருந்தாள்.

ராமகிருஷ்ணன் வேலை செய்து கொண்டிருந்த ஆபீஸ் ரிசப்ஷனிஸ்ட் அவளை ஒரு மாதிரி கேலியாகப் பார்த்தாள். ராமகிருஷ்ணனைப் போன் செய்து கேட்டுவிட்டு உள்ளே போக இசைவு தந்தாள்.

தாம்பரத்திலிருந்து 18-ஏ பஸ்ஸில் வரும்பொழுது பஸ் ஓரிடத்தில் நிறுத்தி கண்டக்டர் டிக்கட் கொடுத்துக்கொண்டிருந்தார். பஸ்ஸில் கும்பல் அதிகமாக இருந்ததால் டிக்கட் கொடுக்க நேரமாயிற்று. பஸ்ஸின் டிரைவர் சீட்டிலிருந்து அருகில் இருந்த ஒருவர் ''நேரமாகிறது கண்டக்டர்.. கொஞ்சம் ஊதுங்கள்!'' என்றார். உடனே கண்டக்டர் கூறினார்: ''இன்னும் கொஞ்சம் ஊதினால் நான் வெடித்து விடுவேன்!'' இதைக் கேட்டதும் பஸ்ஸில் இருந்த எல்லோரும் கொல்லென்று சிரித்துவிட்டோம்.

—ம. தே.



இதயம் படபடக்க ராமகிருஷ்ணன் அறைக்குள் நுழைந்தாள். முப்பது வயது தான் இருக்கும். கிருதா, மீசை முகத்தை மறைத்தன. அவன் பேச்சு, பார்த்த பார்வை எல்லாம் அநீதா பழகாத, பார்த்திராத, கனவுகூடக் கண்டிராத வேறோர் உலகத்தைச் சேர்ந்தவையாக இருந்தன.

பதினைந்து நிமிஷங்கள் கூட பேசியிருக்க மாட்டார்கள். ராமகிருஷ்ணன் திடீரென்று எழுந்தான். ''உங்களைச் சந்தித்ததில் ரொம்பச் சந்தோஷம்.... நான் திருமணம் செய்து கொள்ளும் யோசனையைக் கொஞ்ச காலத்துக்கு ஒத்திப்போடும்நிலை ஏற்பட்டுவிட்டது. உங்களுக்கு நல்ல இடத்தில் ஆகவேண்டும்!'' என்று பேச்சை முடிவுகட்டி அவளை அனுப்பி விட்டான்!

''இவன் யார் என்னை ஒதுக்கித் தள்ள? இவன் எத்தனை பெண்களைத் தன் வலையில் பிடித்து அழித்திருக்கிறானோ? அந்த ரிசப்ஷனிஸ்ட் பார்த்த பார்வைக்கு என்ன அர்த்தம்? 'நீயுமா மாட்டிக் கொண்டாய்?' என்ற ஏளனப் பார்வைதானே அது? எப்படியோ தப்பித்தேன். ஆனால் அவனை இதைச் சொல்ல விட்டிருக்கக் கூடாது! நானே முன்வந்து 'உன்னைப் பிடிக்கவில்லை' என்று அவன் முகரக் கட்டைக்கு எதிரில் சொல்லி விருக்க வேண்டும். என்ன திமிர், என்ன திமிர்!'' என்று புலம்பிக் கொண்டே பள்ளிக்கூடத்துக்குத் திரும்பினாள்.

இப்பொழுதெல்லாம் முன்னைவிட அதிகமாகவே தன்னையறியாமல் பெருமூச்செறிகிறாள் அநீதா.

துணுக்கு எழுத்

கன்னியாகுமரி மாவட்டத்தில் மேல கிருஷ்ணன் புதூர் என்ற ஊரில் ஒரு கோவிலின் பெயர் ''ஊசி காட்டான்''. பழங்காலத்தில் இக்கோவிலைச் சுற்றி நிறைய ஊசி இலையுள்ள மரங்கள் நின்றதாகவும் அம்மரங்களிடையே இக்கோவில் இருந்ததாகவும் கூறுகின்றனர்.

—பி. இராமகிருஷ்ணன்

ஒருவர்: ''அந்தப் பெண் ஏன் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்கிறாள்?''

நண்பர்: ''அவளை அவர்கள் வீட்டில் கிளி போல வளர்த்திருக்கிறார்கள். அதனால்தான்!''

—பி.கே. சங்கர்

கடுமையான தண்ணீர்ப் பஞ்சத் தியூர் மதுரை தெற்கு கிருஷ்ணன் கோயில் அருகே ஒரு யானை குளிப்பதற்குத் தண்ணீர் கொடுத்தார்கள். அதன் விளைவு மறுநாள் அந்தவீட்டைநோக்கிப் பெண்கள் படையெடுத்து விட்டனர் தண்ணீருக்காக!

—சி. எல். ரவிச்சந்திரன்

மனைவி: ''நீங்க ஒட்ட
இருக்கலாம். அதற்காக
ஸ்கூல் புத்தகங்களுக்
போட்டுத் தரச் சொன்ன
மேலே 'இது கே. முரள
திருடப்பட்டது' என்று எழு
பது?''

—லலிதா . ெ

லண்டன் மியூசியத்தில் புதிதாக ஆறு பூனைகளை வேலையில் சேர்த்துக் கொண்டிருக்கின்றனர். அவற்றின் பராமரிப்புக்கு வருடத்திற்கு ஐம்பது பவுண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவைகளுக்குச் சாப்பாடு போடப்படுவதில்லை. மியூசியத்திலிருக்கும் எண்ணற்ற எலிகள் பழைய பொக்கிஷங்களை உருக்குலைப்பதைத் தடுக்கவே இந்த ஏற்பாடு. சாப்பாடு போட்டால் பூனைகள் சோம்பலாய்ப் படுத்து விடும் என்பதாலேயே அவைகளைப் பசியுடன் உலாவ விடுகின்றனர்.

—ஏ.வி. தேவன்

அம்மா:
வரன்
னேன்
அப்பா:
அம்மா:
தில்



...ளர்களுக்கு ஜே!

ஒரு தம்பதியர் தம் மகனுக்காகப் பெண் பார்க்கச் சென்றனர். அப்போது பிள்ளையின் அம்மா இவ்வளவு நகை போட வேண்டும் போன்ற பல கண் டிஷன்களைப் போட்டாள். மணப்பெண் ரோஷத்துடன், ''எங்களை இவ்வளவு கேட்கிறீர்களே நீங்கள் என்ன போடு வீர்கள்'' என்றாள். அதற்குப் பிள்ளை யின் தாயார் ''உங்க நகைகளை எடை போடுவோம். குறைஞ்சா சண்டை போடுவோம்'' என்றாள்!

—கலி லெம் உரையிலிருந்து
விஜயா நெடுஞ்செழியன்

காது கேளாதவர்களுக்கு நாயின் காதுகள்!

கண் பார்வையற்றவர்களுக்கு 'வழி காட்டி நாய்கள்' உதவுவதுபோல் இப் பொழுது செவிப் புலன் இல்லாதவர் களுக்கு உதவ நாய்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது. லண்டனில் பயிற்சி பெறும் இந்நாய்கள் சப்தம் கேட்ட வுடன் அதை ஆராய்ந்து பார்த்துத் தங்கள் எஜமானரைப் பிராண்டுவது, குதிப்பது, வாலை ஆட்டுவது போன்ற செய்கைகளால் உஷார்ப் படுத்திச் சப்தம் வந்த இடத்திற்கு அழைத்துச் செல்லும்.

வாசலில் அழைப்புமணிஒலித்தாலோ அடுப்பில் வைத்துள்ள குக்கர் அல்லது கெட்டில் 'புஸ்' என்றாலோ, நெருப்பு எச்சரிக்கை மணி அடித்தாலோ, இன் னும் இதுபோன்ற சப்தங்களுக்கு எஜ மானரை உடனே உஷார்ப்படுத்தும். அதிகாலையில் அலாரம் அடித்தால் இந் நாய்கள் எஜமானரின் படுக்கையில் தாவி அவரை எழுப்பிவிடும். இது மாதிரி காது கேளாதவர்களுக்குத் தங்கள் காதுகளைக் கொடுத்து உதவ நாய்கள் தயார்ப்படுத்தப் படுகின்றன.

தகவல்: ரிஸர்ச் அண்டு ரெஃபரன்ஸ்

...ளியாக
...பையன்
...அட்டை
...த்தின்
...ருந்து
...ாடுப்

...பா

...றைக்கு வந்த மெட்ராஸ்
...ப் பெண்ணிடம் சொன்

...தை என்ன சொன்னு?
என்னைப் பாழுங் கிணற்
...றேன் என்றிரு!
—பட்டாபிராமன்





''பஸ் ஸ்டாண்டில் பிச்சை எடுப்பது போல் நடித்தால் அவங்க இமேஜ் போயிடுமாம்.''
''அதற்காக?''
''ஏர் போர்ட்டில் பிச்சை எடுப்ப தாகக் கதையை மாத்தச் சொல்றாங்க''
—பி. ஆர். தே.



வேண்டாம் லகரம்!

கோமதி ஸ்வாமிநாதன்

யாரோ காசை வீசி 'சின்ன சைஸ்' 'பெரிய சைஸ்' என்று கிரைண்டர்களை வாங்கி வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்த்து விடுகிறார்கள். அப்படியெல்லாம் வாங்கிப் போடக் கூடிய கிரைண்டரா என்னுடையது? இல்லையே! இருந்த ஒரு கிரைண்டரைப் பத்திரப்படுத்தி வைத்திருந்தேன். அதற்கு என்ன கோபமோ? ஒரு நாள் சாப்பாட்டுக்குப் பிறகு வாய் கொப்பளித்தபோது சொல்லாமல் 'லபக்' என்று வெளியேறிவிட்டது. அசை போடும் என் கடைவாய்ப் பல்லைத்தான் சொல்கிறேன்!... அந்தமட்டில் வலி கிலி என்று உள்ளிருந்து ஸ்டிரைக் செய்து வெளியேற்றப்படாமல் கௌரவமாக டாடா காட்டிப் போய் விட்டது.

இது ஒன்றும் எனக்குப் புதிதில்லை. பல பற்கள் இப்படி நோட்டீஸ் கொடுக்காமல் வெளியேறியிருக்கின்றன. ஏதோ திரைப் பட செட்டிங் போல் கொஞ்சம் மானத்தைக் காப்பாற்ற முகப்பில் மேலும் கீழும் சில பற்கள் அலங்காரத்திற்கு இருந்தாலும் விழுந்த பற்கள் என்னவோ சதித் திட்டத்தோடுதான் வெளியேறியிருக்கின்றன. அதாவது பக்கவாட்டில் மேலே பல் இருந்தால், நேர் கீழே இடம் காலி. கீழே ஸ்ன்ய்று பாசம் கொண்டிருக்கும் பல் இருந்தால் அதற்கு நேர் மேலே வெற்று இடம்.

இந்த நிலையில் சீடை முறுக்கு என்று இன்னும் சபலத்தை யெல்லாம் நான் எப்போதோ விட்டு விட்டேன். அப்படி அநாயாசமாகக் கடித்துத் தின்பவர்களெல்லாம் என் கண்ணோக்கில் ஏஷியாட் விளையாட்டுக்களில் தங்கப் பதக்கம் வாங்கத் தகுதியானவர்கள்! எனக்கு, இட்லியும், தயிர்வடையும், ரசகுல்லாவும் போதும் என்று ஒதுங்கிவிட்டேன். அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சம் கரனமான பண்டங்களை உள்ளே தள்ள உதவிய அந்த ஒரு கடைவாய் கிரைண்டரும் விடைபெற்றுக்கொண்டு விட்டது. அதில் கொஞ்சம் ஏமாற்றம்தான்.


பல் டாக்டர் ஒருவர் என் நண்பர். அவரிடம் பேச்சுக் கொடுத்த நேரத்தில் அவர் அநாயாசமாக ஒரு யோசனையை அள்ளி வீசினார். ''இதோ பாருங்க! மிச்சம் இருக்கும் ஒரிஜினல் பற்களையும் எடுத்து விடுங்கள்! ஒரு பல் செட் மாட்டிக் கொண்டால் பெர்சனாலிடியும் கூடும்! 'இந்தப் பல் எப்போ விழுமோ? அந்தப் பல் எப்போ விழுமோ'? என்று நடுங்கிக் கொண்டிருக்க வேண்டாம்... இன்னிக்கே துவங்கிடலாமா?'' என்றார் அவர்.

''டாக்டர் சார்! நான் திரைப்படத்திலோ நாடகத்திலோ நடிக்கத் தயார் செய்து கொண்டிருக்கவில்லை. டெலிவிஷன் காட்சிகளில் கூட முகத்தைக் காண்பிக்கும் ஆர்வம் இல்லை. ஆகவே என் பெர்சனாலிடியைப் பற்றி நான் கவலைப்படவில்லை. எப்போதாவது வானொலியில் பேசப் போவேன். அதற்கு அழகோ மேக்கப்போ தேவையில்லை. அந்தப் பேச்சுக்கு என்னுடைய இயற்கைப் பல் கூட்டம் அப்படிப் பாதகம் விளைவிக்கவில்லை. அதனாலே இப்போது என்னிடம் அன்பு காட்டிக் கொண்டிருக்கும் சில 'லாயல்' பற்களையும் வன்முறையில் வெளியேற்ற விரும்பவில்லை'' என்று உறுதியாகச் சொல்லிவிட்டுக் கழன்று கொண்டேன்.

ஆனால் சீக்கிரமே அவ்வளவு தன்னம்பிக்கையுடன் அவரிடம் பேசியிருக்க வேண்டாம் என்று நினைக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

பல் விழ்ச்சி இல்லை. ஆனால் சொல் வீழ்ச்சி!

அன்று முன்னிரவு நேரம். நான் வீட்டிற்குத் திரும்பினபோது, என் பேத்தி உட்கார்ந்திருந்த நாற்காலியை ஒட்டிய சுவரில் ஒரு பல்லி ஓடிக் கொண்டிருந்தது. குழந்தை பயப்படுமோ என்ற நினைப்பில் நான் 'பல்லி பல்லி' என்று குரல் கொடுத்தேன்.



''உள்ளே வரபோதே ஏன் 'பசிபசி' என்று கூப்பாடு போடுகிறீர்கள்?... சாயங் காலம் எங்கே போனாலும் ஓட்டலுக்குக் காசு கொடுக்காமல் வரமாட்டீர்களே? சாப் பிட வேண்டுமென்றால் நான் இலை போடத் தயார்'' என்று சம்பந்தமே இல்லாமல் ஏதோ தொற்பொழிவு செய்யத் துவங்கினாள். என் மனைவி.

''சுவர் பல்லி'' என்று சுட்டிக் காட்டி னேன். அவள் அதைப் பார்க்காமல் ''சுவ ருக்கும் பசியா? போன மாசம்தானே சுண் ணாம்பு அடிச்சிருக்கு. மனிதர்கள் பசிக்குச் சாப்பாடு போட்டால் போதாதா?'' என்று உபகதையில் இறங்கினாள்.

இதென்ன கூற்று! இன்றைக்கு இவள் ஏன் ஏடாகூடமாகப் பேசுகிறாள்? அவள் சுபாவம் அப்படி இல்லையே!... உடம்பு சரியில்லையோ?....

''ஏய் இங்கே வா! உன் பேத்தி உட் கார்ந்திருக்கும் இடத்துக்குப் பக்கத்தில் சுவரைப் பார்'' என்றேன்.

அதற்குள் என் பேத்தி எழுந்து வாசல் பக்கம் போய்விட்டாள்.

''பல்லி!... இதற்குப் போய் ஏன் பசி பசி என்கிறீர்கள்...'' என்று சொல்லிக் கொண்டே கையைத் தட்டினாள். அந்தப் பல்லி ஓடி என் கண் முன்னாலிருந்து மறைந் தது.



''நான் பல்லி பல்லி என்றுதான் சொன் னேன்.'' என்று என் கூற்றை ஊர்ஜிதப் படுத்திக் கொள்ளச் சொன்னேன்.

''இப்பவும் பசி பசி என்றுதான் சொல் கிறீர்கள். தெளிவா பல்லின்னு சொல்லக் கூடாதோ?''

''பல்லி! பல்லி!''

''அஹாம்! பல்லிக்குப் பதிலா 'ஸ்'னு காத்து வரது. அது 'சி' மாதிரி ஒலிக்கிறது. ஏதாவது இசைகேடாப் பல் விழுந்து விட்டதா?... பஸ் பஸ்ன்னு பேசுகிறீர்கள்.''

அவள் உள்ளே போய் விட்டாள். நான் கண்ணாடி முன் ஓடினேன். பல் நஷ்டமா யிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இருந்த பற்களில் முன் வரிசையில் இரண்டு பற் களுக்கிடையே கொஞ்சம் புதிய இடை வெளி தென்பட்டது. எனக்குத் தெரியாமல் நான் உணராமல் ஏதோ பூகோள மாற்றம். எனக்குத் தெரிவது பல்லி என்று சொல்லும் போது அது காற்றுடன் கலந்து 'ஸி'யாகத் திரிவது. இப்படி இடைவெளி வந்தால் ல'கரம் 'ஸி'கரமாவது இயற்கையாம் என்று இலக்கணம் புதிதாக எழுதலாமோ என்று கவலைப்பட ஆரம்பித்தேன்.



மனிதனுக்குக் கவலைப்படத்தான் எத்தனை புதிய விஷயங்கள் சேருகின்றன?

மறுநாளே எனக்கு, நான் கலந்துகொண்டு ஒலிப்பதிவு செய்ய வேண்டிய வானொலி நிகழ்ச்சி இருந்தது. வானொலி நிலையம் போய்ச் சேர்ந்தேன். இரண்டு நபர்கள் கலந்து பேசுவதாக ஏதோ சமூக இயல் பற்றிய நிகழ்ச்சி. 'ஸ்க்ரிப்டை' வேறு யாரோ எழுதியிருந்தார்கள்.

என்னுடன் இணையாகப் பேசும் நண்பரும் வந்தார். தனா ஒரு டைப் செய்யப்பட்ட உரையாடல் பகுதி கொடுக்கப்பட்டது. நானும் நண்பரும் மாறி மாறிப் பேசி ஒலிப் பதிவு ஆகவேண்டும். ''ராமசாமி அவர் களே வணக்கம்'' என்று நான் ஆரம்பிக்கவும் ''வணக்கம் கோபால்சாமி அவர்களே'' என்று பதில் மரியாதை செய்வார். இதன் மூலம் நான் கோபாலசாமியாவும், என் நண்பர் ராமசாமியாகவும் வானொலிப் பெட்டி முன் அமர்ந்திருப்பவர்கள் மனத் திரையில் அறி முகமாகி விடுவோம்.

நான் இந்தத் தமிழ் டைப்ரைட்டிங் எழுத் தைப் படிக்க கொஞ்சம் அதிக சிரத்தை எடுத்துக்கொள்வேன். 'ஹி....ஹி' என்று வாய் விட்டுச் சிரித்து ஒலி எழுப்ப வேண்டிய தற்காக விழுந்திருக்கும் எழுத்து 'உறி' 'உறி' என்று தேங்காய் மட்டையை உறிக்கும் மன நிலையைத் தோற்றுவிக்கும். இது சகஜம்.

நான் கோபாலசாமி பேச வேண்டிய வரி களைப் படித்துக் கொண்டே வரும்போது ஒரு இடத்தில் திடுக்கிட்டேன். காரணம் மல்லிகைப்பூ போன்ற இட்லி என்று ஒரு வரி வந்தது.

வானொலி மைக்கில் நான் 'மல்லிகைப்பூ' என்று சொல்வது நிச்சயம் மஸ்ஸிகைப்பூ என்று ஒலிக்கும். இந்த வார்த்தையைக் கையோடு ஒதுக்க முயற்சியில் இறங்கினேன். இட்லியும் 'இட்ஸி' ஆயிடும்.

ஒலிப்பதிவு செய்ய வந்திருக்கும் நிலைய அலுவலரிடம் ''ஏன் சார்!... இந்த உதா ரணத்தைப் பாருங்க!... அவ்வளவு வெள் ளையா எங்கே கிடைக்குது. ஒரு உதாரணம் அவசியமா என்ன?... பழைய நாளைய உதா ரணம்.... இதை எடுத்துடுங்க'' என்றேன் குழைவாக.

''இதெல்லாம் பழக்கத்திலே வந்து பழகிப்போன சொற்கள். கேட்பவர்கள் கற்பனையை ஊக்குவிக்க இந்த மாதிரி உதா ரணங்கள் உரையாடலில் தேவை. இருந் துட்டுப் போகட்டும்'' என்று மறுப்பினார்.

எனக்குத் திடீர் யோசனை. எனக்கு எதிரே இருந்த ராமசாமியைக் கோபாலசாமியாக்கி விட்டு, அவர் பேசவேண்டியதை நான் பேசி ராமசாமியாக மாற ஒப்பந்தம் செய்து கொண்டேன். மல்லிகைப்பூப்போன்ற இட்லிகளை அவரே சொல்லிச் சொல்லி மகிழட்டும்!

உரையாடல் தாள்களில் மேலும் கண்களை ஓட்டினேன். கடைசிப் பக்கத்தில் என் காலை வாரிவிட இன்னொரு வார்த்தை காத்திருந்தது. 'கல்லாப் பெட்டியில் காசை வாங்கிப் போட்டு' என்று வந்த சொற்றொடர் அது.

நீதிமன்றங்களில் வழக்கறிஞர்கள் ஆட்சேபணை எழுப்புவது போல ஒரு ஆட்சேபணையை நாசுக்காக எழுப்பினேன்.

''இந்த வார்த்தைக்குப் பதிலாகப் பணப் பெட்டி என்று இருக்கக் கூடாதோ?'' என்றேன்.

''பணப் பெட்டி என்றவுடன் வானொலி நேயர்கள் இரும்புப் பெட்டியைக் கற்பனை செய்து கொள்ளலாம். சாதாரணப் பெட்டிக் கடையில் இரும்புப் பெட்டி எப்படி வரும் என்று யோசிக்கலாம். இதற்கெல்லாம் இடம் கொடாமல்தான் கல்லாப் பெட்டி என்று வருகிறது. எந்தக் கடைக்காரரும் பக்கத்திலே கல்லாப் பெட்டி வச்சிருப்பாருல்ல!.:. காக என்கிறது சின்னச் சின்ன வியாபாரத்தைக் குறிக்கிறது. 'கல்லாப் பெட்டியில் காசை வாங்கிப் போட்டு' என்று சொல்வதுதான் இயற்கையான சூழ்நிலை. 'பணப் பெட்டியில் காசை வாங்கிப் போட்டு' என்றால் இரண்டு சொற்களுக்கும் இடையே தப் வித்தியாசம் வந்து விடும்'' என்று வியாக்கியானம் செய்து ஒரு பரிமேலழகராய் மாறினர்.

இப்போது நான் மறுபடியும் கோபாலசாமியாக மாற முடியாது. மல்லிகைப்பூ வியவகாரம் இருக்கிறது. வந்தது வருகிறது என்று 'கல்லாப் பெட்டியில் காசை வாங்கிப் போட்டு' என்று வேகமாகப் பேசிவிட்டேன். கல்லாப் பெட்டி என்றுதான் என் உதடுகளிலிருந்து ஒலி வந்தது எனக்குத் தெரியும். நல்ல வேளை அந்தக் கணத்தில் ஒலிப்பதிவாளர் இந்தக் காற்று வீச்சைக் கவனிக்கவில்லை.

''கொஞ்சம் இருங்க! இப்போ 'ரிக்கார்ட்' பண்ணினதை உங்களுக்குப் போட்டுக் காண்பிக்கடறேன்'' என்றார் நிலைய அலுவலர்.

''வேண்டாம்! வேண்டாம்! ஒலிபரப்பின் போது கேட்டுக் கொள்ளலாம். எனக்குக் கொஞ்சம் அவசர வேலை இருக்கிறது'' என்று எழுந்திருந்தேன். என் நண்பருக்குச் சபலம், தம் பதிவு செய்யப்பட்ட குரலைக் கேட்டு ரசிக்க.

எனக்குப் பயம். அவர்கள் இப்போது கல்லாப் பெட்டியைக் கவனித்துவிட்டால் அந்த இடத்தில் மீண்டும் மீண்டும் பேசச் சொல்லிப் பதிவு செய்வார்கள். நிச்சயமாக நான் சரியாகச் சொல்ல மாட்டேன். என் குட்டு வெளிப்பட்டு விடும்.


வீட்டுக்கு வந்து யோசித்தேன். நடை.. முறையில் நான் 'ல'கரப் பிரயோகம் செய்யும் வார்த்தைகளை ஒரு பட்டியல் போட்டு அவைகளின் உபயோகத்தைக் குறைக்கவேண்டும். மாற்று வார்த்தைகள் தேட வேண்டும் என்று திட்டம்.


அதை எழுதும்போதே காலடியில் ஒரு எலி புகுந்து. அதற்கு நான் மதிப்புக் கொடுக்கவில்லை. எலி எலி என்றால் எங்கே ஏ.வி. போடலாம் என்று என் மனைவி கேட்பாள். 'ல'கரமே... தாற்காலிகமாக உனக்கு ஒரு குட்டை!

''நீங்க படிப்படியா முன்னுக்கு வந்தவங்கன்னு கேள்விப்பட்டேனே உண்மைதானுங்களா?''

''ஆமாம்! சின்ன வயசிலே என்னுடைய கிராமத்திலே எனி செருக வியாபாரம் செய்தேன்... பிறகு பட்டணம் வந்து கொளுப்படி வியாபாரம் ஆரம்பித்தேன். இப்போ 'லிப்ட்' தயாரிக்கும் ஒரு பெரிய கம்பெனியின் உரிமையாளர்!''

—சுதாகரன்





ஒருவர்: ''என்னங்க அந்தச் சபாவிலே அவ்வளவு கூட்டம்?''

மற்றவர்: ஜலதரங்கக் கச்சேரி நடக்கிறது. ஒரே நேரத்தில் அத்தனை கிண்ணத்திலும் தண்ணீர் நிரம்பி இருப்பதைப் பார்க்கத்தான் கூட்டம் நிரம்பி வழியுது!''

—ஆர். யோகாநந்தம்



திருமுல்லைவாயில் வெளி வாசல் கோபுரம்

தெய்வ தரிசனம்

கொடி இடையாள் காண ஆடிய அழகன்!



கொடியிடையம்மன்

எல்லாத் தலங்களுமே புண்ணியத் தலங்கள்தான். நமது பரத கண்டத்தைப் பாரத புண்ணிய பூமி என்றே அழைக் கிறோம். என்றாலும் பாடல் பெற்ற ஸ்தலம் என்னும்போது அதற்கு ஒரு தனிச் சிறப்பு இருப்பதாகத்தான் தோன்றுகிறது. ஒரு அருமையான சம்பவமும் தெரிய வருகிறது. அதிலும் எம்பிரான் தோழரான சுந்தர மூர்த்தி ஸ்வாமிகள் பாடிய தலம் என்றால் ஒரு வியப்புணர்ச்சியே உண்டாகி விடுகிறது.

வாக்குத் தவறி சங்கிலி நாச்சியாரைப் பிரிந்து திருவாரூரில் ஆரூரனைத் தரிசிக்கச் சென்றபடியால் சுந்தரருடைய கண்கள் பார்வையை இழந்தன.

''சங்கிலிக்கா என் கண்கொண்ட பண்ப'' என்று அவரே பாடுகிறார். சிவனடியார்கள் வழிகாட்ட எவ்வாறோ திருமுல்லைவாயில் என்ற தலத்துக்கு வந்து சேர்ந்தார்.

மாசிலா மணீச்வரர் என்ற திரு நாம முடைய ஈசனைக் கண்களால் காண முடி யாமல் தவித்துக் கதறிப் பாடியிருக்கும் பத்துப் பாடல்களும் மனத்தை உருக்கிவிடு கின்றன. ஒவ்வொரு பாடலும் ''அடியேன் படுதுயர் களையாய்! பாசுபதா! பரஞ்சுடரே'' என்று முடிவடைகிறது. நான்காவது பதிகத் தில் ''உன் புகழைப் பாட ஆசை கொண்டு உன் அருளும் பெருமைகளைத் தமிழிலும் பாடுகிறேன். எனக்கு அருளுவாய்'' என்று சிவபெருமானின் தமிழ் அன்பைத் தமிழ்ப் பாட்டுக் கேட்டு மகிழும் இயல்பைக் கூறி இறைஞ்சுகிறார்.

இந்தத் தமிழ் உகந்த பெருமானுகிய திருமுல்லைவாயிலானைத் தரிசிக்கும் பேறு ஒரு நாள் வாய்த்தது. நட்சத்திரங்களாகப் பூத் துக் குலுங்கும் முல்லைக் கொடிகளையும், மணமுள்ள சோலைகளையும், பொறி வண்டு களையும் பாலாறு கொண்டு ஒதுக்கிய யானைத் தந்தங்களையும் முத்துக் குவியல்களையும் கயல் மீன்களைப் போன்ற கண்களை உடைய மயிலை ஒத்த மாதர்கள் நடனம்செய்வதையும் எதிர்பார்த்துச் சென்ற எனக்கு முதலில் கண்களில் பட்டது ''கள்ளுக் கடை'', என்ற வாசகம்தான்.

தேங்காய் பழம் வாங்கக் கூடிய கடைகள் எதுவும் இல்லை. அர்ச்சனை செய்ய வேண்டு மென்றால் வழியில் அம்பத்தூரிலேயே அர்ச் சனைத் தட்டு வாங்கிக் கொண்டு செல்ல வேண்டும். கோயில் கோபுரம் சமீப காலத் திருப்பணி. அங்கே ஒருவர் வில்வ தளங்களைப் பொட்டலம் கட்டிக் கொண்டிருந்தார். இரண்டு பொட்டலங்களை வாங்கிக்கொண்டு உள்ளே சென்றால் முதலில் விநாயகர் திருவுருவம் நம்மை வரவேற்கிறது. கோயி லில் யாருமே இல்லை. வெளிப் பிராகாரத்தை வலம் வரும்போது சில வில்வ மரங்களில் பழங்கள் பொன்னிறமாகத் தொங்குவது அழ காக இருக்கிறது. பிரதக்ஷணம் செய்துவிட்டு உள்ளே சென்றால் இடது பக்கம் அம்ம னுடைய சந்நிதி. சுந்தரருடைய பாசுரத்தில் தான் அம்பிகையின் பெயர் இருக்கிறதே.

''கூடிய இலயம் சதி பிழையாமைக்
கொடி இடை உமையவள் காண
ஆடிய அழகா அருமறைப் பொருளே.''

என்று அம்பிகை கண்டு இன்புறுவதற் காகவே ஈசன் தாளம் பிசகாமல் எச்சரிக்கை யுடன் ஆடிய பாங்கை அழகாகப் பாடி விட்டார். கொடியிடை நாயகி சரியான க்ரிடிக்காக இருக்க வேண்டும். உமையவள் காண என்னும்போது தாம் தரிசனம் பெற முடியாமல் அந்தகனாய் இருக்கும் ஆற்று மையும் தொனிக்கிறதல்லவா?

ஆனந்தி

நல்ல காலமாக அர்ச்சகர் வந்து சந்நிதிக் கதவைத் திறந்தார். அகிலாண்ட நாயகனின் திருநடனத்தைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருப்பவளாயினும் ஆடம்பரங்கள் ஏதுமின்றி அமைதியான புன்னகையுடன் சாந்தம் தவழும் திருவிழிகளால் நம்மையும் உள்ளம் குளிரப் பார்க்கிறாள். அன்னையல்லவா?

மாசிலா மணீச்வரர் என்ற தூய தமிழ்ப் பெயரால் தன்னைத் தொண்டைமானுக்கு அறிமுகம் செய்து கொண்டவர் இந்தக் கோயிலில் வீற்றிருக்கும் பெருமான். நாகாபரணம் அணிந்து காணப்படும் பெரிய லிங்க வடிவம். விளக்கின் ஒளியில் ஐந்து தலை நாகத்தின் கண்கள் பளபளப்பது போல ஒரு பிரமை. ஐந்து தலைகளிலும் கிரீடங்கள். மாசிலா மணீச்வரருக்கு அபிஷேகம் உச்சியிலிருந்து செய்வதில்லையாம். பீடத்தில்தான் அபிஷேகம். சந்தனக் காப்பு அணிந்து பொன்னார் மேனியனாகக் காட்சி தருகிறார்.

தொண்டைமான் என்ற ஒரு அரசன். இவன் பரம சிவபக்தன். தொண்டை நன்னாட்டின் பல ஊர்களிலும் கோவில் திருப்பணிகள் செய்தவன். ஒரு சமயம் பகைவர்கள் இவனைத் துரத்தவே யானை மீது ஏறித் தப்பித்துக் கொள்ள ஓடினான். ஓர் இடத்தில் யானையின் கால்கள், அடர்ந்து வளர்ந்திருந்த முல்லைக் கொடிகளில் சிக்கிக் கொண்டன. கால்களைச் சுற்றிய முல்லைக் கொடிகளைத் தன் வாளால் வெட்டித் தள்ள முயன்றான் தொண்டைமான். வெட்டிய இடம் சிவந்தது. வாளில் இரத்தத்தைக் கண்ட அரசன் பதறிப்போய் முல்லைக் கொடிகளைத் தள்ளிப் பார்த்தான். அங்கே ஒரு சிவலிங்கம் உச்சியில் காயத்துடன் காணப்பட்டது. "ஐயோ! சிவாபராதம் செய்து விட்டேனே!" என்று பதறித் துடித்த தொண்டைமானுக்கு ஈசன் காட்சி தந்து, "என்னுடைய திருமேனிக்கு எந்தக் களங்கமும் உண்டாகாது. நெருப்பும் என்னை எரிக்காது. நான் மாசு இலா மணி. நீ வருந்தாதே" என்று சொல்லி ஆறுதல் அளித்தார்.

✖ உட்புறத்தோற்றம்



அதோடு நிற்கவில்லை. நந்திகேசுவரரை அழைத்துத் "தொண்டைமானின் பகைவர்களை அழித்து வருக" என்று உத்தரவிட்டார். பிறகு கேட்பானேன். தொண்டைமான் வெற்றி வாகை சூடியதுடன் எதிரிகள் நாட்டிலிருந்து இரண்டு வெள்ளெருக்கத் தூண்களையும் பறித்துக் கொண்டு வந்து மாசிலாமணீச்வரரின் முன்னால் நிறுத்தி அதையே முக மண்டபமாக வைத்துக் கோயில் எழுப்பிப் பூஜைகளும் விழாக்களும் நடைபெறுவதற்காகப் பற்பல மானியங்களையும் வழங்கினான். இது தலவரலாறு. இந்த வரலாற்றை நினைவூட்டுவதற்காகவே நந்திகேச்வரர் சிவபெருமானுக்கு எதிர்ப்புறம் பார்த்து நிற்கிறார்.

மாசிலாமணீச்வரரைத் தரிசித்ததும் இந்த வெள்ளெருக்கத் தூண்களைப் பிரதட்சிணம் செய்தால், 'எடுத்த காரியம் யாவினும் வெற்றி' என்பது நம்பிக்கை.

சுவாமி தரிசனம் செய்து விட்டு வெளியே வந்தால் நடராஜ வடிவத்தைக் காண்கிறோம். தூக்கிய திருவடியின் அழகில், அந்த வடிவம் சொல்லாமல் விளங்க வைக்கும் தத்துவத்தின் பொருளில் ஒரு கணம் லயித்து நிற்கிறோம். லயமும் ஜதியும் கூடி, இந்த அழகன் ஆடும்போது அண்ட



✖ தொண்டைமான் சிவலிங்கம் காணுதலும் ஈசன் நந்தி கேசுவரரை உதவிக்கு அனுப்புதலும்


பகிரண்டமெல்லாம் அந்த ஜதி பிசகாமல் லயத்தில் தோய்ந்து ஆடுகின்றன அல்லவா?

இந்தக் கோயில் கர்ப்பக் கிருகத்தின் மேல் உள்ள கோபுரம் சோழர் காலத்தில் கட்டப்பட்டது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. பற்பல கல்வெட்டுக்களை இக்கோயிலில் காணலாம்.

கோவிலின் எதிரில் உள்ள திருக்குளம் சற்று வற்றியிருந்தாலும் மிகப் பெரிய குளம். பிரும்ம தீர்த்தம், சுப்ரமணிய தீர்த்தம் என்று வழங்கப்படுகிறது.

"திரைதரு புனல் சூழ் திருமுல்லை வாயில் செல்வனை உள் குளிர்ந்து ஏத்த வல்லார்கள் நரை திரை மூப்பு நடலை இன்றி விண்ணவர்க்கு அரசாய் சாருப்ய பதவியை அடைவார்கள்" என்பது ஆரூரரின் வாக்கு.

புகைப்படங்கள்: சரஸ்வதி சத்தியமூர்த்தி



இரண்டாவது தலைநகர்!

"தமிழகத்தின் தலைநகரைத் திருச்சிக்கு மாற்றப் போகிறேன்" என்று கூறிக்கொண்டிருந்தார் முதல்வர். இப்போது பல்லவி சற்று மாறியிருக்கிறது. "திருச்சி இரண்டாவது தலைநகராக விளங்கும்" என்று கூறி வருகிறார். அவருக்குப் பின்பாட்டுப் பாடுகிறார் நிதி அமைச்சர்.

முதல் யோசனையை விட இரண்டாவது யோசனையே மிகவும் சிறந்தது. புத்திசாலித்தனமானது. தமிழக நலனுக்கு உகந்தது. அனைவரும் வரவேற்கத் தக்கது. எல்லோருக்கும் பிடித்தமானது என்பதை ரத்தத்தின் ரத்தங்களுக்கு மட்டுமின்றி மற்றவர்களுக்கும் கூறிக்கொள்ளப் பிரியப்படுகிறேன் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்பட்டே இதை எழுதுகிறேன்.

முதலில் இது இரண்டு பெண்டாட்டிக்காரர்களான அமைச்சர்களுக்கு எவ்வளவு வசதி என்பதைப் பார்ப்போம். இரு மனைவியருள் யாருக்கு மதிப்பு அதிகம் என்பதில் அடிக்கடி சண்டை வருவதைக் காண்கிறோம். நாலு பேர் முதல் நாலாயிரம் பேர்வரை திரண்டிருக்கும் அவைகளில் கூட அவர்கள் யார் உசத்தி என்பதைத் தீர்மானிக்கக் குடுமிப்பிடி சண்டை நடத்துவதைப் பார்த்து அமைச்சரிடம் அனுதாபம் கொண்டிருக்கிறோம். இனி இந்தத் தொல்லை இரு பெண்டாட்டிகளை உடைய அமைச்சர்களுக்கு இராது. அவர்கள் இல்லங்களில் அமைதி நிலவும். முதல் பெண்டாட்டியின் செல்வாக்கு முதல் தலைநகரான சென்னையில் கொடி கட்டிப் பறக்கும் என்றும், இரண்டாவது பெண்டாட்டியின் அதிகாரம் இரண்டாவது தலைநகரான திருச்சியில் தான் பறக்கும் என்றும் - சாம்ராஜ்யத்தை ஆளுக்குப் பாதியாகப் பிரித்துக் கொடுத்து விடலாம். அமைச்சர் சென்னையில் இருக்கும்போது முதல் மனைவியுடனும் திருச்சியில் இருக்கும்போது இரண்டாவது மனைவியுடனும் பொது நிகழ்ச்சிகளுக்கு வந்து



கலந்துகொள்ளலாம். பிரச்னையே இருக்காது. இதில் இன்னொரு பெரிய வசதியும் உள்ளது. இரு பெண்டாட்டிகள் இருந்தால் சண்டை வருகிறது என்று பயந்து இரண்டாம் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் இருக்கும் அமைச்சர்கள் இனி அந்த அச்சமின்றி பேஷாகத் தாளத்தோடு - இரண்டாம் கல்யாணம் செய்துகொள்ளலாம்!


சில பெருந்தலைகளுக்குச் சென்னையில் அதிகார பூர்வமான வீடு தவிர இரண்டாவது. வீடு உண்டு. அந்த வீட்டில் அவர் மனம் கவர்ந்த எஜமானியம்மாளும் உண்டு. இனி இரு தலைநகர்களிலும் அதிகார பூர்வமான இரு வீடுகள் தவிர இரண்டாவது வீடுகளுக்கும் வசதி செய்துகொள்ளலாம். அடடா! நினைத்தாலே இனிக்கும்



இறதே! திருச்சியை இரண்டாவது தலைநகராக்க இதைவிடச் சிறந்த காரணம் வேறு வேண்டுமா என்ன?

இருந்தாலும் மேலும் சில வசதிகளையும் பார்ப்போம். சட்ட மன்றத்தில் ஒரு கோப்பு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற நிர்ப்பந்தமான சூழ்நிலை உருவாகி விடுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அமைச்சருக்கு இது பிடிக்கவில்லை. "ஃபைல் காணவில்லை" என்று கூறலாம். ஆனால் இப்படிச் சொல்லிச் சொல்லி அலுத்து விட்டதால் யாரும் நம்பப் போவதில்லை. எனவே வெகு சுலபமாகக் "கோப்பு திருச்சியில் இருக்கிறது" என்று சொல்லிவிடலாம். அதை உடனே எடுத்து வர சபாநாயகர் உத்தரவு பிறப்பித்தாலும் அரசு இயந்திரம் இயங்கக் குறைந்தபட்சம் ஒரு மாசமாவது ஆகும். அதற்குள் சட்ட சபைக் கூட்டத் தொடரே முடிந்துவிடும்! ஆகா! எவ்வளவு வசதி!

கி.ராஜேந்திரன்



கோப்புகள் திருச்சியிலும் சென்னையிலும் இருக்குமாதலால் அமைச்சர் திருச்சியிலிருக்கும்போது ஞாபகமாகச் சென்னையில் உள்ள ஃபைல்களைப் பார்ப்பதாகத் திட்டமிடவேண்டும். அதே போல் சென்னையில் இருக்கும்போது திருச்சியில் உள்ள ஃபைல்களைக் கொண்டு வருமாறு உத்தரவிட வேண்டும். சம்பந்தப்பட்ட கோப்புகள் இராது. உடனே, ''சரி, திருச்சி சென்றதும் கவனிக்கிறேன்'' என்று சென்னையிலும், ''சென்னை சென்றதும் கவனிக்கிறேன்'' என்று திருச்சியிலும் கூறிவிடலாம். ஒரு கோப்பையும் தொடாமல் தூய்மையாக இருக்கலாம். ஆனால் அதே நேரத்தில் அமைச்சர் கோப்புகளைக் கவனிக்க மாட்டேனென்கிறார் என்ற புகார் எழவே வாய்ப்பில்லை. அமைச்சர் கவனிக்கத் தயார்; கோப்புகள்தாமே அமைச்சரைக் கவனிக்க மாட்டேன் என்கின்றன!

இப்படியே சில காலம் போனால், 'எல்லா ஃபைல்களையும் ஜெராக்ஸ் நகல் எடுத்து, திருச்சி சென்னை ஆகிய இரு நகரங்களிலும் வைக்க ஏற்பாடு செய்யலாமே' என்ற அபூர்வ யோசனை யாருக்காவது தோன்றாமல் போகாது. உடனே ஒவ்வொரு அமைச்சரவையும் ஃபைல்களை ஜெராக்ஸ் காப்பி எடுக்க டெண்டர் கோரி மிக அதிகமான தொகை கேட்டுள்ள அமைச்சரின் ஆதரவு பெற்ற நபருக்கு டெண்டர் தரலாம். இதற்கெல்லாம் ஏகமாகச் செலவு ஆகும். ஆனால் என்ன? மக்கள் எதற்கு இருக்கிறார்கள்? இதை ஈடுகட்ட ''நுழைந்து திரும்பும் வரி'' என்பதாக ஒன்றை விதித்தால் ஆயிற்று. மக்கள் கொடுத்து அழுகிறார்கள்.

எம். எல். ஏக்கள் எம். பி.க்கள் அமைச்சர்கள், அதிகாரிகள் முதலானோர் திருச்சிக்கும் சென்னைக்கும் அடிக்கடி ஏசி வகுப்பு ரயிலிலும், காரிலும், டீலக்ஸ் பஸ்ஸிலும், விமானத்திலும் போய் வரலாம். முதல்வருடைய ஹெலிகாப்டர் துருப்பிடிக்காமல் காப்பாற்றப்படும். அடிக்கடி அதைப் பயன்படுத்தலாம். அதன் பைலட் இனி 'கொர்' 'கொர்' என்று குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்க முடியாது!

திருச்சியில் புதிய அரசாங்கக் கட்டிடங்கள், சாலைகள், அமைச்சர்கள், அதிகாரிகள், எம்.எல். ஏக்கள் முதலியோருக்குப் புறநகர்ப் பகுதியில் வீடுகள், அவர்கள் குழந்தைகளுக்கு இங்கிலீஷ் மீடியம் பள்ளி, கல்லூரிகள், பொழுது போக்க சினிமாத் தியேட்டர்கள், சூப்பர் மார்க்கெட்டுகள் எல்லாம் உருவாக வேண்டும். இதற்கெல்லாம் 'இரண்டாவது தலைநகர் வரி' என்று ஒரு புது வரி விதித்துப் பல கோடி இரட்டிச் செலவு செய்து வேண்டப்பட்டவர்களைக் கொழுத்த பணக்காரர்களாக்கலாம். கூடவே அடுத்த தேர்தலைச் சந்திக்கக் கட்சிக்குப் பணம் பண்ணுவதும் சௌகரியமாக இருக்கும்.

தமிழக அரசில் நூலகங்களுக்குப் புத்தகம் வாங்குவது முதல் அணைக்கட்டு வேலைவரை பல காரியங்கள் இன்று நிறைவேறாமலேயே அல்லது அரை குறையாகவே நிற்கின்றனவே என்றால், அதற்குச் 'சத்துணவுத் திட்டம்



தான் காரணம்' என்று பேசப்பட்டு வருகிறது. அதற்குப் பணம் செலவாவதால் இதற்கு இல்லை என்று கூறப்படுவது சகஜமாயிருக்கிறது. சீக்கிரமே இந்தக் காரணம் அலுத்துப் போகலாம். எனவே இனி இரண்டாவது தலைநகர் உருவாவதால் அதன் மீது பழி சுமத்திக் கொண்டு பல காலம் ஓட்டலாம். ஏன் இன்னும் பத்து ஆண்டு கழித்து 'கிருஷ்ணா நதி நீர் இன்னும் வரவில்லையே?' என்று யாராவது கேட்டால் கூட 'இரண்டாவது தலைநகர் உருவாகி வருகிறதே' என்று காரணம் கூறித் தப்பிக்கலாம்.

குமாரி ஜெயலலிதா, அன்னை தெரஸாவுக்கு எம். ஜி. ஆரை ஒப்பிட்டு, முதல்வருக்கு நோபெல் பரிசு பெற்றுத் தந்த பிறகு வேறு என்ன புதிய சிறப்புச் செய்யலாம் என்று புரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார். அவர் இனி கவலைப்படத் தேவையில்லை. ''முன்பு பிரிட்டிஷ் ஆட்சியின் கல்கத்தாவிலிருந்து புதுதில்லிக்குத் தலைநகர் மாறியதற்கு இணையாகப் புரட்சித் தலைவர்தான் இன்று ஒரு மாபெரும் சாதனை புரிந்திருக்கிறார்'' என்று கூறி ''அரசி எலிஸபெத் எம். ஜி. ஆருக்கு ''ஸர் நைட்'' பட்டம் வழங்கிக் கௌரவிக்க வேண்டும்'' என்று அறிக்கை விடலாம்!

என்.டி. ஆருக்கு பாராட்டு உண்டு

கிருஷ்ணா ஒப்பந்தத்திற்குத் தமிழக அரசின் சார்பாக முதல் தவணையாக 30 கோடி ரூபாயை பாரதப் பிரதமர் மூலமாக ஆந்திர மாநில அரசுக்கு வழங்க இம்மாத இறுதியில் தமிழக அரசு விழா ஒன்றுக்கு ஏற்பாடுசெய் திருக்கிறது. அந்த விழாவில் ஆந்திர முதல்வருக்குத் தமிழக மக்களின் சார்பாகப் பாராட்டுத் தெரிவிக்க ஏற்பாடுகளும் நடைபெற்று வருகிறது என்ற விஷயத்தை 'தராசு'வின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

போடிநாயக்கனூர் — எஸ். சையது முகமது

''31—3—83க்குள் வாங்காவிட்டால் எல். பி. ஜி. கிடைக்காது'' என்று திருச்சி சிந்தாமணி சூப்பர் மார்க்கெட்டிலிருந்து கடிதம் வந்தது. உடனே கடன் வாங்கி ரூ. 1000 வரை காஸ் அடுப்பு, சிலிண்டர் டெபாசிட் வால்வு டிபாசிட், முதல் காஸ் பணம் என்று கட்டினோம். இப்படிப் பணம் செலவு செய்தவர்கள் ஆயிரக் கணக்கானவர்கள். இதுவரை காஸ் வரவில்லை. சப்ளை செய்யாத சிலிண்டருக்கு டிபாசிட் ரூ. 300; அதன் வால்வ் டிபாசிட் ரூ. 50. அதற்கு வட்டி கூடக் கிடையாது! இது மோசடி இல்லை என்றால் வேறு எது மோசடி? எப்போது கேட்டாலும் ''உங்களைப் போல் 2000 பேர் வெயிட்டிங்'' என்கிறார்கள். இது ஒரு ஆறுதலா?

ஸ்ரீரங்கம் — கே. ஜானகம் சாரி

இரு ''ஜுண்டன்'' எழுதியிருப்பது போல் ''தர்மஸ்தலம்'' என்னும் ஊர் மைசூருக்கு அருகில் இல்லை. துறைமுக ஊரான மங்களூருக்கு அருகில்தான் உடுப்பி மற்றும் தர்மஸ்தலம் — கொல்லூர் மூகாம்பிகை போன்ற புகழ் பெற்ற இடங்கள் இருக்கின்றன!

பெங்களூர்-21 — ப. மூர்த்தி

தண்ணீர்ப் பிரச்னையை எப்படிச் சமாளிக்கிறார்கள் என்று பிரபலமானவர்களிடமே கேட்டுள்ளீர்களே, எங்களைப் போன்ற 'அன்றாடம் காய்ச்சிகளை'க் கேட்டால் ஒவ்வொருவரும் ஒரு கண்ணீர்க் கதை கூறுவார்களே!

வடலூர் — வெ. லட்சுமிநாராயணன்

குளிர்பானங்களைத் தாங்கி வரும் குமரியின் (ஜில்லென்ற ஜூஸ்) அட்டைப் படத்தையும், முதல் பக்கத்தைத் திருப்பியவுடன் 'ஜில்லென்ற ஜூஸ்' தயாரிப்பது எப்படி என்ற இரு இருமதிகளின் விளக்கத்தையும் படிக்கக் கொடுத்து எங்களின் உள்ளத்தையும், உடலையும் ஒருசேரக் குளிர்வித்த ''கல்கி''யே, நீ கோடை வெயிலைத் தணிக்கும் ஒரு 'ஜூஸ் பெட்டகம்'.

பெரம்பூர்-11 — அபிராமி தாசன்

நீங்கள் வெளியிடும் சிறுகதைகள் அனைத்தையும் ஒன்றுகூட, ஒரு வரிகூட விடாமல் நாங்கள் படிக்க வேண்டும் என்பதற்காக, இப்படியா போட்டி என்று பரீட்சை எங்களுக்கு வைப்பது?

அத்திமலைப்பட்டு — மது ஜெயபால்

காஸ் தயாரிப்பு நிறுவனங்கள் தற்போது காசு தயாரிப்பு நிறுவனங்களாக மாறி வருகின்றன என்பதை நாசூக்காகவே கூறியிருக்கிறீர்கள். கூடவே இல்லத்தரசிகள் எவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று விளக்கியிருப்பது அருமை.

தஞ்சாவூர் — எஸ். ராஜகோபாலன்

''காவல் துறையில் கன்னியர்'' பேட்டிக் கட்டுரை சுவையாக இருந்தது. பெண்களின் தன்னலமற்ற பொதுச் சேவை (அதுவும் இப் பணி ஆபத்து நிறைந்தது) போற்றப்பட வேண்டியதொன்று.

சென்னை-28 — தி. க. ஸ்ரீராம்

'பொது அறிவுப் பக்கம்' வளர்ந்து வரும் இளைய தலைமுறையினருக்கு அறிவுக்குச் சிந்தனை விருந்தளிக்கும் பயனுள்ள பகுதி.


மதுக்கூர் — வாசெனி தாசன்

''மும்முனைகளில் முதல் முனை'' கட்டுரை படிக்கப் படிக்க உள்ளத்தில் ஒரு பரவசத்தை ஊட்டக் கூடியதாக இருந்தது! தெய்வீக மணம் கமழ்ந்தது.

கோவை-14 — புனல்வேந்தன்

டாக்டர்சுரேஷ்குமாரின்சோகக்கதையைத் தினசரிகளில் படித்தபோது ஏற்பட்டிருந்த வருத்தம், வைரமுத்துவின் கவிதையைப் படித்ததும் விஸ்வரூபமெடுக்க ஆரம்பித்து விட்டது. கவிதையின் ஒவ்வொரு வரியும் இதயத்தைக் கசக்கிப்பிழிந்தது என்றால் அது மிகையன்று.

பல்லாவரம் — ஆர். சந்தானம்


டூ-இன்-ஒன்
போர்ஹென்ஸ் டபிள்—ஆக்ஷன் டூத்ப்ரஷ் உங்கள் பற்களை சுத்தம் செய்யும்போதே ஈறுகளையும் தேய்த்துக் கொடுக்கிறது.
பற்களை சுத்தம் செய்யும் உறுதியான நீலக் குச்சங்கள்
ஈறுகளைத் தேய்த்துக் கொடுக்கும் மென்மையான வெள்ளைக் குச்சங்கள்
போர்ஹென்ஸ்
டூ-இன்-ஒன் டூத்ப்ரஷ்
அடல்ட் மற்றும் ஜூனியர்

277 F-203 TAM




உங்கள் அழகுக்கு அழகூட்டும் குங்குமம்

புதிய சுமங்கலி டீலக்ஸ் குங்குமம்

இன்று தன் இயற்கை எழிலை எந்த மங்கையும் மேலும் பொலிவுறச் செய்யலாம். உங்கள் ஒப்பனைக்கு மேலும் மெருகூட்டுவது சுமங்கலி குங்குமம்.

கொஞ்சம்கூட வெளியே சிந்தாத சிறந்த பாக்கிங்கில் வரும் குங்குமம் அது ஒன்றே. ஆகவே அது உங்கள் கைப்பையிலோ அல்லது டிரஸ்ஸிங் டேபிள் மேலோ வைத்துக்கொள்ள உகந்தது. சுமங்கலி உங்களுக்குப் பிடித்தமான பலவித வண்ணங்களில் கவர்ச்சியான ஜாடிகளிலும், பௌடர் உருவிலும் மற்றும் டீலக்ஸ் பர்ஸ் பாக்கிங்குகளிலும் கிடைக்கிறது.



டீலக்ஸ் குங்குமம்

சுமங்கலி

ஒரு கேசவர்த்தினி தயாரிப்பு

OBM 4952 TM

சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு

லலிதா பார்மஸி

ஸ்தாபிதம் : 1942

தலைமை ஆபீஸ் :

கும்பகோணம் – 612001

(தமிழ்நாடு)

(போன் : 123)

டிரக் லைசென்ஸ் நிர். 40 / 31-8-78

எட்டுத் தொகைக்கு மத்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது

உங்களுக்குத் தேவையான

ஆயுர்வேத மருந்துகள் யாவும் கிடைக்கும்

நாள்பட்ட சிக்கலான வியாதிகளில் ஆயுர்வேத சிகிச்சை முறைதான் நிரந்தர பலனை அளிக்க வல்லது என்பது யாவரும் அனுபவ பூர்வமாக அறிந்ததே. உங்கள் உபாதைகளுக்கு டாக்டர் V.R.L. சர்மா அவர்களிடம் நேரிலோ அல்லது 50 காசு தபால் தலையுடன் கடிதம் மூலமோ, கும்பகோணம் தலைமை ஆபீசுடன் தொடர்பு கொண்டு ஆலோசனை பெறலாம். கடிதங்களை தமிழில் அல்லது இங்கிலீஷில் Type செய்தோ அல்லது மிகத் தெளிவாகவோ எழுதக் கோருகிறோம். கடிதங்களிலும் முக்கியமாய் கார்டிலும் ரொம்பவும் நுணுக்கமாய் எழுத வேண்டாம் எனக் கூறுகிறோம். தெளிவில்லாமலும், பதிலுக்கு 50Np ஸ்டாம்ப் அனுப்பாமலும் வரும் கடிதங்களுக்கு பதில் எழுதப்பட மாட்டாது.

எங்களது எல்லா தயாரிப்புகளும் கீழ்க்கண்ட எமது பிராஞ்சுகளிலும் கிடைக்கும்.

1. லலிதா பார்மஸி, 52-A, மஹாதானத் தெரு, மாயூரம்-609 001 போன் : 379
2. லலிதா பார்மஸி, 81, வடக்கு வீதி, சிதம்பரம்-608 001
3. லலிதா பார்மஸி, 39, ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை-600 017 போன் : 441454
4. லலிதா பார்மஸி, 105, கச்சேரி ரோடு, மயிலாப்பூர், சென்னை-600 004 போன் : 73007

கூவம் எங்கே உற்பத்தியாகிறது?



○ அகனு, உஷா

திருச்சி சீதாலட்சுமி ராமசாமி கல்லூரியும், ஜமால் முகமது கல்லூரியும் இந்த வார குவிஸ் நிகழ்ச்சியில் பங்கேற்றன.

சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி மாணவிகள்:

அகனாலட்சுமி
உஷா

ஜமால் முகமது கல்லூரி மாணவர்கள்:

முகமது ஷரீஃப்
சாலமன்

மேலே போன எட்டணா நாணயம், ஜமால் முகமது மாணவர் சாலமன் கேட்டபடி 'பூ' பக்கமாய் விழ, முகம்மது ஷரீப் முதல் கேள்வி கேட்டார்:

கேள்வி: 'களிறு' என்பது என்ன?

சட்டென்ச் சரியான விடையைச் சொல்லி விட்டார்கள் அகனலட்சுமியும் உஷாவும் ஒரே குரலில்.

சரியான விடை: ஆண் யானை.

அடுத்துக் கேள்வி கேட்டவர் உஷா.

கேள்வி: ஒலிம்பிக் கொடியில் 5 வளையங்கள் இருப்பது தெரிந்த விஷயம். அவை என்னென்ன நிறத்தில் இருக்கும்? என்ன காரணம்?

ஜமால் முகம்மது மாணவர்கள் வெப்பு, நீலம், கறுப்பு, மஞ்சள் பச்சை ஆகிய 5 நிற வளையங்கள் இருக்கும். இவை 5 கண்டங்களைக் குறிக்கும் என்றார்கள்.

உஷா, "நான் 5 வளையங்கள் எதைக் குறிக்கின்றன என்று கேட்கவில்லை. இந்தக் குறிப்பிட்ட 5 நிறங்கள் இருப்பது ஏன்? என்று தான் கேட்கிறேன்" என்றதும், அவர்கள் விழிக்க, அகனு, "எந்த நாட்டுக் கொடியை எடுத்துக்கொண்டாலும் இந்த 5 நிறங்களில் ஏதாவது ஒன்றாவது அதில் இருக்கும். அதற்காகத்தான்" என்று மறு பாதி விடையைக் கூறி ஆளுக்குப் பாதியாக மார்க் பெற்றனர்.

அடுத்து சாலமன், "நம் பிரதமர் ராஜினாமாச் செய்தால், ராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதியிடம் கொடுக்க வேண்டும். ஜனாதிபதி ராஜினாமாச் செய்தால் கடிதத்தை யாரிடம் கொடுக்க வேண்டும்?" என்று கேட்க, அகனுவும், உஷாவும் விழிக்க, சரியான விடை "உதவி ஜனாதிபதியிடம்" என்ற விடையை சாலமனே சொன்னார்.

அடுத்து உஷா "திருக்குறளை ஆங்கிலத்

பொது அறிவுப் பக்கங்கள்

தில் மொழிபெயர்த்தவர் யார்?" என்று கேட்டதற்கு முகமது ஷரீஃப் "ஜி.யூ. போப்" என்று கரெக்டாய்ச் சொல்லிவிட்டார்.

மு. ஷரீஃப் கேட்ட அடுத்த கேள்வி: "கூவம் ஆறு எங்கே உற்பத்தி ஆகிறது?"

"இந்தக் கேள்வியை மெட்ராஸில் 'குவிஸ் நடத்தும்போது கேட்டிருக்கலாம்" என்று கமெண்ட் வந்தது, பார்வையாளர் பகுதியிலிருந்து. ஆனால், சீதாலட்சுமி மாணவிகளிடமிருந்து பதில் வரவில்லை.

சரியான விடை: செங்கல்பட்டு மாவட்டத்தில் 'கூவம்' என்ற ஊரிலிருந்து.

அடுத்து அகனு கேட்டார்: முதன் முதலில் தமிழில் வெளிவந்த கலர்ப்படம் எது?

சாலமன் சட்டென்று சொன்னார்: "அலிபாபாவும் நாற்பது திருடர்களும்."

பதில் சொன்ன சூட்டிலேயே அவர் கேள்வி: இப்போது இந்தியாவின் தலைநகரம் டெல்லி. இதற்கு முன்னால்?

உஷா சட்டென்று "கல்கத்தா" என்று சரியாய்ச் சொல்லி விட்டார். கொஞ்சம் மெதுவாகவே அடுத்த கேள்வியைக் கேட்டார்:

அவர் கேட்ட கேள்வி: மிக மெதுவாய்ப் போனால் "ஆமை வேகம்" என்று ஆமையை



※ ஜமால் முகமது மாணவர்களுக்கு சீதாலக்ஷ்மி ராமசாமி கல்லூரி முதல்வர் மிஸ் காமாட்சி பரிசளிக்கிறார்.

ஒப்பிடுவது நமது வழக்கம். ஆமையின் உண்மையான வேகம் என்ன?

அவர்தான் சரியான விடையையும் சொல்ல வேண்டியிருந்தது. மணிக்கு 27 மீட்டர்.

சாலமன் கேட்டார்: 2100ம் வருடம் லீப் வருடமா? காரணம் என்ன?

சரியான விடை: இல்லை. சாதாரணமாய் ஆண்டை நாலால் வகுத்து, மீதி வராதிருந்தால் அது லீப் வருடம். ஆனால் நூற்றாண்டில் முடியும் வருடங்கள் லீப் வருடங்களாயிருக்க, அவை 4க்குப் பதில் 400 ஆல் மீதியின்றி வகுபட வேண்டும்.

அகனுவின் அடுத்த கேள்வி:

'பஞ்சாங்கம்' என்ற பெயர் எப்படி வந்தது?

''நாள் நட்சத்திரம், திதி... இன்னும் இரண்டு ஆக இந்த ஐந்தையும் சொல்லுவதால் 'பஞ்சாங்கம்' என்று பெயர் வந்தது. என்று முகம்மது ஷரீப் சொல்ல, அவர் விட்ட இரண்டை அகனு 'யோகம்' கரணம்' என்று சொல்லி ஆளுக்குப் பாதி மார்க் பெற்றனர்.

இப்போது கேள்வி கேட்டவர் சாலமன்.

கேள்வி: 'இன்குலாப்' என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார்?''

அகனு, உஷா இருவருக்கும் தெரியாததால் சரியான விடையை ''கே. ஏ. அப்பாஸ்'' என்று சாலமனே சொல்லி விட்டார்.

உஷாவின் அடுத்த கேள்வி: இந்த வருடம் 'பத்ம விபூஷண்' விருது யாருக்குக் கிடைத்தது?''

நிச்சயமாக எனக்கு இல்லை'' — பார்வையாளர் பகுதியிலிருந்து வந்த பதில்!

ஜமால் முகமது மாணவர்களுக்குப் பதில் தெரியவில்லை.

சரியான விடை: இந்த வருடம் 'பத்ம விபூஷண்' விருது யாருக்கும் தரப்படவில்லை.

அடுத்து சாலமன் கேட்டார்:

சென்னையில் 1975ம் வருடம் டி. வி. ஒளிபரப்பு ஆரம்பித்தது தெரிந்த விஷயம். முதன் முதலில் இந்தியாவில் எங்கே எப்போது டி. வி. ஒளிபரப்பு தொடங்கியது என்று சொல்ல முடியுமா?

சரியான விடை: டெல்லியில் 1959ம் வருடம், செப்டம்பர் மாதத்தில்.

அடுத்து அகனு கேட்ட கேள்வி: ''ராஜ்ஜியம் இல்லாத ராஜா' என்று வேடிக்கையாய்க் குறிப்பிடுவது வழக்கம். ஆனால் உண்மையிலேயே நம் நாட்டில் ஒரு கவர்னர் இருக்கிறார். ஆனால் எந்த மாநிலமும் அவருக்குக் கீழே இல்லை. அவர் யார்?

முகமது ஷரீப், ''ரிசர்வ் பாங்க் கவர்னர் எனச் சரியாய்ச் சொன்னார்.

அதிக மார்க் எடுத்த ஜமால் முகமது மாணவர்களுக்கு சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி முதல்வர் மிஸ் காமாட்சி ரொக்கப் பரிசையும் புத்தகப் பரிசையும் கொடுத்தார். சீதாலட்சுமி கல்லூரி மாணவியர் புத்தகப் பரிசைப் பெற்றனர்.

ஏற்பாடு,தொகுப்பு: **எஸ். சந்திரமௌலி**
ப்ரியன்

புகைப்படம்: **திருச்சி சம்பத்**


அளவிலும் அருஞ்சுவையிலும் மிகப்பெரிய ஸ்டார்.
நியூட்ரின்
SuperStar
தின்னத்தின்ன
திகட்டாத மிட்டாய்!
nutrine

வழுக்கைத் தலையில் முடி வளருமா?

காந்தி, நேரு, மாவோ, சர்ச்சில், லெனின் பிக்காசோ போன்ற பெரிய தலைவர்களின் தலை வழுக்கையாகத்தான் இருந்திருக்கிறது.

வழுக்கைத் தலைக்காரர்கள் பலர் தலையில் முடி வளர்வதற்காகக் குதிரையின் சிறுநீர், பறவையின் மலம் என்று தங்கள் கைக்குக் கிடைத்ததையெல்லாம் தலையில் தேய்த்துக் கொண்டதாகப் புத்தகங்களில் எழுதப்பட்டுள்ளது.

மருத்துவர்கள், வழுக்கையாவதை அலோபீசியா (Alopecia) என்று கூறுவார்கள். சில மருத்துவர்கள் வழுக்கையாவது வம்சாவளியாக வரும் குறைபாடு என்று கருதுகிறார்கள். மற்றும் சிலர் வழுக்கையாவதற்கும் ஆண்மைக்கும் சம்பந்தம் இருப்பதாகக் கூறுகின்றனர். வழுக்கையாவதற்கு முக்கியமான காரணம் நமதுடலில் சுரக்கும் ஆண்ட்ரோஜன் என்னும் ஹார்மோன்தான். வாலிபப் பருவத்தில் முகத்தில் தாடி, மீசை வளர்வதற்கும், குரல் மாற்றம் ஏற்படுவதற்கும் காரணமாகச் சுரக்கப்படும் ஒரு ரசாயனப் பொருள். ஆனால், ஆண்ட்ரோஜன் சுரப்பு நிறைய இருந்தால், தலையில் உள்ள மயிர்க் கால்களில் துவாரத்தை அடைத்து விடுகிறது. இதனால்தான் அலிகளும், ஆண்மையை ஏதாவது காரணத்தால் இழந்தவர்களும் (இவர்களுக்கு ஆண்ட்ரோஜன் சுரப்பதில்லை) வழுக்கை ஆவதில்லை. ஆனால் தலையில் முடி வேண்டும் என்பதற்காக யாரும் ஆண்மை இழக்கத் தயாராக இருக்க மாட்டார்கள்.

குதிரை வால் போல் கட்டிக் கொண்டு போகிற பெண்மணிகளுக்கும் சீக்கிரம் வழுக்கை ஆவதற்கான வாய்ப்பு உண்டு என்று ஒரு செய்தி கூறுகிறது. மயிரை இழுத்துக் கட்டுவதால் மயிர்க் கால்களிலிருந்து மயிர்கள் சீக்கிரம் உதிர்ந்துவிடும் என்று கருதுகிறார்கள்.

ஒருவரிடமிருந்து முடிகளை வேருடன் நீக்கி வேறொருவரின் வழுக்கைத் தலையில் பொருத்துவது என்பது மருத்துவத்தில் சாத்தியமாக உள்ளது. கொஞ்ச நாட்கள் கழித்து இம்முடிகள் உதிர்ந்து விடுகின்றன. ஆனால், உதிர்ந்த முடிகளின் வேர்கள் உயிர்பெற்றுப் புதிய முடிகள் வளர ஆரம்பிக்கின்றன. முடி பூரணமாக வளர ஐந்து வாரம் வரை தேவைப்படுகிறது. இம்மாதிரியான முடி மாற்றம் இப்போதைக்குப் பணக்காரர்களுக்குத்தான் சாத்தியம்.




ரத்த அழுத்தத்துக்காகக் கொடுக்கப்பட்டு வரும் மினாக்ஸிடல் (Minoxidal) என்ற மருந்து முடி வளர்ச்சியை அதிகரிக்கும் சக்தியுள்ளதாக இருக்கிறது என்று அண்மையில் கண்டு பிடித்து இருக்கின்றனர். ஆனால் இம் மருந்து தலை முடி மட்டும் வளர உதவுவதில்லை; முடிகள் தேவையில்லாத இடங்களிலும் முடி அதிகமாக வளரச் செய்கிறது.

எல்லாவற்றையும் உத்தேசிக்கும்போது வழுக்கைத் தலையர்கள் வழுக்கையோடு வாழவும் அதுபற்றி வெட்கப்படுவதற்குப் பதில் அதுவே ஓர் அழகு என்று நினைக்கப் பழகுவதும் நல்லது. சதா சிரித்த முகத்துடன் இருந்தால் வழுக்கைத் தலையர்கள் கூட அழகாகவே தோன்றுவார்கள்.





—டாக்டர் ஹேமா கிருஷ்ணன்



● டில்லியில் நடப்பது எல்லாம் சிறந்தது என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் டில்லி வீட்டு வசதி வாரியம் செய்துள்ள ஒரு ஏற்பாட்டைத் தமிழ்நாட்டு வாரியமும் பின்பற்றினால், பல நடுத்தரக் குடும்பஸ் தர்கள் வாழ்த்துவார்கள்.

டில்லியில் எப்படி வீடு ஒதுக்கீடு செய் கிறார்கள்?

ஒரு குறிப்பிட்ட சமயம் வீடு தேவைப் படுகிறவர்கள் தங்கள் பெயரைப் பணம்கட்டி ரிஜிஸ்டர் பண்ணிக் கொள்ள வேண்டும். (எல். ஐ. ஜி., எம். ஐ. ஜி. என்ற பிரிவின்படி தொகையும் வேறுபடும்) இந்தத் தொகைக்கு வட்டியும் உண்டு. வீடு ஒதுக்கப்படும்போது முதலையும் வட்டியையும் கணக்கிட்டு வரவில் வைத்துக் கொள்வார்கள்.

குறிப்பிட்ட அளவு வீடுகள் தயாரானதும் வாரியமே, கம்ப்யூட்டர் மூலம் ரிஜிஸ்டர் நம்பர்களை லாட்டரி மாதிரி தேர்ந்து எடுக்கும். அந்த நம்பர்காரர்களுக்கு ஒரு வீடு ஒதுக் கப்பட்ட விவரம் தெரிவிக்கப்படும். வீடு உள்ள பகுதி, அமைப்பு முதலியன பிடித் தால் எடுத்துக் கொள்ளலாம். இல்லாவிடில் வேண்டாம் என்று கூறிவிடலாம். இதற்காக ஒருவிதக் கட்டணமோ (அபராதமோ) கிடை யாது. மறுபடியும் அடுத்த குலுக்கலில் அவர்களின் நம்பர் இடம் பெறும். இதனால் பொதுமக்களுக்குப் பல சௌகரியங்கள் உண்டு. ஒவ்வொரு தடவையும் வீட்டுக்கு மனு வாங்கி அனுப்ப வேண்டும் என்ற அவ சியமில்லை. பேப்பர், விளம்பரச் செலவு, பொதுமக்களின் அலைச்சல் ஆகியவை மிச் சம்! ஒவ்வொரு தடவையும் விளம்பரம் வரும்போது கண் குத்திப் பாம்பு மாதிரி பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய கவலை இல்லை.

டில்லியில், 1979ல் கடைசியாக ரிஜிஸ் டிரேஷன் திறக்கப்பட்டபோது ஒரு லட் சத்து எழுபத்து ஐயாயிரம் பேர் பதிவு செய்து கொண்டனர். இந்த லிஸ்ட் முடிவு பெற்ற பிறகுதான் அடுத்த ரிஜிஸ்டிரேஷன் துவங்குவார்கள். ஆகவே நேற்று முளைத்த திடீர் பணக்காரரோ, வேறு யாரோ வீடு வாங்க முடியாது, வாரியத்திடமிருந்து.

சென்னையில் அப்படி இல்லை. பல தடவை மனு செய்து ஏமாந்தவர்கள் இருப்பார்கள். முதல் தடவையிலேயே குடும்பத்தில் உள்ள அத்தனை நபர்களின் பெயரிலும் செலவைப் பொருட்படுத்தாமல் மனு செய்து வீடு வாங்கியவர்கள் இருப்பார்கள். தமிழக வீட்டு வசதி வாரியம் கவனிக்குமா என்ற வழக்கமான பல்லவியுடன் இதை முடிக்கி றேன்.

- பி. எஸ். ஆர்.

இந்தப் படத்தைப் பார்த்த உடனேயே உங்களுக்கு ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வரவேண்டுமே? வரவில்லையா? அப்படி யானால் கடைசிப்பக்கத்துக்குச்செல்லவும்!



அத்தியாயம் 19

"ஒ_ம் பேரு என்ன?"

"கௌசல்யா."

கௌசல்யா காலையில் குளித்து விட்டு மஞ்சள் பூசிப் பெரிய பொட்டு இட்டு தலைக்கு எண்ணெய் தடவிக் கொண்டை முடித்து, துவைத்த ரவிக்கையும் புடவையு மாய்ப் பளிச்சென்று இருந்தாள்.

"நேத்து ராத்திரி நீதானே யாரையோ இட்டினே?"

"பாத்தீங்களாம்மா. நா கவனிக்கலியே"

"யாரைத் திட்டினே எதுக்கு?"

"இது என்னடா இது. இவரு பொண்ணு மடக்கி மடக்கிப் போலீக மாதிரி கேக்குது. இவரே அம்மாவ இட்டாரனியா?"

"அழைச்சுண்டு வரலாம். நீ தெருவிலே சண்டை போடறது பார்த்தா அவனுக்கு ஜுரம் வந்துடும். அதான் விட்டுட்டு வந்துட்டேன்."

"ஆமா, தெரு பூராவும் சொல்லியாச்சு ஏன் சண்டைய நீதான் பாக்கி. இதான் மூத்ததா?"

"ரெண்டாவது."

"ரெண்டாவதா? மூத்தது கட்டிக் குடுத்திட்டியா?"

"இன்னும் இல்லே."

"இது சமஞ்சே வருஷமாயிட்டிருக்கும் போல. ஏன் இன்னும் மூத்தது கட்டிக் குடுக்கல."

"பகவான் கண் தொறக்கலே."

"இதுவே பாக்க கண்ணுன்னு இருக்கு. மூத்தது பாத்து பகவான் கண் தொறந்தா தானே கட்டிக்கிறேன்னுடுவான். ஆண்டாளம்மாளைக் கட்டிக்கிட்டா மாதிரி."

காயத்ரி கலகலவென்று சிரித்தாள்.

எவ்வளவு அழகு இவள் பேச்சில். இந்துக்களுக்கு மதம் எவ்வளவு ஒட்டுதலாய் இருக்கிறது. ஆண்டாள் திருக் கல்யாணம் எவ்வளவு அழகாய் உதாரணம் காட்டப் படுகிறது.

"ஐய்ய... என்ன சிரிக்கிற..."

"ஒன்னுமில்லே."

"சொல்லேன். நான் பேசினது தப்பா?"

"தப்பில்லே. இன்னித் தேதிக்கு அப்படி யாராவது கடவுள் மாதிரி வந்து கேட்டா எங்கக்கா சரின்னுடுவா."

"பொட்டப் புள்ளேங்க என்னம்மா பண்ணும். உன்ன மாதிரி வேலைக்குன்னு வந்துட்டா இதச் சொல்லியே ஒத்திப் போடலாம். வூட்டோட இருக்கற பொண்ணு தான் கல்யாணம் கட்டிக்கப் பறக்கும்."

ச்சே... மார்வலஸ். உண்மைகள் எவ்வளவு சுலபம் அறிந்து கொள்வதற்கு. எவ்வளவு கூர்மையாய் இது சொல்லப் படுகிறது.

"அக்காவுக்குக் கல்யாணம் கட்டத் தான் நான் வேலைக்கு வந்திருக்கேன்."

"செய் ராசாத்தி நல்லாச் செய். ஆறு கேடு கெட்ட ஊரு இது. சாக்ரதையா இரும்மா."

"உனக்குக் கல்யாணம் ஆயிடுச்சா கௌசல்யா."

கௌசல்யா முகம் இருள சட்டென்று நின்றாள். ஒரு கணம் செல்லத்தம்பி மனசில் நிழலாடினான்.

"நான் என்னம்மா அப்பன் ஆயி இல்லாதவ. தாய் குட்டி போட்டதும் கண் தொறக்குறதுக்குள்ளறப் பிரிச்சுக் குடுத்தா மாதிரி தன்னித் தொட்டுத் தெருவுல ஒதுங்கிட்டேன். எவன் கட்டிக்குவான். கட்டேன்னு கையடிச்சவனையும் நேத்து போலீசு புடிச்சுக்கிட்டுப் போயிடுச்சு."

"அதான் திட்டினியா? எதுக்கு உன் ஆளைப் பிடிச்சுண்டு போறாங்க."

"அவன் சுதந்திரப் பறவை. அதிகம் கௌறாதே." நாணு ஐயர் ஆங்கிலத்தில் எச்சரித்தார்.

"பாரு உங்கப்பாரு என்னவோ இங்கிலீஷ்ல திட்டறாரு என்னே."

"உன்னைச் சொல்லலே. என்னுண்டை பேசறாரு. நேரம் ஆயிடுச்சுன்னு."

"ஆமா. இளம்பு. நான் பெருக்கிட்டுப் போயிடறேன்." குடிசையைப் பெருக்கி வெளி வராந்தாவையும் பெருக்கிக் குப்பையை வாரினாள்.

"காயத்ரிம்மா..." மெல்லக் கெஞ்சினாள்.

"என்ன கௌசல்யா."

"உங்கிட்டப் பழம் பொடவை ஏதுனாச்சும் இருந்திச்சுன்னுக் கொடேன். நான் கட்டிக்கிறதுக்கு."

காயத்ரி சிரித்தாள்.

"என்னு சிரிக்கிறே கம்மானுச்சம்."

"எங்கிட்ட இருக்கிற எல்லாப் புடவையுமே பழசுதான். எதன்னு குடுக்கிறது. நான் முதல் மாசம் சம்பளம் வாங்கிப் புதுப் புடவை எடுத்ததும் உனக்கு ஒரு பழசு தரேன்."

கௌசல்யாவுக்கு இந்த உண்மையான பேச்சு பச்சென்று ஒட்டிக் கொண்டது.

"வெள்ளையாப் பேசறம்மா நீ மறைப்பில்லாம."

"மறைக்கறதுக்கு இதில என்ன இருக்கு கௌசல்யா. உனக்கும் எனக்கும் என்ன

திருடர்: "இந்தச் சாமியார் வாழ்க்கையிலே கவலேயா? அப்படி என்ன சாமி கவலே உங்களுக்கு?"

பண்டாரம்: "விபூதி விலே ஏறிடுச்சே என்ற கவலேதான்!"

—பெ, கலாசாமி





பாலகுமாரன்

வித்தியாசம். நீ பெருக்குற. நான் டைப் அடிக்கப் போறேன். அவ்வளவுதான்.''

''எந்தாயீ! உனக்கு நெறையப் புதுசு புதுசாப் புடவை கிடைக்கணும். நீ உடுத்தின பழசு நான் உடுத்தணும்.''

''நிறைய புதுசு கெடைச்சா உனக்குப் பழசா தருவேன். புதுசே குடுத்துடுவேன்.''

''என் ராசாத்தி. பேச்சா இது. வெல்லப் பாகு. சரமா நெஞ்சிலேர்ந்து வருது. நல்லா இரும்மா. நான் வரேன். உனக்கு எதுன்னு வேணும்னு என்னைக் கூப்பிடு. அன்னண்ட எட்டிப் பாத்தா பாம்பே கோட்டவுன் தெரியும். அங்கதான் இருப்பேன். குரல் குடு போதும். வந்துடுவேன்.''

கௌசல்யாகாயத்ரிக்குச்சென்னையில்முதல் ஸ்நேகிதியானாள். படியிறங்கிப் போனாள்.

கௌசல்யா படியிறங்கிப் போனதும் காயத்ரி அந்த மூன்றும் மாடியிலிருந்து சென்னையைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். அந்த எட்டரை மணி காலையில் கடற்காற்று சுருட்டிச் சுருட்டி முகத்தில் அடித்தது. கட்டிடங்கள் பொதுக் கூட்டத்துக்கு வந்து உட்கார்ந்திருக்கிற ஜனங்கள் மாதிரி நெருக்கமாய் அதே சமயம் ஒழுங்கற்று இருந்தன. ஒவ்வொரு கட்டிடமும் ஒவ்வொரு விதமாய் மனித முகம் போல் தனித் தனி ரூபமாய்த் தெரிந்தன. இடது பக்கம் நீண்ட கூட்ஸ் வண்டிகள். தெருவை அடைத்துக் கொண்டு லாரிகள், மஞ்சள் முதுகு டாக்ஸிகள்.

''ரொம்பக் கச்சடாவா இருக்கும் போலிருக்கே பட்டணம்.''

''இந்தப் பக்கம் கொஞ்சம் கச்சடாதான். தெற்குப் பக்கம் அடையாறு. இந்திரா நகர் ஒகோன்னு இருக்கு. ஒரு நாள் காத்திலால் கூட்டிண்டு போறான். இது ஹார்பர். கிட்டக்க ரயிலடி. கொஞ்ச தூரம் போனால் பெரிய மார்க்கெட் கொத்தவால் சாவடின்னு. மெட்ராஸுக்கு வேணுங்கற சாமான் அத்தனையும் அங்கதான் வரது போறது.''

அட்டைப் படத்தில் : சாந்தினி
வண்ணப்படம் :
ஓம். சுப்பிரமணியம்



''பீச்சுக்குப் போனியா?''

''இல்லேம்மா. ஒரு தடவை அந்த வழியாக வந்தேன். வேணு இன்னிக்குச் சாயங்காலம் போலாம். உனக்குத் தேவையானது எல்லாம் கொண்டு வந்திருக்கிறயா? ஏதும் வாங்கணுமா?''

''ஏதுவும் வேண்டாம்ப்பா. இன்னிக்கே சேர்ந்துடவா?''

''இரண்டு நாள் கழிச்சுச் சேரு. இன்னிக்கு உனக்கு எட்டாம் நட்சத்திரம். யோகம் சரியில்லே.''

''இரண்டு நாள்சும்மா இருக்கணுமேப்பா''

''படுத்துத் தூங்கு. கௌசல்யாவைக் கூட்டிண்டு சினிமாவுக்குப் போ. ஏதாவது படி.''

''ஹிண்டு இருக்கா. வாங்கறியா?''

''காத்திலால் வாங்கறான். வடிவேல் கடையிலேர்ந்து தினத்தந்தி எடுத்துண்டு வரட்டுமா? படிக்கிறயா?''

''அம்மாவுக்குக் கடிதாசி எழுதணும் வந்து சேர்ந்தேன்னு. நீ எழுதிடறயா?''

நாணு ஐயர் தலையசைத்தார்.

காயத்ரி மறுபடி பக்கம் பக்கமாய் மேல் மாடியைச் சுற்றி வந்தாள். காற்றில் பறக்கும் தலையைக் கோதிக் கொண்டாள்.

''காயத்ரி.''

''சொல்லுப்பா.''

''வேலைக்குப் போறுமேன்னு கஷ்டமா இருக்கா.''

''இல்லியே. ஏன் கேக்கறே?''

''நிழலா வீட்டோட வளர்ந்துட்டே. மத்தியானம் படுத்துத் தூங்கி, அரட்டை அடிச்சுன்னு பொழுது போயிருக்கும். சட்டுன்னு வேலை, ஆபீசுனு கஷ்டமா யிருக்கும்.''

''எனக்கு வேலைக்குப் போறது பிடிச்சிருக்குப்பா.''

''பொண் கொழந்தேளுக்குச் சிரமமான காலங்கள் உண்டு.''

''லோ வாட். வீட்டுக்கு உபயோகமா இருக்கணும். அதுவும் முக்கியம் இல்லியா?''

''பையனாப் பொறந்திருந்தா போடா வேலைக்குன்னு தொறத்தலாம். மூத்தது பொண்ணாப் பொறந்ததுக்குப் பையனா இருந்திருக்கலாம். பொம்மனாட்டி பொழைப்பு கஷ்டமாயிடுத்து இப்ப.''

''பையன் பொழப்பும்தான் கஷ்டம். அதுவும் முதல் பையன்னாக் கஷ்டம்தான். படிச்ச உடனே வேலைக்குப் போய் அப்பாவுக்குக் காசு குடுத்து அக்கா கல்யாணக் கடனடைச்சு, தங்கைக்கு வரன் பார்த்து கடன் வாங்கி, அதை அடைச்சு நிமிர்ந்து... நல்ல வேளை... நம்ம வீட்ல பையன் இல்லே. இருந்தா அவனை ரொம்பப் படுத்தியிருப்பே.''

''இது கடமைதானேம்மா. உடம்பொறந்தான் செய்ய வேணுமா?''

''நோ. எனக்கு ஒருத்தனுக்கு இரண்டு அண்ணா இருந்தாலும் நான் வேலைக்குப் போவேன். அண்ணா புடவை வாங்கித் தருவான். சீப்பு, சோப்பு வாங்கித் தருவான். கல்யாணம் பண்ணி வைப்பான்னு நிக்கக்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி'83



அமரர் கல்கி அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் நடக்கும் இந்தச் சிறு கதைப் போட்டியில் வழக்கம்போல் இந்த ஆண்டும் எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

முதல் பரிசு	**ரூ. 1000**
இரண்டாவது பரிசு	**ரூ. 500**
மூன்றும் பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ. 250 விதம்)	**ரூ. 500**

ஆக மொத்தம் ரூ. 2000 பரிசுகளாக வழங்கப்பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 100 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

* கதைகள் சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழி தேவை.

* அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தரவேண்டும்.

* நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

* கதைகளை அனுப்பக் கடைசி தேதி ஜூன் 15.

* உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.

* பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.

* கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

* எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.

* சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

* போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 7 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.

ஆசிரியர், கல்கி, சென்னை - 600 032

கூடாது.''

''பின்னே ஒரு பையன் சம்பாதிக்க என்ன தான் செய்யறது?''

''அவன் பெண்டாட்டிக்கு வாங்கித் தரட்டும். அவனுக்குப் பிடிச்ச பொண்ணுக்குச் சோப்பு சீப்பு எல்லாம் குடுக்கட்டும்.''

''இப்ப மூத்தவ கல்யாணச் சுமை உன் தலைல விடிஞ்சுருத்தே.''

''அது சரி. படிப்பு வரலே. அதனால சுமையாப் படறது. அவ படிச்சிருந்தா அவ கல்யாணம் அவளோட சுமைன்னு தள்ளியிருக்கலாம்.''

''அப்ப உன் கல்யாணம் உன் சுமையா?''

''நிச்சயமா. அது என் ரெஸ்பான்ஸிபிலிட்டி இல்லையா?''

நாணு ஐயர் முகத்தைச் சொறிந்து கொண்டார். ''நான் நாணு காக சேர்த்து வச்சிருந்தா எப்படின்னு கேட்பேன். சேர்க்கலையே.''

''என் ஈகோ உதைக்கிறதோ? நீ குபேரனா இருந்தாக்கூட இதுதான் என் பதில்.''

''காயத்ரி, புஸ்தகப் படிப்பு ரொம்ப கரெக்ட்னு சொல்ல முடியாது. ப்ராக்டிகலாகவும் பாக்கணும்.''

''பயம்மா இருக்கா நான் பேசறது.''

''வேகமா இருக்கியோன்னு தோணறது.''

''ஒருவிதத்தில யெஸ். உள்ள ரொம்ப வேகம் தென்படறது. மடமடன்னு வேணும் வேண்டாம், சரி, தப்புன்னு நிறையப் பிரியறது. ஆனா நான் ரொம்ப ஜாக்ரதையா இருக்கேன். எந்த முடிவோடயும் சேராம மலங்க மலங்க நிக்கறேன்.''

''அற்புதமாப்பேசறே காயத்ரி.கொழந்தை கொழந்தைன்னு நினைச்சுண்டிருக்கேன். டக்குன்னு மாறிப் போயிருக்க. எப்போ மாறினேன்னு தெரியல்லே.''

''உன்னை ரொம்பக் குளோசா கவனிச்சேம்ப்பா. உன் வாழ்க்கை, நீ எழுதின கதை எல்லாம் கவனமா படிச்சேன். நீ சீட்டாடித் தோத்துப் போனது, அம்மா சங்கிலியைத் தெரியாம எடுத்துண்டு போய் அடகு வச்சு மறுபடி ஆடினது, வருத்தப் படாம, வெக்கப்படாம அதைக் கதையா எழுதினது... அப்பத்தான் தெரிஞ்சுது... அடடா... வெட்கப்பட எதுவும் இல்லேன்னு.''

''என்ன தப்பு வேணாப் பண்ணலாங்கற மாதிரி நான் எழுதலேம்மா.''

''இல்லே. நானும் அப்படிப் புரிஞ்சுக்கலே. வெட்கப்படற மாதிரி செய்யக் கூடாது. பண்ணிட்டு வெட்கப்படக் கூடாது. நீ பண்ணின தப்பு உன் கதையைப் படிச்சப்புறம் எனக்கு உதவியா இருக்கே. என்னைக் காபந்து பண்றதே.''

''குட்.''

''இப்ப நீ கவலரமா இருக்கியாப்பா. என்னடா வயசுப் பொண்ணைக் கூட்டிண்டு வந்துட்டமே பட்டணத்துக்குன்னு. என்னைப் பத்தின கவலையும் கூடச் சேர்ந்திருக்கா.''

''கவலை இருக்கு. இல்லேன்னு சொல்ல முடியாது.. ராஜ கோபாலன்னு அவன் இட்டப் பாரத்தைப் போடறேன்.''

''என்னைப் பத்திக் கவலை வேண்டாம்ப்பா. நான் எந்தச் சிக்கல்லேயும் மாட்டிக்க மாட்டேன். மாட்டிண்டா மறைக்க மாட்டேன். அப்பா ஹெல்ப் பண்ணுன்னு கேட்பேன்.''

''செய்யறேண்டா தாயி. எது கேட்டாலும் செய்யறேன். நீ கேட்காமலேயே செய்யறேன்.''

''ஒரு கேள்வி. புஸ்தகப் படிப்பு, ப்ராக்டிகல் லைஃப்ன்னு ரெண்டாப் பிரிச்சியே. எப்படி? அறிவு அனுபவம் இல்லையா? அனுபவ அறிவுதான் முக்கியமா?''

''புஸ்தக அறிவுக்கும் அனுபவத்துக்கும் ஒரு இழை வித்தியாசம் உண்டு. என் அனுபவம் புஸ்தகமா உனக்கு அனுபவமாகணும்னு நீ ரொம்பத் தெளிவா இருக்கணும். குழந்தை மாதிரி அபிப்பிராயமே இல்லாம இருக்கணும். குழந்தையா இருக்கிறது கஷ்டம்.''

''உதாரணத்தோட சொல்லு.''

''இந்த மாடியிலேருந்து கண்ணுக்குத் தெரியற அத்தனைக்கும் உனக்குப் பேர் தெரியும். இல்லையா? பேரே தெரியாத போனா எப்படிப் பாப்பே? இது அழகான வீடு. அது அவலமான குடிசை அப்படின்னு பிரிக்காம எக்ஸ்ட்ரா டைட்டில் குடுக்காம ஒரு அதிசயமாப் பாக்க மாட்டியா? அந்தப் பார்வை சகலத்திலயும் வருமா? வரணும். வரது உசத்தி. வரது சுலபமில்லே.''

''கொஞ்சம் புரியுதுப்பா.''

''அம்மாடி – கஷ்டமான சிந்தனைகளுக்குப் போக ஆரம்பிச்சுட்டே. மனசுத் தெளிவு வரலாம். தெளிவுக்கு ஆரம்பம் உணர்ச்சி வசப்படற நிலைமை. இது சிரமமான இடம். யாராவது அழுதா நமக்கு அழுகை வர இடம். யாராவது கொடுமை பண்ணினா கோபம் பொத்துண்டு வர இடம். இங்கே தெறிப் போயிட்டா உரம் வராது காயத்ரி.''

''புரியுதுப்பா.'' (தொடரும்)



''என் கதை உங்க பத்திரிகையிலே வரணும்னு ஆசிரியருக்கு உருக்கமா ஒரு கடிதம் எழுதினேன்.''

''வந்துச்சா?''

''ஓ!பத்திரிகையின் உள்ளே வைத்துத் திருப்பி அனுப்பி இருந்தாங்க!''

—அ. வசந்தா

தன்னம்பிக்கை பெற சில வழிகள்



உங்கள் உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ள நீங்கள் பயந்தவராக இருக்கலாம். ஆனால் பயிற்சியின் மூலம் நீங்கள் உரிமையைப் பெறப் போராடக் கற்றுக்கொள்ளலாம். ஒரு பயிற்சிக்கு "ரெக்கார்டு விழுந்த ரிகார்டு முறை" என்று பெயர். அதாவது ரேல் விழுந்த ரிக்கார்டு மாதிரி சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்வது பின்வரும் உரையாடல்களைக் கவனியுங்கள்:

வாடிக்கையாளர்: இன்று காலை நான் உங்க கடையில் ஐந்து பண்டங்கள் வாங்கினேன். வீட்டுக்குப் போய்ப் பார்த்தால் நாலுதான் இருந்தது. ஐந்தாவது பொருள் —ஒரு பவுடர் டப்பா கொடுங்க.

கடைக்காரர்: சரியாப் பார்த்தீங்களா? (குற்ற உணர்வைத் தோற்றுவித்தல்).

வாடிக்கையாளர்: சரியாப் பார்த்தேன். எனக்குப் பவுடர் டப்பா வேணும்.

கடைக்காரர்: என்னால என்ன செய்ய முடியும்னு தோணலியே (பொறுப்பைத் தட்டிக் கழித்தல்)

வாடிக்கையாளர்: உங்க நிலை எனக்குப் புரியுது. ஆனா எனக்குப் பவுடர் டப்பா வேணும்.

கடைக்காரர்: பில் இருக்கா?

வாடிக்கைக்காரர்: இதோ பில். எனக்குப் பவுடர் டப்பா வேணும்.

கடைக்காரர்: யாரு உங்களுக்கு சப்ளை கொடுத்தது? கடைப் பையனை அடையாளம் காட்ட முடியுமா?

வாடிக்கையாளர்: பார்சல் இங்கேதான் கட்டப்பட்டது. பணம் உங்க கிட்டத்தான் கொடுத்தேன். நீங்க எனக்கு உதவணும். எனக்குப் பவுடர் டப்பா வேணும்.

கடைக்காரர்: இப்படி வழி மறிச்சு நின்னு எப்படி ஸார்? வியாபாரம் பாதிக்குதுல்ல? இப்படி ஒதுங்கி ஒக்காருங்க. இவங்களைக் கவனிச்சுட்டு வரேன்.

வாடிக்கையாளர்: எனக்கு ஒக்காந்திருக்க நேரமில்லே. எனக்கு பவுடர் டப்பா வேணும்.

கடைக்காரர்: உங்க மாதிரி ஆளுங்க கிட்ட மாட்டிக்கிட்டு படா பேஜாராப் போச்சு. கொஞ்சம் கூட மத்தவங்க விஷயத்திலே பொறுப்பே இல்லையே! கடை முதலாளி வருவாரு. அவர் கிட்டப் பேசிக்கங்க.

வாடிக்கையாளர்: நான் பணத்தை இங்கே தான் கொடுத்தேன். எனக்குப் பவுடர்டப்பா வேணும்.

கடைக்காரர்: டேய், சின்னப் பையா! இவர்கிட்ட பவுடர் டப்பா கொடுத்து அனுப்புப்பா (கோபத்துடன்)

அவர் கோபப்பட்டால் நமக்கென்ன? நமது ரேல் விழுந்த ரிக்கார்ட் பேச்சு பலன் தந்தது. இதன் மூலம் கடைக்காரரின் திசை திருப்பும் முயற்சி, நம்மீதே பழி சுமத்தும் முயற்சி, தட்டிக் கழிக்கும் முயற்சி முதலியவற்றை முறியடித்தோம்.

இப்படிப் பல உத்திகளை விஞ்ஞான ரீதியாகக் கணித்து வைத்துள்ளனர். நமது உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளாது போனால் பிறர் நம்மை ஆட்டிப் படைக்க அனுமதித்தவர்களாவோம்.

எந்தப் பிரச்னையிடமிருந்தும் பயந்து ஓடாதீர்கள். எந்தப் பிரச்னையோடும் யுத்தம் புரியவும் தயாராகாதீர்கள். பிரச்னைகளைக் காது கொடுத்துக் கேளுங்கள். முடிவில் உறுதியாக இருந்து வெற்றி பெறுவீர்கள்.

இன்னொரு பயிற்சி: (சின்னச் சின்ன விஷயங்களுக்குக் கூடக் கவலைப்படும் - பயப்படும் நிலைமையை மாற்றித் தன்னம்பிக்கை பெற உதவும்):

(1) ஒரு பெரிய கடைக்குப் போய் ஒன்றும் வாங்காமல் ஒரு ரூபாய் நோட்டுக்குச் சில்லறை கேளுங்கள்.

(2) மனைவியுடன் புடவைக் கடைக்குப் போய் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு எதுவும் வாங்காமல் வரவும் (நிஜமாகவே வாங்க வேண்டுமெனில் இன்னொரு தடவை போகவும்)

(3) டிபன் டயத்தில் ஹோட்டலுக்குள் நுழைந்து தண்ணீர் மட்டும் கேட்டுக் குடித்துவிட்டு நன்றி கூறி வெளியேறவும்.

(4) தெருவோடு போகிற மூவரை நிறுத்தி வழி கேட்கவும்.

(5) பிடிக்கவில்லையானால் திருப்பித் தந்து விடுவேன் என்ற கண்டிஷனுடன் ஒரு பொருளை வாங்கி வந்து பிடித்திருந்தாலும் திருப்பித் தந்துவிடவும்.

(6) 'இல்லை', 'முடியாது' என்று யாரிடமாவது கூற வேண்டுமெனில் அதைக் கூறிப் பழகவும்.

இந்தப் பயிற்சியெல்லாம் தெளிவான குரலில் அச்சமின்றி கண்களை எதிர்கொண்டுப்பார்த்துக் குற்ற உணர்வு இன்றிச் செய்யவும். நீங்கள் யாருடன் பேசுகிறீர்களோ அவர் உங்களுடன் ஒத்துழைக்காமல் போகலாம். அது பற்றிக் கவலைப் படக் கூடாது. உங்கள் முயற்சியைக் கைவிடவும் கூடாது.

ஆதாரம்: டாக்டர் எஸ். மனோகர் டேவிட் எழுதி கோவை ஜெய்னின் வெளியிட்டுள்ள வழிகாட்டி நூல்: K(NO)W WITH A SMILE

குடிசையில் சொர்ணம் யோசித்தபடி புரண்டு படுத்தாள்.

பிரபல நட்சத்திரத்தின் வீட்டில், வீடு பெருக்கும் வேலை. வாசனையான பினைலில்; வழுவழுப்பான துணி; சொர்ணம் உடுத்தி யிருக்கும் புடவையை விட மொஸைக் தரையைத் துடைக்கும் துணி கவர்ச்சியாக, கலராக இருக்கும்!

சொர்ணம் புரண்டு புரண்டு படுத்தாள் கிழிந்த பாய் உடம்பைக் குத்தியது. எங்கும் இருட்டு. குடிசையில் கரிப் பானை அல்லது கரிபிடித்த ஈயப் பாத் திரங்கள் சூழ்ந்திருந்தன.

அவள் நினைவில் டெலிபோன் அறை; அறையில் பச்சை நிற ரத் தினக் கம்பளம். கம்பளத்தின் அடி யில் நீலக் கல் மோதிரம். அதுவும் இரண்டு நாளாகக் கிடக்கிறது. கேட்பாரற்று அநாதையாகக் கிடக் கிறது. அது தனதாக வேண்டும்.



காலையில் பங்களா பெருக்கும் போது கிடந்தால்? அதை அவள் எடுத்து வரவேண் டும். இரண்டு மூன்று நாளாகக் கிடக்கும் மோதிரத் தைத்தேடுவாரில்லை. தொலைந்த பேச்சும் அங்கு எழவில்லை.

அதை எடுத்து வந்தால் விற்பது சிரமம். எங்காவது ஒருபெட்டைக் குப் போய் அடகு வைத்தால் போச்சு. ஆனவரை ஆகட்டும். கொஞ்சம் துணிச்சல் பிறந்தது. திரும்பிப்பார்த்தாள் சொர்ணம். மற் றொரு கிழிசல் பாயில் சுருண்டு கிடக் கிறது அவள் பெற்று வளர்த்த பாலகன். டைபாயிட் காய்ச்சல்!

மனம் பங்களாவுக்குள் நுழைந்தது. அவ ளுக்கு இரண்டு நேரம் ஏ ஒன் காப்பி. ஒரு நேரம் மட்டன் கறியுடன் உணவு. காப்பியை ஒரு பாட்டிலில் நிரப்பிக் கொண்டு குடி சைக்கு இப்போதெல்லாம் வருவாள்.

பையன் வைரமுத்து ''அம்மா காப்பி'' என்பான். வைத்தியச் செலவு அவள்கையைக் கடித்தது. பத்து ரூபாய் மருந்து மாத்தி ரைக்கு ஒரு மாத வட்டி இரண்டு ரூபாய் தண்டம் அழ வேண்டும்.

குடிசைக்கு வாடகை. குப்பத்தின் தலை வருக்கு மாதக் காணிக்கை. ஆப்பக்காரக் கிழவிக்குப் புட்டு வாங்கிய கணக் கில் அதுவேறு பாக்கி. எல்லாம் கூட்டிப் பார்த்தாள் சொர்ணம்; மனக் கணக்கில் கூட்ட வரவில்லை,

எவ்வளவு பெரிய பங் களாவை எத்தனை சுலப மாகக். கூட்டிப் பெருக்கிய கை. அக்கையின் விரல் கூட்டிப் பார்த் தது. அவளுக்கு அந்த மாதம் தேவை அறுபது ரூபாய்! சம்பளம் வரப்போவது ஐம்பது ரூபாய்!

டீக்கடை சம்முகம் கணக்கில் பாக்கி. வைத்தால் அசிங்கமாகத் திட்டுவான். குடிசை வாடகை பாக்கி. அதுவும் நிறுத்தி வைக்க முடியாது. வட்டியோடு 12 ரூபாய் கொடுத்தே ஆகவேண்டும். எதையும் ஏமாற் றவோ ஒத்தி வைக்கவோ முடியாது.

''அம்மா பொரி வேணும், நெல்லுப் பொரி... அரிசிப் பொரி இது கொஞ்சம் அது கொஞ்சம் வாங்கிவா. வாய் கசக்குது.''

''ஆகட்டும் கண்ணு... நீ தூங்கு.''

பையனுக்குக் காய்ச்சல். தூக்கம் இல்லை. சொர்ணத்துக்குக் கடன். தூக்கம் இல்லை.

சொர்ணத்தின் மனம் உறுதி செய்து கொண்டு விட்டது. பொழுது விடிந்தால் பொருள் கைக்கு வரும். கடன் தீரும். தேவைக்கு அதிகமாகப் பணம் கையில் மிச்சம் இருக்கும். மிரட்டினால் வேலையை விட்டு நின்றுவிடலாம்! இந்தத் திட்டம் உறுதியாகி விட்டது.

சொர்ணம் ஆறு மணிக்குள் பங்களாவிற்குள் போக வேண்டும்.

''அம்மோவ்! நீ வேலைக்குப் போகலே... இன்னிக்கு லீவா?''

மகன் அடிக்கடி குரல் கொடுத்தான். சொர்ணம் பரபரப்பாக எழுந்தாள். பல்லை விளக்கினாள். சோற்றுப் பானையில் தண்ணீர் இருந்தது. குடித்தாள்.

கையில் கண்ணாடி புட்டியை எடுத்துக் கொண்டாள். பங்களாவின் காப்பி ருசி உள்ளது. மணம் உள்ளது. வைரமுத்துவின் வயிறு குளிரும். நடந்தாள். விரைவாக வந்தாள் பங்களாவுக்கு.

''வாம்மே! ராத்திரி என்ன ரொம்ப வேலையோ! தூக்கம் இல்லையோ?''

வாட்சுமேன் வாய் இனிப்பது. இன்டல் பேசியது.

''ஓம் புருசன் போனக்க வெளியூர் போயிருப்பதாக் கேள்வி!''

வாட்ச்மேன் கதவைத் திறந்தான். சொர்ணம் உள்ளே போனபோது அங்கே சில கார்கள் ஏற்கனவே நின்று கொண்டிருந்தன. நட்சத்திரம் கால்ஷீட் கேட்க வந்திருக்கும் தயாரிப்பாளர்கள், வாடிக்கையாளர்கள் காத்திருந்தார்கள்.

அங்கே மானேஜர் நின்று கொண்டிருந்தார்.

''வேலைக்கு வர்ற நேரமா?''

குரலில் சிம்மத்தின் கர்ஜனை இருந்தது.



சுட்ட சங்கு

சஜி சுப்பிரமணியம்

''பையனுக்கு டைபாயிட் காய்ச்சல் ஸாரு...''

''ஓ! ஆமா... எப்படி இருக்குது?'' என்று சாந்தமாகக் கேட்டார்.

''பரவாயில்லே. மருந்து வாங்கத்தான் கஸ்டம்.''

மானேஜர் மேலே பேசவில்லை. பேசினால் முன் பணத்துக்கு அடிப்போடுவாள். ''போ போ. அம்மா எழுந்து வர்றதுக்குள்ளே கண்ணாடி போல் பங்களா சுத்தமாகணும் ஜல்தி'' என்று விரட்டினார்.

தன் தரித்திரம், தனக்குள்ள கடன், தன் நோயாளிக் குழந்தை அத்தனையும் மறந்தாள். யந்திரமானாள்.

சிறந்த ஜோக்:
பரிசு ரூ. 250/-

இந்த இதழில் இடம் பெற்றுள்ள நகைச்சுவைத் துணுக்குகளில் மிகச் சிறந்ததென உங்களுக்குத் தோன்றுவது எது? அதைக் கீழே உள்ள கூப்பனில் முழுமையாக எழுதி இந்த அரைப் பக்கத்தைக் கத்தரித்து எடுத்து அனுப்புங்கள். காத்தாடி ராமமூர்த்தி தேர்ந்தெடுத்துள்ள சிறந்த ஜோக் எதுவோ அதையே நீங்களும் தேர்ந்தெடுத்தால் உங்களுக்குப் பாதி பரிசு: மீதிப் பரிசு ஜோக் எழுதியவருக்கு!

ஒருவருக்கு மேல் சரியான விடை எழுதினால் பரிசு ரூ. 125 பகிர்ந்து அளிக்கப்படும். ஐந்து பேருக்கு மேல் சரியான விடை எழுதினால் குலுக்கல் முறையில் பரிசுக்குரிய ஐந்து பேர் தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

உறையின் மேல் ''சிறந்த ஜோக்'' என்று குறிப்பிடவும். முடிவு தேதி 6-6-83.

இந்த வாரத்தில் சிறந்த ஜோக் என நான் தேர்ந்தெடுப்பது:

என் பெயர்:

விலாசம்:

கையெழுத்து:

சமையல்காரன் கொஞ்சலாக ''என்ன சொர்ணம்... காப்பி வேணுமா?'' என்றான்.

''வைச்சு வைய்யா, எம் புள்ளைக்கு வேணும்.''

அவள் பம்பரமாக இரட்டைப் பெருக்குமாறு எடுத்து இரு கையாலும் பெருக்கத் தொடங்கினாள். அறை அறையாகப் பெருக்கினாள். எங்கும் வாசனை பினாயில் போட்டுத் துடைத்தாள். முன் பக்கம் நட்சத்திரத்தின் அறை. அதற்கு அடுத்தது போன் இருக்கும் அறை. அந்த அறையில் விரித்த ரத்னக் கம்பளத்தில் அவள் கண் சென்றது. பச்சை நிறக் கம்பளத்தின் அடியிலே அதே நீலக் கல் மோதிரம் ஆடாமல் கிடந்தது. அசையாமல் இருக்கிறது.

''எடு எடு எடு. விரைவில் எடு'' என்று கல்லின் ஒளி கண் சிமிட்டியது. சுற்று முற்றும் எவரும் இல்லை. சொர்ணம் வேலை செய்வதை யாரும் கண்காணிக்க மாட்டார்கள்.

அவள் உள்ளத்தில் தவிப்பு. படபடப்பு. இதயம் திக் திக்... நல்ல நேரம். வாய்ப்பை நழுவ விடக் கூடாது.

அவளை அறியாமல் உடல் வியர்த்தது. மீண்டும் அறைக்குள். அறைக்கு வெளியில் பார்வையைச் செலுத்தினாள். எங்கும் நிசப்தம். ஓசை எதுவும் இல்லை.

பச்சைக் கம்பளத்தின் அடியில் கிடந்த நீலக்கல் மோதிரம் அவள் மடியில் ஏறியது. புடவையை இரு முறை இடுப்பில் சுருட்டிக் கொண்டாள். இனி விழாது! எத்தனை நாளானாலும் அது விழாது.

யாரோ வருவது போல் சப்தம். நட்சத்திரமே வந்து விட்டாள். சொர்ணம் உடல் நடுங்கியது.

''சொர்ணம் உன் பையனுக்கு டைபாயிடு எப்படி இருக்கிறது?''

''இது மூணாவது வாரம். தேவலையம்மா.''

''கவனிச்சுக்கோ. மருந்து கொடு. டைபாயிடு திரும்பி வந்தா உயிருக்கே ஆபத்து. தெரியுமா?''

தட்டுத் தடுமாறி ''கவனிக்கிறேம்மா'' என்றாள். பையன் வைரமுத்து தலையில் கை வைத்தபோது அனல் பறந்ததை விட அவள் உடம்பில் இப்போது அனல் கொதித்தது. அடி மடியில் செருகி இருந்த நீலக்கல் மோதிரம் இருந்த இடுப்பில் தீப்பிடித்தது போன்ற எரிச்சலை உணர்ந்தாள்.

அந்த அறையை விட்டு அவளால் அடுத்த அறைக்குள் போக முடியவில்லை.

மானேஜர் வந்து நட்சத்திரத்திற்கு ''குட் மார்னிங் மேடம்'' என்றார். நட்சத்திரம் பேசவில்லை.

சொர்ணத்தைப் பார்த்து ''போயேன். பேய் பிடித்த மாதிரி இங்கு ஏன் நிற்கிறாய்?'' என்று கடிந்தார். அவர் மானேஜர். கடியலாம். சொற்களைக் கடிக்கலாம்.

''போ....றே....ன்....'' அவள் கால்கள் குழலாடின. சமாளித்துக் கொண்டு அடுத்த அறைக்குள் வந்தாள். அங்கே படத் தயாரிப்பாளர்கள் பலர் உட்கார்ந்து இருந்தார்கள். அத்தனை பேரும் செல்வத்தில்

மிதப்பவர்கள், டாலர்கம் மோதிரங்கள், கைக்கடிகாரங்கள்... கழுத்துச் சங்கிலிகள் போட்டு இருந்தார்கள். ஒருவர் கையில் நீலக்கல் மோதிரம் ஒன்றைப் பார்த்துவிட்டாள்.

பட அதிபர் போடும் மோதிரம் என்ன விலை இருக்கும்? ஆயிரம் பதினாயிரம் இருக்குமோ? அவளது ஏழைமை மனத்திற்குள் பணத்தின் அளவும் மதிப்பும் பிடிபடவில்லை. அச்சமயம் அங்கிருந்த ஒருவர், ''இப்படி வாம்மா... நீதானே சொர்ணம்?'' என்றார்.

அவள் காதில் சுபத்தைக் காய்ச்சி ஊற்றிய மாதிரி இருந்தது. சொர்ணம்... திருடி சொர்ணம் என்று சொல்கிறாரா?

நடுங்கியபடி ''ஆமாங்க... நான்....'' என்று பேச முடியாது திக்கினாள்.

''இந்தப் பக்கம் வா.''

யந்திரமாகச் சென்றாள். ஆனாலும் தன்னைப் போலீசில் பிடித்துக் கொடுத்து விடுவார் என்ற பயம் உந்தித் தள்ளியது. ''இந்தப் பெட்டிக்குள் ஒன்னரை லட்சம் இருக்கிறது. இதைக் கொண்டு போய் அம்மாவிடம் கொடுத்துவிடு. மானேஜர் உன்னிடம் கொடுக்கும்படி சற்று முன்பு சொன்னார்.''

அவள் காதில் எதுவும் விழவில்லை. 'அம்மா மானேஜர்' இரண்டே சொற்கள் கேட்டன.

அந்தப் பணம் கறுப்புப்பணம் அதனைக் கைப்பெட்டியில் கொடுத்து அனுப்பினார். இதற்கு முன்பும் பெட்டிகள் வாங்கியிருக்கிறாள். அதில் இருக்கும் தொகை பற்றி எவரும் சொல்லவில்லை.

கை நடுங்கியது. கொண்டு போய் நட்சத்திரத்தின் முன் வைத்தாள். நட்சத்திரம் அதனை வாங்கியபோது சொர்ணம் உடம்பில் அனல் தெறித்தது.

''உனக்கு உடம்பு சரியில்லையா?''

''ஆமாங்க... ஜுரம்...''

''ரெஸ்ட் எடுத்துக்கோ.... வீட்டுக்குப் போய்... டாக்டரைப் பாரு.''

''ஆகட்டுமுங்க.''

அறையை விட்டு, ஒன்னரை லட்சம் கறுப்புப் பணப் பெட்டியைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தாள். சுற்று முற்றும் பார்த்தாள். அடிவயிற்றில் அனல் ஜ்வாலை. நீலக்கல் மோதிரத்தை எடுத்தாள். கை பதறியது. டங் என்று தரையில் விழுந்தது. அவள் இதயமே நிற்பது போல் பிரமை. ரத்னக் கம்பளத்தைத் தூக்கி அடியிலே தள்ளி விட்டாள். பச்சைக் கம்பளம் மீண்டும் பதுக்கிக் கொண்டது.

யாரோ வரும் சப்தம்! மானேஜர் வந்தார்.


''ஏற்கனவே பெருக்கிய அறையில் உனக்கு என்ன வேலை?.... என்ன வேலை?....''

''ஒன்னுமில்லே.''

''புரொடியூஸர் கொடுத்த பெட்டியை நீ என்ன செய்தாய்?''

''அ...ம்...மா...விடம்....''

''கொடுத்திட்டியா?'' தலையை அசைத்தாள். பேச முடியவில்லை.



ஏப்ரல் 29-ம் தேதியன்று இரவு வானில் ஒரு விசித்திரத்தைக் காண நேர்ந்தது.

இரவு சுமார் 10.40 மணி அளவில் சந்திரன் வியாழ கிரகத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக மறைக்க ஆரம்பித்தது. உதயமான சமயம் இரண்டுக்கும் சுமார் (பார்வையளவில்) இரண்டடி இடைவெளி இருக்க 10.40க்குப் பிறகு சந்திரன் வியாழனைக் கொஞ்சம்கொஞ்சமாக மறைக்க ஆரம்பித்தது. மீண்டும் இரவு 11.40க்குத்தான் வியாழன் தெரிய ஆரம்பித்தது.

அற்புதமான காட்சி.

இதைக் காண முடியவில்லையே என்று வருத்தப்படுபவர்களுக்கு ஒரு சந்தோஷமான செய்தி:

இதேபோல் மீண்டும் மே 27ந் தேதி இரவு வானில் பார்க்கலாம். இதையும் தவறவிட்டால் உங்கள் கொள்ளுப் பேரனின் கொள்ளுப் பேரன் காலத்தில்தான் அடுத்த வாய்ப்பு!

—கே. ராஜகோபாலன்

''போய் வேலையைப் பார்'' என்றார் மானேஜர்.

இப்பொழுது அவள் நடையில் தள்ளாட்டம் இல்லை. உடம்பில் சூடு இல்லை. வியர்வை கூட அறவே நின்று விட்டது.

கண்ணாடி பாட்டிலை எடுத்துக் கொண்டு காப்பி வாங்க சமையல்கட்டுக்குள் போனாள். அவள் பழைய சொர்ணம்.

கடன்காரி சொர்ணம். நோயாளி மகனைப் பெற்ற சொர்ணம். பத்து ரூபாய்க்கு இரண்டு ரூபாய் வட்டி கட்ட வேண்டிய குப்பத்து சொர்ணம் அவள்.

மகனுக்காகக்காப்பியை வாங்கிக்கொண்டு போக வேகமாக நடந்தாள்.

அவள் தாய்... அவள் திருடி இல்லை.

அவள் வேலைக்காரி. அவள் கறுப்புப் பணம் வாங்க முடியாதவள்!

தமிழினத் தலைவன் யார்?

○ வெ. வைத்தியநாதன், கங்காதரபுரம்

? விடுமுறையில் ஜாலியாகப் படிக்க ஒரு புத்தகம் சிபாரிசு செய்யுங்களேன்

! கல்கி விடுமுறை மலர்—'83.

○ கே. என். இராமகிருஷ்ணன், கரூர்.

? எதிர்க் கட்சிகளின் உண்மையான ஒற்றுமைக்கு என்னதான் செய்ய வேண்டும்?

! (1) பொருளாதார ரீதியில் நாட்டின் முன்னேற்றத்துக்கு உதவுகிற குறைந்தபட்ச அடிப்படைக் கொள்கை ஒற்றுமை. (2) இதன் அடிப்படையில் குறைந்தபட்ச செயல் திட்டம் (3) சிந்தனையில் அதிகப்பட்ச தேச நலன், குறைந்தபட்ச சுய நலன்.

○ ஆர். ஜார்ஜ், கருங்கல்

? பங்காரப்பாவைக் கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக் கொண்டு போனால்தான் என்னவாம்?

! இடத்தைக் கொடுத்தால் மடத்தையே பிடுங்கிக் கொள்வாரோ என்ற அச்சம் தான். அதுசரி, நீர் கொஞ்சம் சுஜாதாவை அட்ஜஸ்ட் பண்ணிக் கொண்டு போனால் என்னவாம்? 'கணையாழியில் சுஜாதா குறிப்பிட்டது குளச்சல் ஆர் ஜார்ஜா அல்லது கருங்கல் ஆர். ஜார்ஜா?' என்று கேட்டு நூறு தபால் கார்டாவது வந்திருக்கும் போலிருக்கே!

○ ஜி. பாபு, திருச்சி

? இங்கு இருப்பவர்கள் பூலான் தேவியின் சரித்திரத்தைப் படம் எடுக்கிறார்கள். பணம் பண்ணப் பார்க்கிறார்கள். வெளி நாட்டினரோ காந்தி படத்தை எடுத்து அவர் புகழை உலகெங்கும் பரப்புகிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது?

! அங்கே இருப்பவர்களிலும் கொள்ளைக் காரன் படங்களையும் ஆபாசக் குப்பைகளையும் உருவாக்கிப் பணம் பண்ணுகிறவர்கள் பலர். அட்டன்பரோ போன்ற சில லட்சியவாதிகளும் உண்டு. அப்படி இங்கேயும் இருக்கிறார்கள். காந்தி படம் அளவுக்கு இல்லாவிட்டாலும் பாரதி வாழ்க்கையை சர்வதேசப் புகழ் பெறுமளவில் திரைப் படமாகத் தயாரிக்க முடியும். என்ன பாலசந்தர் சார், இன்னுமா தயக்கம்?

○ வாசுகி கெங்கவல்லி

? தனது உறவினர் மீதான ஊழல் புகாரை விசாரிக்க எதிர்க் கட்சி எம். எல். ஏ.க்கள் அடங்கிய குழு ஒன்றைக் கர்நாடக முதல்வர் நியமித்தது குறித்துத் தங்கள் கருத்து என்ன?

! பண்பாட்டின் நிறைகுடமாகத் திகழ்கிறார் ஹெக்டே இவ்விஷயத்தில். இந்த எதிர்க்கட்சி எம். எல். ஏ. குழுவின் தலைவராக இருக்க முடியாதென்று ஏதோ சாக்குப் போக்குக் கூறி மறுத்துவிட்ட அளவில் இ. காங்கிரஸ் தலைவர் வீரப்பா மொய்லி அற்பத்தனத்தின் உறைவிடமாகத் திகழ்கிறார். ஹெக்டே மீது குற்றம் ஏதும் இல்லை என்று கூறிவிட நேருமே என்று அஞ்சி அது பிடிக்காததால் தலைமை ஏற்க மறுப்பது போல் தோன்றுகிறது.

○ எம். பி. இளங்கோ, பி. மேட்டுப்பாளையம்

? கமல் அகில இந்திய சிறப்பு நடிகராகத் தேர்வு செய்யப்பட்டது பற்றி.....

! அகில இந்தியாவுக்கும் சிறப்பு.

○ வி. சௌரிராஜன், ஸ்ரீரங்கம்

? மரபுக் கவிதை முகாமிலிருந்து வைரமுத்துவுக்கு ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பு பற்றி?

! நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் காலத்தைப் புதுமை

கல்கி விடுமுறை மலர் 1983



விடுமுறை மலர் 83

நீங்கள் கேட்டவை — தராசு

யான கருத்துக்கள், சிந்தனைகள் பளிச்சிடும் மரபுக் கவிதைகளை உருவாக்கச் செலவிடலாம். வைரமுத்துவுக்கு அதுதான் சரியான பதிலாக அமைய முடியும்.

○ மு. பாஸ்கர், புதுவை-5

? இந்திரா ஆணையிட்டால் இ. காங்கிரஸ் தலைவராகப் பதவி ஏற்கத் தயார் என்று சிவாஜி கூறுகின்றாரே?

! இப்படி சிவாஜி கூறுவதிலிருந்தே அத்தகைய ஆணையை அம்மையார் பிறப்பிக்க வேண்டும் என்று இவர் எதிர்பார்த்து ஏங்குவது புரிகிறது. பாவம், ஏமாற்றம் பலமாகத்தான் இருந்திருக்கும்.

○ இரா. மு. குமார், திருச்சி.

? சாவிக்கு வாஷிங்டனில் பாராட்டுக் கூட்டம் நடந்ததாமே?

! வாஷிங்டனில் (தமிழர்) பாராட்டு என்பது வாஷிங்டனின் (அமெரிக்கர்) பாராட்டாக மாறும் வகையில் தமிழக எழுத்தாளர் நிலை உயரவேண்டும்.

○ மணிநாதன், புதுதில்லி.

? உண்மையான தமிழினத் தலைவன் யார்?

! உண்மையான தமிழினத் தலைவன் யார் என்பது போன்ற அர்த்தமற்ற சர்ச்சைகளில் மனத்தைச் செலுத்தாமல் தன் கடமையைச் செய்வதில் கண்ணும் கருத்துமாக இருப்பவன்.

○ ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர்

? பஞ்சாப் தலைவலிக்குக் காரணம் அந்நிய சக்திகள் தூண்டுதலே என்ற இந்திராவின் புதிய கண்டுபிடிப்பை முழுவதுமாக ஏற்போம், வியாதிக்கு மருந்து என்ன?

! இந்திராவின் இப்புதிய கண்டுபிடிப்பை அப்படியே ஏற்றுக் கொள்வோமாயின், பிறகு மருந்தாவது மாயமாவது? நேரே, பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டியதுதான் நாம்.

○ கோடை சேகர், புதுக்கோட்டை

? நமது முதல்வர் அடிக்கடி மூகாம்பிகை கோயிலுக்குப் போவதின் மர்மம் என்ன?

! அந்த மர்மம் அவரோடேயே இருக்கலாம்; ஆட்சேபனை இல்லை. ஆனால் மூகாம்பிகை கோயிலுக்குப் போகிற அந்தச் செயலையே மர்மமாக்கும்போதுதான் பலருக்கும் தொல்லை. இங்கே அமைச்சரவைக் கூட்டம், பத்திரிகை நிருபர் கூட்டம் எல்லாவற்றையும் கூட்டிவிட்டு எல்லோரையும் பேந்தப் பேந்த விழிக்க வைத்து விட்டு மூகாம்பிகையைத் தரிசிக்க ரயிலேறிப் போயேவிட்டார் மனுஷன்!

○ த. கோ. குருநாதன், தஞ்சை

? ஒரே நிறுவனத்தின் ஒரு பத்திரிகை 'லாட்டரி சீட்டு சூதாட்டமே; சோம்பேறிக் கும்பலை வளர்க்கிறது' என்கிறது. அதே நிறுவனத்தின் மற்றொரு ஏடு லாட்டரி சீட்டு வாங்க அதிர்ஷ்ட தேதிகள், ரேஸ் நிழூமராலஜி என்றெல்லாம் சூதாட்டம் வளர உதவுகிறது. இப்பத்திரிகை தர்மத்தைப் பற்றி....

! இதென்ன பிரமாதம்? 'பால ஜோதிடர் கருத்து நம் கருத்தல்ல' என்று இதயத்திலும் 'இதயத்தின் கருத்து நம் கருத்தல்ல' என்று என் ஜோதிடத்திலும் ஒவ்வொரு வரி போட்டுவிட்டால் தீர்ந்தது விஷயம்.

○ எம். சிவஞானமுருகன், ஸ்ரீவைகுண்டம் ★

? இ. காங்கிரஸ், அ.தி.மு.க. கூட்டு ஏற்பட்டால் யாருக்குக் கவலையாக இருக்கும்? கலைஞருக்கா? இலக்கியச் செல்வருக்கா?

! கூட்டு ஏற்படும்வரை கலைஞர், இலக்கியச் செல்வர், இந்திரா காந்தி, எம்.ஜி. ஆர். ஆகிய நால்வருக்குமே கவலையாக இருக்கும். கூட்டு ஏற்பட்ட பிறகோ இந்திரா காந்திக்கு மட்டுமே கவலையாக இருக்கும்.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:

எம். சிவஞான முருகன்,
33, சிவன்கோவில் தெரு,
ஸ்ரீவைகுண்டம்-628.601.



பங்காரப்பா



ஹெக்டே



கமல்



டைரக்டர் ஆர். ராமலிங்கத்துடன் ஒரு பேட்டியும் படத்தின் விமரிசனமும்

கோடம்பாக்கம் மேம்பாலத்தின் நிழலில் ஒருசந்து. தண்ணீருக்காகக் காத்திருக்கும் பானைகளைத் தாண்டி னால் ஒரு மாடி போர்ஷன். கதவைத் தட்டினவுடன் திறக்கிற இன்னும் திருமணமாகாத 33வயது இளைஞர். சற்றுக் கவர்ச்சியான மெலிதான தாடி. எளிமையான ராமலிங்கம். அறிமுகம். உரையாடல்.

இனிமை

! "ஏ. வி. திருலோகசந்தரிடம் எனக்கு ஏழு வருட குருகுல வாசம். ஒரு காதல் முக்கோணத்தில் வித்தியாசமான பாத்திரங்களை வைத்து, பார்க்கிறவங்க அடுத்த காட்சியை ஊகிக்க முடியாத சம்பவங்களைக் கோத்து வித்தியாசமா முயற்சி செய்யலாமேன்னு எடுத்த படம் இது. என்னோட முதல் படம்."

இதோ

? சந்திரசேகர், அவ்வளவாய் ஆடியன்ஸுக்கு அறிமுகம் இல்லாத நிஷா, அறிமுகமாகிற பிரசாத். இவர்களை எப்படிப் பாத்திரங்களுக்கு வார்த்தெடுத்தீர்கள்?

! பிரபலமான ஆளைப் போட்டால்தான் பாத்திரத்தை வரவேற்பாங்க என்கிற பயத்தை விட, இந்த ஸப்ஜெக்ட் வால்யூவுக்கு எந்த ஆளைப் போட்டாலும் நல்லாப் பண்ணிடலாம்கிற தைரியத்தில்தான் நிஷாவைச் செலக்ட் பண்ணேன். சந்திரசேகரைப் பொறுத்தவரைக்கும் அருமையான Performance இருக்கும்கிற நம்பிக்கை. அதே நம்பிக்கைலதான் மயிலாப்பூர்ல பூ வித்திட்டிருக்கற குட்டி ராஜாங்கற சின்னப் பையனையும் இந்தப் படத்தில அறிமுகம் செய்தேன்.

? ஒரு பெரிய தென்னந் தோப்பில், தனியாய் நிற்கிற புளியமரம் மாதிரி அனுமந்துவின் அந்தப் பைத்தியக் கார காரெக்டர் எதுக்கு?

! படத்தில் வர எல்லா காரெக்டரும் நடைமுறைல பேசறவங்களா அமைஞ்சிட்டது. எனக்குத் தெரிஞ்ச

●

நிஜம்தான். அருமையான பாத்திரங்கள். எச்சில் கையைத் தொண்டைக்குள் உதறிக்கொள்கிற கஞ்சன் குப்புசாமி. நடத்தை சந்தேகத்தில் ஊருக்கு வெளியே அனுப்பப்பட்ட யாருக்கும் மசியாத துடுக்குக் கண்ணம்மா. அந்தக் கண்ணம்மா தன்கையில் கழியை எடுக்காதவரை துணிச்சலாய் அவள் பின்னால் சுற்றுகிற பிரியாணி பொட்டல சீட்டுக்காரன். சமீப சரித்திரத்தில்கடைசி வரை சினிமாத் திருப்பமில்லாத கதாபாத்திரங்களை இந்த அளவுக்குத் துணிச்சலாய்க் கொடுத்தவர் யாரும் நினைவுக்கு வரவில்லை.

●

கணீர் கணீரென்ற குரலில் தயக்கமில்லாத வசனங்கள் பேசும் சந்திரசேகர் — வெடுக் வெடுக்கென வடு மாங்காய் கடித்தது போல சிதறும் நிஷா. சந்திரசேகரின் கூட்டாளியாய் வரும் அந்தப் பையன் திரைக்கு ஒரு அழுத்தமான அறிமுகம்.

இதோ

●

பைத்தியம் எப்படியெல்லாம் பேசும் என்பது தனக்குத் தெரியும் என்று சொல்கிற மாதிரி அந்த அனுமந்துப் பைத்தியம், வசனங்

தத்துவம், தமிழ்த் திறமையெல்லாம் எப்படியாவது வெளிப்படுத்திடணும்கிற ஆவேசத்தில சேர்த்துட்ட பாத்திரம் அது. கதையோட சம்பந்தப்படுத்த முடியாமப் போனது என்னோட தோல்விதான்.

? டை கட்டி, கோட் சூட் போட்டு வேலைக்கு வர விவசாயி மாதிரி 'இனிமை இதோ இதோ'ங்கற டைட்டில் எப்படி இந்தப் படத்துக்குப் பொருந்தும்?

! முதல்ல 'வானம் பார்த்த பூமி'ன்னுதான் பேர் வச்சேன். முதப் படமே என் ஆன்ட்டி சென்டிமென்டலா வக்கறீங்கன்னு எல்லாரும் சொன்னதால சட்னு இந்தப் பேரை சஜஸ்ட் பண்ணிட்டேன். டைட்டில் பொருந்தலேங்கிறதை ஒத்துக்கறேன்.

? படம் ஆரம்பிக்கிறபோது சந்திரசேகரும் அந்தப் பையனும் ஒவ்வொரு ஊராப் போய் ஏமாத்தறது ரொம்பப் பளிச்னு இருக்கு. ஆறு பாத்திரத்தை அறிமுகப்படுத்தற ஜோர்தான் போல. பின்னால அந்த மாதிரி சீனே வரல்லியே? அப்பறம், பஞ்சாயத்தில கண்ணம்மா பேர்ல பழி சுமத்தறச்சே அவ மௌனமா இருக்கிறதுக்குக் காரணம் புரியலியே.

! கதையோட முக்கியமான போக்குலேர்ந்து ரொம்ப விலகிப் போயிடக் கூடாதேங்கற பயத்தில அதையெல்லாம் அப்படியே விட்டுட்டுப் போறது நல்லதுன்னுபட்டுச்சு. அதெல்லாம் வீக் பாயிண்ட்தான்.

? படம் எடுத்து முடிச்சவுடனே உங்களுக்குத் திருப்தி கெடைச்சதா?

! நூறு சதவீதம் கெடைக்கலே. 75 பர்சென்ட் கிடைச்சதுன்னு சொல்லலாம். அது சரி படத்தைப் பார்த்தீங்களே... நீங்க என்ன நெனைக்கிறீங்க... அதைச் சொல்லுங்க.

களும் கடமுடா கடமுடா என்று உருட்டப்படுவதால் என்ன வசனம் என்று புரியாமலே போவது தான் மிச்சம்.

●

பசுமையான இயற்கைக் காட்சிகள். நல்ல ம்யூஸிக். ட்ரீட்மெண்ட்ல இன்னும் கொஞ்சம் மெருகேற்றி யிருக் கலாம்னும் யதார்த்தமான பாத்திரங்கள். அலுப்பில்லாத சம்பவங்கள். படத்தோட ஒட்டிப்போற, லேசான, இயல்பான நகைச்சுவை. கதை சொல்வதில்கையாளப்படும் புதுமையான உத்தி. அதுவும் படபடன்னு நெஞ்சை அடிச்சுக்க வைக்கிற அந்தப் பிரமாதமான க்ளைமாக்ஸ்...


ரசனையுள்ளவங்களால கண்டிப்பா வரவேற்கப்பட வேண்டிய வித்தியாசமான படம்.

டைரக்டர் ஸார், உங்களுக்கு வளமையான எதிர்காலம் இருக்கு. பெஸ்ட் ஆஃப் லக்!

—ஜெயமன்மதன்

இவையெல்லாம் என்ன?
சென்னை டி.வி. நிலையத்தினர்
இத்தனை விதங்களில்...

தடங்கலுக்கு வருந்துகிறார்கள்!



கார்ட்டூன்கள் உதவி: திரு. நடராஜன்,
தொலைக்காட்சி நிலைய கிராபிக்ஸ் பகுதி
தொகுப்பு: சந்திரமௌலி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road
Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P.S. Mani Editor: K. Rajendran

REGISTERED No. M. 4382
Registered as a Newspaper in Sri Lanka

